REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 17 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
1932 - 2022

வரு. 91 இல. 14 | Tuesday 17, January, 2023 | 20பக்கங்கள் | 50/-






### சமுர்த்தி பயனாளிகள் உட்பட குறைந்த வருமானம் பெறும்

# 20 இலட்சம் குடும்பங்களுக்கு இரு மாதங்களுக்கு 20 கிலோ அரிசி

### ஜனாதிபதி ரணில் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

- 61,600 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு
- ரூ. 8,040. மில்லியன் செலவாகும் என மதிப்பீடு



சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கிணங்க குறைந்த வருமானம் கொண்ட இரண்டு மில்லியன் குடும்பங்களை இலக்காகக் கொண்டு இதற்கான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒரு மாதத்திற்கு 10 கிலோ அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு மேற்படி குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் இந்த செயற்திட்டத்திற்காக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக அரசாங்கம் 61,600 மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்துள்ளது.

இந்த செயற்திட்டத்திற்காக சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் ஆதரவுடன் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களூடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கீழ், அடையாளம் காணப்பட்ட சமுர்த்தி பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஊடாக இது தொடர்பில் மாவட்ட செயலாளர்களின் ஒருங்கிணைப்புடன் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட உள்ளன.

நெல் கொள்வனவுக்கு 6,200 மில்லியன் ரூபா, நெல் உலர்த்துவதற்கு 290 மில்லியன் ரூபா, கதிரடிக்க 590 மில்லியன் ரூபா, பொதிச் செலவுக்கு 200 மில்லியன் ரூபா, நெல் ஆலை உரிமையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக 06

### மின் கட்டண அதிகரிப்பு

## மக்கள் கருத்துக்களை அறிவதற்கு பொது பயன்பாட்டு ஆ.குழு நடவடிக்கை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு மின்சார சபை முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை மேற் கொள்ளப் போவதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க நேற்று முதல் மூன்று வார காலத்திற்கு இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் எந்த ஒரு நபரும் எழுத்து மூலம் தமது கருத்துக்களை சமர்ப்பிக்க முடியும் என்றும் 06

## உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்படமாட்டாது

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட மாட்டாதென விவசாய மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். தனக்கு தெரிந்தவரை 06

### மே 09 வன்முறை வீடுகள் தாக்கப்பட்டமை தொடர்பான சம்பவம்

## ரிட் மனுவை விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் தீர்மானம்

### அமைச்சர்கள் பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட 39 பேர் மனு தாக்கல்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

"மே 09" வன்முறை சம்பவங்களின் போது அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைத்து சேதம் விளைவித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கடந்த மே 09 ஆம் திகதி அரசியல்வாதிகளின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தி தீக்கிரையாக்கிய சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்த நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்தை பிரயோகிக்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மேற்படி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 06



இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு குஜராத் சென்றுள்ளார். அங்கு மாநில முதல்வர் மற்றும் ஆளுநரைச் சந்தித்த அவர் பௌத்த, இந்து வரலாற்றுத் தளங்களுக்கான விஷேட விமான சேவைகளை அரம்பிப்பது குறித்து கலந்துரையாடினார்.

### க.பொ.த. உயர்தரப் பரீட்சை

## கருத்தரங்கு, பிரத்தியேக வகுப்புக்கள் இன்று நள்ளிரவு முதல் தடை



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இன்று (17) நள்ளிரவுடன் மேற்படி பரீட்சை தொடர்பான பிரத்தியேக வகுப்புக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. 06



### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தீர்ப்பு

## பாராளுமன்றில் மைத்திரி விளக்கமளித்து விசேட உரை 03

### புதிய தேசிய பாதுகாப்பு

## சட்டமூலம் அமைச்சரவைக்கு அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படும்



புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டமூலத்தை அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கும் நோக்கில், சட்டமூலம், அமைச்சரவை செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில்புள்ளே மற்றும் 06

## அரச பணியாளர்களுக்கு இரு கட்டங்களாக சம்பளம்

### நிதி நெருக்கடியால் திறைசேரி தீர்மானம்



அரச நிறுவனங்களின் சாதாரண பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அதிகாரிகளுக்கு தனித் தனியாக இருவேறு சந்தர்ப்பங்களில் சம்பளம் வழங்க திறைசேரி தீர்மானித்துள்ளது.

நாட்டின் நிதி நெருக்கடியை கருத்திற்கொண்டு திறைசேரி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், திறைசேரியிலிருந்து பணம் நிதியை விடுவிப்பதற்குத் தேவையான சாதாரண பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அதிகாரிகளின் சம்பளப் பணச் சீட்டுகள் உள்ளிட்ட தகவல்களை சமர்ப்பிக்குமாறு அரசு நிறுவனங்களின் தலைமை 06

### ரூ.75 மில்லியன் சொத்துக்கள் விவகாரம்

## விமல் வீரவன்சவுக்கு எதிராக விசாரணை தொடர்வதா? இல்லையா?

### 28 இல், தீர்மானிக்க மேல் நீதிமன்றம் முடிவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**




பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அமைச்சராக பதவி வகித்த காலத்தில் 75 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் மற்றும் நிதியை முறையற்ற விதத்தில் கையாண்டதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை தொடர்ந்தும் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் (28) வெளியிடப்படுமென கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (16) தெரிவித்துள்ளது.

அந்த வழக்கு நேற்றைய தினம் 06

### தமிழர் அரசியல் தீர்வு காணும் விடயத்தில்

## புதிய கூட்டணியாயினும் ஒன்றாகவே பயணிப்போம்

### தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை தெரிவிப்பு



புதிய கூட்டணிகள் உருவானாலும் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில்,தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுடன் ஒன்றாகவே பயணிப்போமென்ற நம்பிக்கை தனக்குள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற தேசியம் சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பில் இணைந்து பணியாற்றுகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகிய தமிழரசு கட்சி, 06

## மாவனெல்லை இரட்டை கொலை சந்தேக நபர்கள் இருவர் கைது

### கொலை செய்யப்பட்டவரின் மோட்டார் சைக்கிளும் மீட்பு



மாவனெல்ல பிரதேசத்தில் இரு இளைஞர்களைக் கொடூரமாக சித்திரவதை செய்து கொலை செய்து, அவர்களை புதைத்த சம்பவத்துடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் இருவரை கேகாலை குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் குழு கைது செய்துள்ளது.

இவ்விருவரும், மாவனெல்லை மற்றும் வெலிஓயா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிஓயா பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைது 06

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு இலவச அஞ்சல் வசதிகள்

### சுற்றுநிருபம் வெளியீடு

**(ஒலுவில் விசேட நிருபர்)**



உள்ளூராட்சித் தேர்தலுக்கு இலவச அஞ்சல் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பிரதி அஞ்சல் மாஅதிபதி ராஜித கே. ரணசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் சகல மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதிகளுக்கும், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்கள். அஞ்சல் அதிபர்கள் மற்றம் உப அஞ்சல் அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மாவட்ட 06

## தலவாக்கலையில் திடீர் தீ 07 வீடுகள் எரிந்து நாசம்



- பொங்கல் தினத்தில் பெரும் சோகம்
- 12 குடும்பங்கள் வீடுகளை இழந்து நிர்க்கதி

**ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட நிருபர்கள்**

தலவாக்கலை, லோகி தோட்டத்தின் மிடில்டன் பிரிவில் நேற்று முன்தினம் (15) ஏற்பட்ட திடீர் தீயால் 12 அறைகள் உள்ள லயன் குடியிருப்பில் 07 வீடுகள் முழுமையாக தீக்கிரையாதுடன்,ஐந்து வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன. இதனால் 12 06








யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் நேற்று முன்தினம் தேசிய தைப்பொங்கல் விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அதிதியாக பலர் கலந்து கொண்டிருந்த போது பிடிக்கப்பட்ட படங்கள்.





சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் புகையிரத திணைக்களத்தினால் இயக்கப்படும் ‘சீதாவக்க ஒடிஸி’ சிறப்பு ரயில் நேற்று முன் தினம் (15) காலை கொழும்பு கோட்டையில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது. இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குண வர்தன உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டுள் ளதை படத்தில் காணலாம்.







மேல் மாகாணத்தின் இன நல்லிணக்கத்திற்கான பொங்கல் விழா நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் தலைமையில் கொழும்பு பம்ப லபட்டி ஸ்ரீ கதிரேசன் ஆலய முன்றலில் நடைபெற்றது. கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் குளோபல் அசோசியேஸன் அனுச ரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேல் மாகாண பிரதிக் கல்வி பணிப்பாளர் உதயகுமார், தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

படங்கள்: அஷ்ரப் ஏ.சமத்




தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 17 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்களில் போதைப்பொருள் கடத்தல்

## இரண்டு படகுகளுடன் 10 பேர் கைது

## நேற்று கொழும்பு துறைமுகத்துக்கு வருகை



இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வந்ததாக சந்தேகிக்கப்படும் இரண்டு (02) ஆழ்கடல் மீன்பிடிக் படகுகளுடன் பத்து (10) சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மீன்பிடி படகுகள் மற்றும் சந்தேக நபர்கள் நேற்று (16) கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டனர்.

கடந்த ஜனவரி (05) பேருவளை பகுதியில் இலங்கை கடற்படைக் கப்பல் விக்ரம II நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில், கிங்பிஷர் 6 (பதிவு எண். IMULA1610MTR) என்ற ஆழ்கடல் மீன்பிடிப்படகு சோதனையிடப்பட்டது. படகில் 22 பொதிகள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் 23 கிலோ 235 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 05 சந்தேக நபர்களும் படகுடன் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி, IMULA1888MTR மற்றும் பதிவு இலக்கமான IMULA2029 என்ற பதிவெண் கொண்ட Kingfisher8 என்ற பெயருடைய ஆழ்கடல் மீன்பிடிப்படகு இலங்கைக்கு போதைப் பொருள்கடத்திவருவதாகதகவல்கள் கிடைத்தன,

கடந்த 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் இலங்கை கடற்படைக் கப்பலான கஜபாஹூவினால் இப் படகுகள் கைப்பற்றப்பட்டன.. ஆழ்கடலில் படகுகளுக்கு பரிமாறப்பட்ட போதைப்பொருள் கரைக்கு கொண்டு வரப்படவில்லை. கடற்படையினர் உஷார் நிலையில் இருப்பது தெரியவந்துள்ளதையடுத்து, சந்தேக நபர்கள் போதைப் பொருள் அனைத்தையும்

06

# பாட்டலி–, குமார வெல்கம கூட்டாக போட்டியிட முடிவு

## புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து



(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபை தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் முன்னாள் அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் புதிய இலங்கை சுதந்திர கட்சியின் தலைவர் குமார வெல்கம ஆகியோருக்கிடையில் நேற்று இணக்கம் எட்டப்பட்டது. இந்நிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் 43 வது அணியை உருவாக்கியது அரசியல் கட்சியாகவோ அல்லது தேர்தலை இலக்காகக் கொண்டோ அல்ல. எனினும் கடந்த வருடம் நாடு மிக மோசமான வங்குரோத்து நிலையை எதிர்கொண்டதன் பின்னர், எதிர்காலத்தில் புதிய அரசியல் கட்சியாக அது மாற்றம் பெற வேண்டும் எனத் தீர்மானித்தோம்.

06

# நீர் கட்டணத்தை செலுத்த புதிய முறைமை அறிமுகம்

## புதிய வேலைத் திட்டம் இன்று ஆரம்பம்



நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை புதிய முறைமையின் ஊடாக நீர் கட்டணங்களை வழங்கவும் செலுத்தவும் வேலைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இன்று (17) இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் பியால் பத்மநாத குறிப்பிட்டார்.

இயந்திரம் மூலம் மாதாந்த கட்டணத்தை வழங்கவும்

வங்கி அட்டைகள் மூலம் கட்டணத்தை செலுத்தவும் இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத்திட்டம், எதிர்காலத்தில் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# கொவிட் புதிய அலையைத் தவிர்க்க முகக்கவசம் அணியுங்கள் – சுகாதார அமைச்சு

புதிய கொவிட்19 அலையைத் தவிர்க்க முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சரியான சுகாதார ஆலோசனைகளை அனைவரும் பின்பற்றுவது மிகவும் அவசியமென சுகாதார அமைச்சின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சீனா உட்பட பல நாடுகளில் தற்போது கொவிட்19 வேகமாக பரவி வருவதாக அவர் கூறினார். மேலும் பேசிய மருத்துவர் அன்வர் ஹம்தானி,

இலங்கை மக்கள் 02 வருடங்களாக கொவிட்19 தாக்குதலுக்கு உள்ளாகினரென்பதை மறந்து விட்டனர். பொது பயணிகள் பஸ்களில் பலர் முகக்கவசம் அணிவதில்லை. பலர் தொற்றுநீக்கி பயன்படுத்தவும், கைகளைக் கழுவவும், ஒரு மீற்றர் இடைவெளியை கடைப்பிடிக்கவும் மறந்து விட்டனர். இந்நிலையில் மீண்டும் கோவிட்19 பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே நாட்டில் மீண்டும் இந்நோய் பரவாமல் தடுக்க அனைவரும் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்றார்.

# சுதந்திரமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் உதவி கோருகிறது

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை உருவாக்குவதற்கு உதவுமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள், நாட்டின் குடிமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற பங்குதாரர்களை தேசிய தேர்தல் ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

வேட்புமனுக்கள் கோரப்படும் திகதிக்கு முன்னதாகவே தேர்தலை சீர்குலைக்க பல்வேறு தரப்பினர் பல குறிப்பிட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். அந்த சம்பவங்களில் சில அமைச்சர்களின் தேர்தல் தொடர்பில் பொய்யான அறிக்கைகள், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அறிக்கைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில்

06

# உலகப் பொருளாதாரம் துண்டாடப்பட்டுள்ளது

## IMF தெரிவிப்பு

கடந்த பல ஆண்டுகளாக உலகப் பொருளாதாரம் துண்டாடப்படுவதால், ஒவ்வொரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. வளரும் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நிதியம் சுட்டிக்காட்டுகிறது. இதன்படி, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்காலத்தில் பல பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

# தைப் பொங்கல் வாழ்த்தை தமிழில் கூறிய கனேடிய பிரதமர்

## வீடியோ பதிவொன்றை வெளியிட்டுள்ளார்



கனேடிய தமிழ் மக்கள் மற்றும் உலக தமிழ் மக்களுக்கு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தமிழில் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தை பொங்கல் திருநாளன்று கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வாழ்த்து தெரிவித்து, வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், “அனைவருக்கும் வணக்கம்” என்று தொடங்கும் பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ, “இன்று தைப் பொங்கல் திருநாளை கொண்டாடும் கனடாவிலுள்ள தமிழர்கள் மற்றும் உலகம் முழுவதுமுள்ள தமிழ் சமூகங்களுக்கு அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த நான்கு நாட்கள் மகிழ்ச்சி மற்றும் அமைதி நிறைந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தைப் பொங்கல் திருநாள் நண்பர்கள் மற்றும் குடும்பங்கள் இணைந்து கொண்டாடவும், பொங்கலை பகிர்ந்து கொள்ளவும் வித்திடுகிறது” என தெரிவித்த பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ, தமிழில் அனைவருக்கும் “இனிய தைப் பொங்கல் வாழ்த்துகள்” என தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தீர்ப்பு பாராளுமன்றில் இன்று மைத்திரி விளக்கமளிக்கும் விசேட உரை



உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று (17) பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கவுள்ளார்.

இன்று செவ்வாய்கிழமை முதல் (20) வரை பாராளுமன்றம் கூடவுள்ளது.இந்தக் காலப்பகுதியில் அவர் விளக்கமளிப்பாரென தெரிவிக்கப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், அதனை செலுத்தும் அளவுக்கு சொத்து தம்மிடம் இல்லையென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# நன்னடத்தை கருதி 19 சிறைக் கைதிகள் இன்று விடுதலை

## சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சிறைச்சாலைகளில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் நன்னடத்தையை கருத்திற்கொண்டு 19 பேரை இன்று உத்தரவாதத்துடன் விடுதலை செய்ய தீர்மானித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை, பதுளை,அங்குணுகொலபெலஸ்ஸ, வட்டரக்க, அனுராதபுரம், வீரவில, பள்ளேகல ஆகிய சிறைச்சாலைகளில் சிறைத் தண்டனை பெற்று வந்த கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். குற்றத் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் 11வது சரத்தின் படி அமைச்சருக்கு உள்ள அதிகாரத்திற்கு இணங்கவே இவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# அரசு அதிகாரிகள் வேலை செய்யாததால் அரசியல்வாதிகளை குறை கூறும் மக்கள்

## ஏதாவது கூறி தப்பி விடலாமென்று நினைக்க வேண்டாம்



அரச உத்தியோகத்தர்கள் வேலை செய்யாததற்காக பொதுமக்கள் அரசியல்வாதிகளை குற்றம் சுமத்தும் நிலை ஏற்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேச செயலகத்தில் (15) நடைபெற்ற கம்பஹா பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும். நான் எல்லாவற்றிலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறேன். முன்பு போல் தப்பித்து விடலாமென்று நினைக்க வேண்டாம். கடந்த டிசம்பரில், விவசாயச் சங்கங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண கூட்டம் நடத்த வேண்டுமென கூறப்பட்டது. அது இன்னும் செய்யப்படவில்லை. இது அதிகாரிகளின் பலவீனமாகும்.

பொதுவாக ஒரு கிராம சேவைப் பிரிவில் எட்டு அரசு ஊழியர்கள் உள்ளனர். ஒருவர் குறைந்தபட்சம் 40,000 ரூபா சம்பளம் பெறுவாராயின், கிராம சேவை பிரிவில் அவர்களின் சேவைக்காக மாதாந்தம் 3,20,000 ரூபா வழங்கப்படும். பொதுவாக,

06



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

அறம் சிறப்பையும் அளிக்கும்: செல்வத்தையும் அளிக்கும்: ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு யாது?.

# வடக்கில் காணி விடுவிப்பதில் நம்பிக்கைதரும் நகர்வுகள்

இந்து மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக விளங்கும் தைப்பொங்கல் பண்டிகையின் தேசிய விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இம்முறை யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெற்றுள்ளது. தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் தைப்பொங்கல் தேசிய விழா அண்மைக் காலத்தில் நடாத்தப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும். இந்த நிலையில் இத்தேசிய விழா அனேகரது அவதானத்தை ஈர்த்த ஒன்றாக விளங்கியது.

அதேநேரம், இத்தேசிய விழாவின் நிமித்தம் யாழ் குடா நாட்டுக்கு ஜனாதிபதி மேற்கொண்ட விஜயமும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி வடபகுதிக்கான இவ்விஜயத்தின் போது, வடக்கு மக்களின் காணி விடுவிப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். அது வடபகுதியில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். நாட்டில் சுமார் மூன்று தசாப்த காலம் நிலவிய யுத்தம் 2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து தம் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் கோரி வருகின்றனர். அதற்கேற்ப பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் காணிகளில் பொதுமக்களின் காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

யுத்த காலத்தின் போது வட பகுதியைப் பாதுகாப்பதற்காக 30 ஆயிரம் ஏக்கர்களுக்கும் மேற்பட்ட காணிகளைப் பாதுகாப்பு படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். என்றாலும் யுத்தம் முடிவுற்ற பின்னர், தம் கட்டுப்பாட்டின் கீழிருந்த காணிகளைக் கட்டம் கட்டமாக விடுவித்து வந்த நிலையில் தற்போது 3000 ஏக்கர்கள் காணி தான் படையினர் வசம் எஞ்சியுள்ளது. அதிலும் ஒரு பகுதியை விடுவிக்க பாதுகாப்பு படையினர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இதனை தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றும் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட வடக்கு மக்களின் காணி விடுவிப்பு குறித்த கூட்டமொன்று யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வடக்கு விஜயம் செய்த ஜனாதிபதி இக்கூட்டத்திலும் கலந்து கொண்டுள்ளார். அச்சமயம், 'வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளில் விடுவிக்கக் கூடிய காணிகள் குறித்து ஒரு வார காலத்தில் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதோடு, 'மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டுளளார்.

ஜனாதிபதியின் இந்த பணிப்புரையும் காணி விடுவிப்பு தொடர்பிலான நடவடிக்கைகளும் வட பகுதி மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தன. காணி விடுவிப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கை தெரிவித்து மக்கள் வரவேற்றுள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது முதல் மக்களின் கோரிக்கைக்கு அமைய பெரும்பகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் ஒரு பகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. அக்காணிகளின் உரிமையாளர்களும் தம் காணிகளை விடுவிக்குமாறு கோரி வருகின்றனர். இவ்வாறான நிலையில் ஜனாதிபதியின் இந்நடவடிககைகள் அம்மக்கள் மத்தியிலும் நிச்சயம் நம்பிக்கையை ஏற்படுத்தவே செய்யும்.

அதேநேரம் காணி விடுவிப்பு குறித்த இக்கலந்துரையாடலின் போது, பலாலி காணி விடுவிப்பு குறித்த விடயம் கலந்துரையாடலுக்கு வந்த சமயம், 'மக்கள் விவசாயம் செய்யக் காணிகளை விடுவிங்கள்' என்று குறிப்பிட்டுள்ளதும், விடுவிக்கக்கூடிய காணிகள் குறித்து ஒரு வார காலத்திற்குள் அறிக்கை கோரி இருப்பதும், மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தி இருப்பதும் வடக்கில் மக்களின் காணிகளை விடுவிப்பதில் ஜனாதிபதி கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. தற்போதைய சூழலில் அம்மக்களின் காணிகளை விடுவிப்பதன் ஊடாக அந்த விவசாய மக்களின் வாழ்வாதார வருமானம் அதிகரிப்பதோடு பொருளாதார மேம்பாட்டுக்கும் அது பக்க பலமாக அமையும்.

வடக்கு மக்களின் காணி விடுவிப்பு விடயத்தில் ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளை நாட்டில் அமைதி சமாதானத்தை விரும்பும் மக்களும் வரவேற்கக் கூடியவர்களாகவே உள்ளனர். ஆகவே ஜனாதிபதியின் இவ்வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டின் சுபீட்சத்திற்கும் இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப அளிக்கும் பங்களிப்பாகவும் அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# அனைத்து மக்களும் ஒன்றாக வாழும் நாட்டிற்காக சமூக நீதிக்கான ஆணைக்குழு உருவாக்கப்படும்

## "அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துவோம்" யாழ். தேசிய தைப்பொங்கல் விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

அனைத்து மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்து அனைவரும் ஒன்றிணைந்து வாழும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக சமூக நீதிக்கான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் துர்கா மண்டபத்தில் நேற்று முன்தினம் (15) பிற்பகல் இடம்



பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் கலாசார முறைப்படி ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட ஜனாதிபதிக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதோடு வண்ணமயமான தமிழ் கலாச்சார நிகழ்ச்சிகளும் இதன் போது அரங்கேற்றப்பட்டன.

இவ்வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், சகல இன மக்களும் ஒன்றிணைந்து வாழும் நாட்டைக் கட்டியெழுப்பி பொருளாதார சுபீட்சத்தை அடைந்த நாடொன்றை உருவாக்கும் நோக்குடன் 75 வருடங்களுக்கு முன்னர் டி.எஸ். சேனாநாயக்க ஏற்படுத்திய இலங்கை எனும் தனித்துவத்தை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கை பெப்ரவரி மாதம் நாட்டுக்கு வெளியிடும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அடுத்த வாரம் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் கூறினார்.

காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக



உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் துரிதப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். தைப்பொங்கல் என்பது தேசிய விழாவாகும். முற்காலத்தில் எமது நாடு விவசாய நாடாக இருந்தது. நெல் அறுவடை கிடைத்த போது அதனை கடவுளுக்குப் படைத்தோம்.

இவ்வைபவத்தில் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றிய இராமநாதன் அழகியற்கலைப் பீட மாணவர்களை பாராட்டுகிறேன். உயர் தரத்திலான கலை நிகழ்வை அரங்கேற்றப்பட்டது. நாதஸ்வர கச்சேரியும் பாரம்பரிய அடிப்படையில் சிறப்பாக அமைந்தது. அனைவருக்கும் பாராட்டை தெரிவிக்கிறேன். இக்குழுக்கள் உலக மட்டத்திலான போட்டிகளில் பங்கேற்க முடியும். அது தொடர்பில் இலங்கையர்களாக நாம் பெருமை அடைகிறோம்.

காலியில் நடத்தப்படுவதைப் போன்று யாழ்ப்பாணத்திலும் கலை விழாவொன்றை நடத்த தீர்மானித்துள்ளோம். நாமும் இந்தியாவை விட மாற்றமாக புதிய தமிழ் கலாச்சாரமொன்றை உருவாக்கியுள்ளோம். அதனை உலக அளவிற்கு கொண்டு செல்ல வேண்டும். நல்லிணக்கத்தை வலியுறுத்தி கலை நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டன.

எமது நாட்டுக்கு நல்லிணக்கம் அவசியமானது. கடந்த 30 40 வருடங்களுக்கு மேலாக யுத்தம், மோதல்கள். குழப்பங்கள் மற்றும் பிரிவினைவாத, இனவாத வங்குரோத்து அரசியல்களினால் நாடு பிரிந்திருந்தது. நாம் ஒரே நாட்டில் வாழ வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டும். அதற்காக 75 வருடங்களுக்கு முன்னர் டி.எஸ். சேனாநாயக்க உருவாக்கிய தனித்துவமான இலங்கையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

தைப்பொங்கல் விழா மேடையில் பொங்கல் தயார் செய்வதை கண்டேன். நெருப்பின் மேல் பானையை வைத்து தண்ணீர் மற்றும் பால் என்பவற்றை ஊற்றி அரிசி, கருப்பட்டி என்பற்றை இட்டு பொங்கல் தயாரிக்கப்படுகிறது. இந்நெருக்கடியான நிலையில் நாம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிங்கள், பறங்கியர் என அனைவரையும் இட்டு, இலங்கையர் என்ற தனித்துவத்தை உருவாக்குவோம்.

வடக்கில் தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து இவ்விழாவின் பின்னர் ஆராயவுள்ளோம். பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். நாம் மீண்டும் நாட்டை ஒன்றிணைக்கவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் வேண்டும் என்று அவர்களிடம் கோரினேன்.

பாராளுமன்றத்திலுள்ள தமிழ் கட்சி எம்.பிகளுடன் பேசினேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை மீண்டும் சந்திக்கவுள்ளேன். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி பெப்ரவரி மாதம் வெளியிட வேண்டும். அந்நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கிறேன்.

இந்தப் பிரச்சினைகளை ஒதுக்கியோ காலத்தைக் கடத்தியோ தீர்வு காண முடியாது. தீர்வு என்ன என்பதை பாராளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் வெளியிட வேண்டும்.

பல பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம். காணமல் போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் பேசியுள்ளோம். என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிய வேண்டும். அதே போன்று உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவொன்றை உருவாக்க வேண்டும்.

இந்த ஆணைக்குழுவை அமைப்பது குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தின் கருத்தை வினவியிருந்தேன். உண்மையை கண்டறிய நாமும் விரும்புகிறோம். அதன் மூலம் எம்மீதான குற்றச்சாட்டுகளும் நீங்கும் என அவர்கள் தெரிவித்தார்கள். எனவே உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை உருவாக்க எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.



அதேபோன்று பயங்கரவாதத்தைத் தடுக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை கொண்டு வர இருக்கிறோம். வடக்கிற்கு எதிராக பயன்படுத்துவதற்காக இச்சட்டத்தை கொண்டு வரத் தயாராவதாக சிலர் கூறுகின்றனர். நாட்டில் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தவே இதனை அறிமுகப்படுத்த இருக்கிறோம். கடந்த வருடம் இதனை தெற்கிற்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது.

அடுத்து காணிப்பிரச்சினை காணப்படுகிறது. வன்னியில் வனஜீவராசிகள் திணைக்களத்துடன் தொடர்புள்ள காணிப் பிரச்சினை குறித்து ஆராய இருக்கிறோம். அத்தோடு யாழ்ப்பாணத்தில் காணிகளை மீளக் கையளிப்பது குறித்தும் ஆராயப்படும். யுத்த காலத்தில் இப்பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளைப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தற்பொழுது 3000 ஏக்கர் தான் எஞ்சியுள்ளது. அதிலும் மற்றொரு பகுதியை மீள வழங்க இராணுவம் விருப்பம் தெரிவித்துள்ளது. அது குறித்தும் ஆராயப்படும்.

யாழ்ப்பாண ஆயர் கோரியது போன்று, கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்களை மீள நிர்மாணிக்க இருக்கிறோம். 100 வருடங்களுக்கு மேலாகப் பூஜை வழிபாடுகள் நடைபெற்ற ஆலயங்கள் உள்ளன. புதிதாக ஆரம்பித்தவைகளும் இருக்கின்றன.

அடுத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். அது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்சினையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்துமாறு கோருகின்றனர். இதனைக் கலந்துரையாடி செயற்படுத்த உள்ளோம். இவற்றை எதிர்வரும் ஓரிரு வருடங்களில் கட்டம் கட்டமாக முன்னெடுப்போம். வறுமை, பட்டினி, தொழிலின்மை என்பன தமிழ், சிங்கள மக்களுக்கு மட்டுப்படவில்லை. அனைவரும் கஷ்டப்படுகின்றனர். அனைவரும் இணைந்து தான் கரைசேர வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி மேலும் பல பிரச்சினைகள் குறித்தும் ஆராய வேண்டி இருக்கின்றன. மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளையும் பாராளுமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து இரண்டாம் கட்ட பேச்சு நடத்த இருக்கிறோம். மலையகத் தமிழ் மக்களை எமது சமூகத்துக்குள் உள்வாங்கி ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகளை வழங்க வேண்டும். நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் அவர்களை ஒதுக்க முடியாது.

அதன் பின்னர் முஸ்லிம் எம்.பிகள் மற்றும் கட்சித் தலைவர்களை அழைத்து பேச இருக்கிறோம். முஸ்லிம் மக்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவர்களையும் அழைத்து பேச வேண்டியுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமன்றி சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஓரங்கட்டப்பட்ட கிராமங்கள் உள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. குலபேதம், வறுமை காரணமாக ஒதுக்கப்படும் நிலை உள்ளது. கிறிஸ்தவ மக்களுக்கு தமது பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் உள்ளது.

அவை குறித்து ஆராய சமூக நீதிக்கான ஆணைக்குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். இப்பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து இலங்கையர் என்ற தனித்துவத்தை உறுதிப்படுத்துவோம். இவை அனைத்தையும் முன்னெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம்' என்றார்.

இவ்வைபவத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், குலசிங்கம் திலீபன், பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு படைகளின் பணிக்குழாம் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் முப்படை தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பு பிரதானிகள், ஜனாதிபதியின் வடமாகாணத்திற்கான மேலதிகச் செயலாளர் எல். இளங்கோவன், அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## இந்தியாவுக்கான இலங்கை துணை உயர் ஸ்தானிகர்

இலங்கையில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வாழும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழக் முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று இந்தியாவுக்கான இலங்கை துணை உயர் ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் பெப்ரவரிப் மாதத்தில் தொழிற்சந்தை ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இருந்து வருகை தந்த முஸ்லிம் மீடியா போரத்தின் தூதுக்குழு, சென்னையில் உள்ள துணை உயர் ஸ்தானிகர் காரியாலத்திற்கு கடந்த 13 ஆம் திகதி வருகை தந்தனர். அவர்களுக்கு இந்தியாவுக்கான இலங்கை துணை உயர் ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன், அலுவலகத்தில் சிறப்பான வரவேற்பு அளித்தார்.



இச்சந்திப்பின் போது முஸ்லிம் மீடியா போரத்தின் செயல்பாடுகள் குறித்து போரத்தின் முன்னாள் தலைவரான சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் விளக்கி கூறினார். அதனைத் தொடர்ந்து துணை உயர் ஸ்தானிகர் குறிப்பிடுகையில், சென்னையில் உள்ள துணை தூதர் அலுவலகத்தில் தினமும் பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டு இலங்கை தமிழர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம். அது மட்டுமல்லாமல் பல்வேறு முகாமில் உள்ளவர்களை சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது வருகிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு கூட ஆறு பேரை இலங்கைக்கு அனுப்பி வைத்தோம்.

கடந்த பல வருடங்களாக தமிழக முதல்வரை சந்திப்பதில் பல்வேறு தடைகள் காணப்பட்டன. ஆனால் தற்போதய முதலமைச்சரான மு.க. ஸ்டாலினை மிகக் குறுகிய காலத்தில் பல தடவைகள் சந்திக்க முடிந்தது. எம் மக்கள் தமிழ்நாட்டின் சலுகைகளை எவ்வித கஷ்டமும் இன்றி பெற்றுக்கொள்ள இது வழிவகை செய்துள்ளது.

எவ்வாறாயினும் சென்னை துணை உயர் ஸ்தானிகராலயம் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு பிறப்புச் சான்றிதழ் உட்பட அம்மக்களுக்கு இடைக்கிடையே இலவச மருத்துவ முகாம்களையும் ஏற்பாடு செய்து நடாத்தி வருகிறது.

சென்னையில் மாத்திரமன்றி ஏனைய மாநிலங்களிலும் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு இச்சேவை வழங்கப்படுகிறது. இது ஒரு கடினமான பணியாக இருந்தாலும் துணை உயர் ஸ்தானிகர் காரியாலயம் எவ்வித கட்டணமும் அறவிடாது அதனைச் செய்து வருகின்றது. இதற்கு மேலதிகமாக இலங்கையில் இருந்து வருகை தரும் மக்களுக்கு தங்குமிட வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதேவேளை தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் பேசி நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டுள்ளது. தமிழக முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்படும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இலங்கை தமிழர்களுக்கு தேவையான உதவிகளை சென்னை துணை உயர் ஸ்தானிகராலயம் தொடர்ந்தும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது' என்றும் கூறினார்.

இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் துணை தூதர் செயலாளர் பிரசாந்தி கிருஷ்ணமூர்த்தியும் கலந்து கொண்டார்கள்.

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

# கைத்தொழில்

- சபா. ஸ்ரீ



***சிறந்த கனிமங்களாகக் கருதப்படும் கிரா∴பைட், வெயின்குவார்ட்ஸ், நிக்கல்,சோடியம் மற்றும் கனரகத்தாதுக்கள் என்பவற்றைச் சந்தைப்படுத்தவும், கைத்தொழில் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தவும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் நல்ல வாய்ப்புக்கள் உள்ளன.**

# இலங்கையின் கனியவளத் துறையில் அரபு முதலீட்டாளர்கள் உள்ளீர்ப்பு



இலங்கையின் கனியவளத் துறைகளில் முதலிடுவதற்கு அரபு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர். ரியாதில் நடைபெற்ற கனியவள மாநாடு 2023 இல், உரையாற்றிய அமைச்சர் நஸீர் அஹமட், இதன் சாத்தியங்கள் குறித்து விளக்கியுள்ளார்.இம் மாநாடு இம்மாதம் (10) முதல் (12) வரை நடைபெற்றது.இதில்,பல நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

பொருளாதார படுகடனில் சிக்கியுள்ள இலங்கையை மீட்டெடுக்க பல வழிகளிலும் முயன்று வரும் இலங்கை இம்மாநாட்டிலும் பங்கேற்றுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் வழிகளில் இதுவும் பிரதான இடம்வகிக்கவுள்ளது.

இயற்கை வளங்கள் கொழிக்கும் இலங்கைக்கு கனிய வளங்களும் அருட்கொடையாக அமைந்துள்ளன. இத்துறைகளில் முதலிட சர்வதேசத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைச்சரின் உரையிருந்தது. குறிப்பாக அரபு முதலீட்டாளர்களை இதற்கு முன்வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.காரணம்,விரைவான தொடர்பாடல், போக்குவரத்து மற்றும் நீண்டகால உறவுகளின் அடிப்படையிலே இம்முதலீடுகள் அமையவுள்ளன.இவர்களுக்குத் தேவையான பௌதீக வளங்கள் அனைத்தையும் பெற்றுக் கொடுத்து முதலீட் டாளர்களை ஊக்குவிப்பதே,இலங்கை இந்த மாநாட்டில் பங்கேற்றதன் பிரதான நோக்காகும்.

**ஏ.ஜீ.எம். தௌபீக்**

கனியவளங்களுள்ள பிரதேசங்களை அடையாளம் காணல்,சுரங்கத்தொழிலுக்குத் தோவையான தளபாடங்கள், இயந்திரங்களை வழங்கல் மற்றும் கனியவளத் தொழிலின் உட்கட்டமைப்பை விருத்தி செய்தல் உள்ளிட்டவற்றை முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் வழங்கும். இவ்வாறு வரும் முதலீட்டாளர்கள், நிதியை முதலிடுவதைத் தவிர வேறு எவற்றிலும் சிரமப்படத் தேவையில்லை.புதிய சட்டங்கள், ஒழுங்குமுறைகளை அமுல்படுத்தி கனியவளத் தொழில் மேம்படுத்தப்படவுள்ளது. போக்குவரத்து உள்ளிட்ட சகல வசதிகளுக்கும் உள்ளூர் நிபுணர்களின் ஒத்துழைப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

சிறந்த கனிமங்களாகக் கருதப்படும் கிரா∴பைட், வெயின்குவார்ட்ஸ்,நிக்கல், சோடியம் மற்றும் கனரகத்தாதுக்கள் என்பவற்றைச் சந்தைப்படுத்தவும், கைத்தொழில் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தவும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் நல்ல வாய்ப்புக்கள் உள்ளன.வியாபார நோக்கிலும் பார்க்க இத்துறையை முன்னேற்றுவதற்கு அரபு முதலீட்டாளர்களின் பங்களிப்பையே இலங்கை பிரதானமாக எதிர்பார்க்கிறது.இலங்கைக்கான கடன் உதவிகளைக் குறைக்குமாறு சீனா மற்றும் இந்திய மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் கோரியுள்ள நிலையில், 11.7 மில்லியன் டொலரிலான தர்மஸ்தாபனத்தை கொழும்பில் திறப்பதற்கு கட்டார் முன்வந்துள்ளமை இதற்கு சிறந்த முன்னுதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில்,சவூதிஅரேபிய முதலீட்டு அமைச்சர் காலிட்அல்பாலிஹையும் அமைச்சர் நஸீர்அஹமட் சந்தித்தார்.

# கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்



கைத்தொழில் என்பது ஏதேனுமொரு உற்பத்தியை சந்தை ஒன்றுக்கு அனுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளியல் செயற்பாடாகும்.

உலகமானது பொருளாதார செயற்பாடுகளோடு பின்னிப்பிணைந்துள்ளது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை வணிகத்தில் இடம்பெறும் முக்கிய செயற்பாடாகக் கைத்தொழில் காணப்படுகின்றது.

கைத்தொழில் என்பது ஏதேனுமொரு உற்பத்தியை சந்தை ஒன்றுக்கு அனுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளியல் செயற்பாடாகும்.கைத்தொழிலானது மனிதனுக்கு மிகவும் உகந்ததாகவும், பயனுள்ளதாகவும் உள்ளது. அனைவரும் கைத்தொழில் கற்றுக் கொள்வதன் மூலம் பல பயன்களை அடைந்து கொள்ளலாம்.

இன்று பெரும் உற்பத்திப் பொருட்களின் ஆதிக்கம் காணப்படுகின்ற போதிலும் கைத்தொழில் உற்பத்திகளானது பல துறைகளிலும் தொடர்ந்து பயன்மிக்க பங்காற்றி வருகின்றன.

## கைத்தொழிலின் வகைகள்

கைத்தொழிலில் பல வகைகள் உள்ளன. கைத்தொழிலானது இலகு கைத்தொழில், பாரிய கைத்தொழில், தொழிநுட்ப விருத்தி கொண்ட கைத்தொழில் எனப் பிரதானமாக மூன்று வகைப்படுகின்றது.

இவற்றுள் பாய் பின்னுதல், கூடை பின்னுதல், அலங்கார பொம்மைகள் செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல், மின்னணு சாதனங்களை பழுதுபார்த்தல், கைபேசி பழுது பார்த்தல், நெசவு, தேனி வளர்த்தல், மட்பாண்டம் செய்தல், செக்கிழுத்தல் போன்ற பல கைத்தொழில் செயற்பாடுகள் அடங்கும்.

இன்றைய சூழ்நிலையில் படித்தோர் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாக வேலையில்லாப் பிரச்சினை காணப்படுகின்றது.கைத்தொழில் கற்றுக் கொள்வதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினை குறைக்கப்படுவதுடன், தனிமனித வருமானமும் அதிகரிக்கின்றது.

இவ்வுலகில் பிறந்த அனைவரும் வளமான வாழ்வு வாழவே விரும்புவர். எதிர்கால வாழ்க்கை குறித்து கவலை கொள்பவர்கள் ஒவ்வொருவரும் தமக்கான ஒரு தொழிலை மேற்கொள்ளுவது வளமான வாழ்விற்கு சிறந்ததாகும்.

## கைத்தொழிலின் பயன்கள்

கைத்தொழில் கிராமப் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றது. தனிமனித வருமானத்தைப் பெற்றுத் தருவதில் கைத்தொழில் இன்றியமையாததாகும்.

அதிகளவிலான கைத்தொழில் மூலப் பொருட்கள் இயற்கையாகக் கிடைக்கக் கூடியவை இதனால் சுற்றுச்சூழல் மாசடைதல் தடுக்கப்படுகின்றது.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதால் வளங்கள் சிறப்பாகக் கையாளப்படுகின்றன. வறுமையில் வாடுபவர்களுக்கு கைத்தொழில் பொருளாதார பலன்களைப் பெற்றுத் தந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. மேலும் நாட்டிற்கு அன்னியச் செலாவணி கிடைக்கின்றது

## மாற்றம் தேவை

கைத்தொழிலானது பெரும் உற்பத்திப் பொருட்களின் சந்தை செல்வாக்கினால் பாதிப்படைந்து வருகின்றது.

இதனால் கைத்தொழிலை சற்று மாறுபட்டு சிந்தித்து உற்பத்தியை அதிகரிக்கும் போது வெற்றி காணலாம். வெளிநாட்டவர்கள் கைவினைப் பொருட்களை அதிகம் விரும்பி வாங்குகின்றனர்.

எனவே அவர்களை கவரும் வண்ணம் மாற்றங்களை செய்தல் வேண்டும். உதாரணமாக ஆடை வடிவமைப்புகளில் புதிய புதிய வடிவங்களிலும் வெளிநாட்டவர்களின் கால சூழலை கருத்தில் கொண்டும் வடிவமைக்கலாம்.

இன்றைய உலகில் பாரியளவில் செல்வாக்குச் செலுத்தும் கைத்தொழில்களாக நிலக்கரி, கனிம எண்ணெய், இரும்புத்தாது போன்றன இடம்பெறுகின்றன.

வறுமையின் பிடியில் வாடுபவர்களைக் கூட கைத்தொழில் என்றும் கைவிட்டதில்லை. கைத்தொழிலை கற்றுக் கொள்வதன் மூலம் சொந்தக்காலில் சுய உழைப்பில் கௌரவமாக வாழ முடியும்.

இன்றைய காலச் சூழலுக்கு ஏற்றாற்போல் கைத்தொழிலை வளர்க்க முன் வர வேண்டும். கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் அது காலம் முழுவதும் நம்மை வளமாக வாழ வைக்கும் என்பதில் ஐயமில்லை.



# பாடசாலை கல்வித் திட்டத்தில் இருந்தே கைத்தொழில்களை ஊக்குவிக்கும் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்



சுதந்திரத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் அனைத்து அரசாங்கங்களும் கல்வி, சுகாதாரம், விவசாயம், சமூக உட்கட்டமைப்பு போன்றவற்றின் அபிவிருத்திக்காக பெருமளவிலான பொது முதலீட்டை செய்துள்ளன, ஆனால் தொழில்துறையின் வளர்ச்சிக்காக செய்யப்பட்ட முதலீடு மிகவும் குறைவு. இந்த நிலைமைகளே இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கல் நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பொதியிடல் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை பேக்கேஜிங் விருதுகளில் இணைதல். இலங்கை பேக்கேஜிங் துறையில் சிறந்து விளங்குவதற்காக இந்த விழாவை ஏற்பாடு செய்த இலங்கை பேக்கேஜிங் நிறுவனம், 1967 இல் நிறுவப்பட்டது மற்றும் ஆசிய பேக்கேஜிங் கூட்டமைப்பு மற்றும் உலக பேக்கேஜிங் அமைப்பின் செயலில் உறுப்பினராக உள்ளது.

இலங்கையில் பேக்கேஜிங் துறையை மேம்படுத்துவதற்காக சர்வதேச பொதியிடல் கண்காட்சிகள், மாநாடுகள், பட்டறைகள், வெளிநாட்டு பயணங்கள், ஆலோசனைகள் போன்றவற்றை நடத்தும் இலங்கை பேக்கேஜிங் நிறுவனம், 17 ஆவது ஆசிய பேக்கேஜிங்குடன் இணைந்து இந்த இலங்கை பேக்கேஜிங் விருதை வழங்கியது. காங்கிரஸ் மற்றும் லங்கா பேக் 87 பேக்கேஜிங் கண்காட்சி 1987. இந்நாட்டில் தொடங்கியுள்ளது. பின்னர், அவர்களின் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பேக்கேஜிங் வடிவமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களை மதிப்பிடுவதற்காக பேக்கேஜிங்கில் சிறந்து விளங்குவதற்கான மாணவர் போட்டி 2001 இல் தொடங்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில், இலங்கை பேக்கேஜிங் விருது வென்றவர்கள் ஆண்டுதோறும் பல்வேறு நாடுகளில் நடத்தப்படும் மதிப்புமிக்க ஆசியா ஸ்டார் மற்றும் வேர்ல்ட் ஸ்டார் போட்டிகளுக்கு வெற்றிகரமான உள்ளீடுகளைப் பெற முடிந்தது.

2021 உட்பட 2020 மற்றும் 2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான பேக்கேஜிங்கில் சிறந்து விளங்கியதற்காக வெண்கலம், வெள்ளி மற்றும் தங்கம் விருதுகள் வழங்கப்பட்டன, இது கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக நடத்தப்படவில்லை. அங்கு, பல ஆக்கப்பூர்வமான, சுற்றுச்சூழலுக்கு உகந்த துறைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன, மேலும் இலங்கையில் பேக்கேஜிங் துறையில் முன்னணியில் உள்ள பல நிறுவனங்கள் மற்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அரசாங்க நிறுவனம் என்ற வகையில் விருதுகளையும் பெற்றன. ஆசியா ஸ்டார் மற்றும் வேர்ல்ட் ஸ்டார் வெற்றியாளர்களுக்கு அமைச்சர் விருதுகளை வழங்கினார்.

இலங்கையின் பொதியிடல் தொழில் மிகவும் உயிரோட்டமாகவும், நாட்டின் கைத்தொழில் மேம்பாட்டிற்குத் துணைபுரிவதற்குத் தயாராகவும் உள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிய இந்த விருது விழாவில், ஒரு நாட்டின் தொழில்துறையின் வளர்ச்சிக்கு தொழிற்கல்வியின் முக்கியத்துவம் குறித்து அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவித்தார். புதிய உலகம் மற்றும் தொழில்துறை சார்ந்த அனைத்து துறைகளிலும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்டது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் அவசியத்தையும் இந்த ஊக்குவிப்பு சுட்டிக்காட்டியது.

# இயற்கைப் பொருட்களால் தயாரிக்கப்படும் பொதிகள்...

## பனை, தேங்காய், மூங்கில் மற்றும் 62 வகையான மூலப்பொருட்களில் தயாரிக்க திட்டம்

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆவர். சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் பெண்களை ஊக்குவிப்பதன் மூலம் குடும்பச் சூழலில் பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் (ESCAP) தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் தலைவர் திருமதி மிகிகோ தனகா தெரிவித்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரனவுடன் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக் குழு (ESCAP) இலங்கையில் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கு பல வேலைத்திட்டங்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் எதிர்காலத்தில் தமது அமைப்பு இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் திருமதி மிக்கிகோ தனகா மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக தற்போதைய பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு சிறு மற்றும் நடுத்தர தர கைத்தொழில் துறைகளில் பெண்களின் தொழில் முனைவோரை ஊக்குவிப்பது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

**இங்கு அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன**

அமைச்சும் அரசாங்கமும் ஏற்கனவே ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக ஒருங்கிணைத்து குறு மற்றும் சிறிய அளவிலான பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். இதற்காக கைத்தொழில் அமைச்சினால் பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், கிராமிய மட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர பெண் தொழில் முயற்சியாளர்களிடம் சென்று அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து அவர்களை மேம்படுத்த தேவையான பணிகளை செய்து வருவதாகவும்,

மேலும், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பொதிகளை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் முக்கியத்துவம் கொடுப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இலங்கையில் பனை, தேங்காய், மூங்கில் மற்றும் 62 வகையான மூலப்பொருட்கள் இருப்பதாகவும் கூறினார். இவ்வாறான இயற்கைப் பொருட்களால் தயாரிக்கப்படும் பொதிகளை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதன் மூலம் பல புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் எனவும், பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனையை குறைப்பதற்கு இது பெரும் உதவியாக இருக்கும்.ஐக்கிய நாடுகளின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை பொருட்களை ஒரு தொழிலாக பயன்படுத்தி பேக்கேஜிங் தயாரிப்பதற்கும் தேவையான ஆதரவை வழங்குவதாகவும் திருமதி மிக்கிகோ தனகா கூறினார்.





# சிறைகளில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண விசேட பேச்சுவார்த்தை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம், சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குதல், சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வுகாணுதல் உள்ளிட்ட விஷேட பேச்சுவார்த்தையொன்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ மற்றும் விடயத்துடன் சம்மந்தப்பட்ட குழுவினருக்கிடையில் நேற்று நடைபெற்றது.

சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல், சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட விடயங்களுக்கு தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில், நியமிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை தலைமையகக் குழு, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான ஆலோசனைக்குழு மற்றும் சிறைச்சாலை அனுமதி சபைக் குழு ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் நீதியமைச்சருக்குமிடையிலேயே மேற்படி இந்தப் பேச்சுவார்த்தை நேற்றைய தினம் நீதி அமைச்சில் நடைபெற்றுள்ளது.

தற்போது சிறைச்சாலைகளில் நிலவும் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், பொதுமன்னிப்பு வழங்க முடிந்த சிறைக் கைதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சிறைக்கைதிகள் தொடர்பிலான செயற்பாடுகளில் நிலவும் சட்டரீதியான தடைகள் ஆகியவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வது மற்றும் மேற்படி குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நீதியமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்கடி சில்வா, நீதியமைச்சின் மேலதிக செயலாளர் பியுமந்தி பீரிஸ், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.



டெக்ஸாஸில் அமைந்துள்ள டல்லாஸ் பௌத்த விகாரையின் விகாராதிபதிகளுடனான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. 2023 மே மாதம் சிக்காகோ நகரில் இடம்பெறவுள்ள ஸம் ஸம் அமைப்பின், ஐக்கிய அமெரிக்க அங்குரார்ப்பண நிகழ்வு தொடர்பாக இந்தச் சந்திப்பில் தெளிவுபடுத்தப்பட்டது. அமைப்பின் தலைவர் முப்தி. யூசுப் ஹனிபா, ஸம் ஸம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி M.H.M ஹிஷாம், இர்விங்கை தளமாகக் கொண்ட இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த அப்பர், பஸால் நஜிமுன் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இந்தோனேசியாவில் சக்தி மிக்க நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை கடலுக்கடியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது 6.0 ரிக்டர் அளவில் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலநடுக்கம் 48 கிலோமீட்டர் ஆழத்தில் ஆச்சே மாகாணத்தின் கடலோர மாவட்டமான சிங்கிலிருந்து, தென்கிழக்கே 48 கிலோமீட்டர் மையமாக இருந்ததென அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் வானிலை, காலநிலை மற்றும் புவி இயற்பியல் மையத்தால் சுனாமி எச்சரிக்கை வெளியிடப்படவில்லை. பொருட்சேதம், உயிரிழப்பு தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. கடந்த நவம்பர் (21) அன்று 5.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மேற்கு ஜாவாவின் சியான்ஜூர் நகரில் குறைந்தது 331 பேர் கொல்லப்பட்டனர்.

பசிபிக் படுகையிலுள்ள எரிமலைகள் மற்றும் பூமத்திய கோடுகளின் வளைவான "ரிங் ஆப் பயர்" (எரிமலை வளையம் அல்லது பசிபிக் எரிமலை வளையம் (Pacific Ring of Fire) மீது இந்தோனேசியா இருப்பதால் அடிக்கடி பூகம்பங்கள் மற்றும் எரிமலை வெடிப்புகளால் அந்த நாடு பாதிக்கப்படுகிறது.

# நெல்லிமலை சிவனேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

வத்தேகம கல்வி வலய, மடுல்கலை நெல்லிமலை சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறும்

இக் கூட்டம் பாடசாலை அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான எம் நவநீதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும் இக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அதிபர் வேண்டுகோள் விடுக்கிறார்.

## மாவனெல்லை இரட்டை...

செய்தனர். இது, கொலை செய்யப்பட்ட இளைஞனின் மோட்டார் சைக்கிளெனவும் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 29 வயதுடையவர்களாவர். இவர்கள் நெலவ மற்றும் மாவனெல்லை பிரதேசத்தை சேர்ந்தவர்களென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சட்டமூலம் அமைச்சரவைக்கு...

ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணைத் தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால், தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல்...

தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் ஒத்திவைக்கப்படாததென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலை குறித்து வருந்துவதாகவும் அவர் கூறியுள்ளார். அவருடன் தங்களுக்கு எந்த தனிப்பட்ட பிரச்சினையும் இல்லை எனவும் விவசாய மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு, பிரத்தியேக வகுப்புக்கள்...

அதேவேளை, இன்று (17) நள்ளிரவுக்குப் பின்னர் கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட போஸ்டர்கள், பெனர்கள், துண்டுப் பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்ட ஏனைய கையேடுகள் அனைத்தும் தடை செய்யப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதே வேளை, அடிப்படை பிரிவேனா இறுதிப்பரீட்சை விடைத்தாள்கள் மீள் பரிசீலனை தொடர்பான விண்ணப்பப் பத்திரங்கள் ஒன்லைன் மூலமாக மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எதிர்வரும் பெப்ரவரி (15) வரை விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தலவாக்கலையில் திடீர் தீ...

குடும்பங்களை சேர்ந்த 49 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

இங்கு, திடீரென தீ விபத்து ஏற்பட்டபோது மக்கள் சுசீசலிட்டவாறு வெளியில் வந்தனர். அதற்குள் தீ, வேகமாக பரவியது. பரவிய தீயை தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகள், தலவாக்கலை பொலிஸாருடன் இணைந்து சுமார் மூன்று மணி நேர போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட வேளையில், பலர், தைப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றிருந்ததால் தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

எனினும், உடைமைகள் மற்றும் பிள்ளைகளின் பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்டவை எரிந்த நாசமாகின.

பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களில் 03 குடும்பங்கள் மாத்திரம் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 09 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க, தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இத் தீ விபத்துக்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை. எனினும் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு...

பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோரால் அனுப்பப்படும் கடிதங்கள், பொதிகள் மற்றும் ஆவணங்களையும், கிராம உத்தியோகத்தர்களுக்கு, மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு, பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்புவதற்காக அஞ்சல் இடப்பட்ட பொதிகளையும், கடிதங்களையும் முன்னுரிமையளித்து முதல் அஞ்சலிலேயே அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிக்காக வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்காகவும் இம்முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் வரை, இந்த இலவச அஞ்சல் வசதி அமுலிலிருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 20 இலட்சம் குடும்பங்களுக்கு...

160 மில்லியன் ரூபா, போக்குவரத்துச் செலவுக்கு 600 மில்லியன் ரூபா என்ற வகையில் 8,040. மில்லியன் ரூபா இதற்காக மதிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து இத்திட்டத்துக்கு மதிப்பிடப்பட்ட செலவு மாறுபடும்.

தேவை ஏற்பட்டால், வரவு செலவு திட்ட நிதியொதுக்கீட்டின் 10,000 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

கமத்தொழில் திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் தரவுகளின்படி, 2022/2023 பெரும்போகத்தில் நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு சுமார் 7,32,201 ஹெக்டெயராக இருந்ததோடு, மற்றும் எதிர்பார்க்கப்படும் நெல் விளைச்சல் 3.3 மில்லியன் மெற்றிக் தொன்களாகும்.

இதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு சுமார் 2.2 மில்லியன் மெ.தொன்களாகும். நாட்டின் மாதாந்த அரிசித் தேவையான சுமார் 2,10,000 மெ. தொன்களைக் கருத்திற்கொண்டால், எதிர்வரும் பெரும்போகத்தில் அரிசி மேலதிக கையிருப்பு கிடைக்கலாமென அவதானிக்கப்படுகின்றது.

இதன்படி, நெல் விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் வகையில், 2020/23 பெரும்போகத்தில் குறிப்பிட்ட அளவு நெல் கொள்முதல் செய்வதில் அரசாங்கம் தலையிடுவது அவசியம் ஆகும்.

நாட்டில் நிலவும் கடினமான பொருளாதார நிலைமை காரணமாக, சமூகத்தின் குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் போஷாக்கு மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவளித்து இந்த நெருக்கடியின் பாதகமான விளைவுகளிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும்.

சமுர்த்தி பயனாளர்கள் உட்பட சுமார் 20 இலட்சம் குடும்பங்களாக இருக்குமென அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏப்ரல் 2023 வரை இவர்களுக்காக அரசாங்கம் மேலதிக நிதியை வழங்கியிருந்தாலும், இந்த குறைந்த வருமானம் பெறுபவர்களை சில காலம் கவனித்துக் கொள்ள வேண்டிய அவசியமுள்ளது.

2022/2023 பெரும் போகத்தில் நெல் அறுவடை முந்தைய பருவத்தை விட அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுவதால், அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை பராமரிப்பதற்கு மேலதிக ஒத்துழைப்பை வழங்குவதற்காக குறிப்பிட்ட அளவு நெல்லைப் பயன்படுத்துவது பொருத்தமானது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுவோர் பயனடையவுள்ளனர்.

திறைசேரி செயலாளர், ஜனாதிபதி செயலக அதிகாரிகள், விவசாய அமைச்சின் செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்களின் செயலாளர், பெண்கள், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் மற்றும் சகல மாவட்டச் செயலாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் என்பன உத்தேச திட்டத்தை செயல்படுத்தும் முறை குறித்து ஆராயப்படும்.

உத்தேச அரிசி விநியோகப் பொறிமுறை தொடர்பில் கலந்துரையாடி இறுதி தீர்மானம் எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, விவசாயிகள் வாங்கும் நெல் வகைகளின் உற்பத்திச் செலவு, அரிசி கொள்வனவு செய்யும் உத்தரவாத விலை, நெல் ஆலை உரிமையாளர்களின் பங்களிப்பு, போக்குவரத்து முறை, களஞ்சிய வசதிகள் ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்படும்.

## ஆழ்கடல் மீன்பிடி... (03 ஆம் பக்கத் தொடர்)

கடலுக்குள் வீசிவிட்டதாகவும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், பல ஆழ்கடல் படகுகளின் "ரேடார் டோம்" பகுதிக்குள் இருக்கும் பாகங்களை அகற்றி போதைப்பொருளை கவனமாக மறைத்து வைக்கும் புதிய உத்தியை கடத்தல்காரர்கள் கையாண்டு வருவது சந்தேகநபர்களிடம் நடத்திய விசாரணையில் மேலும் தெரிய வந்துள்ளது.

இதன்படி, கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று (16) கொழும்புத்துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட இரண்டு (02) படகுகள் தற்போது மேலதிக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன, இந்த ஆழ்கடல் படகுகள் மற்றும் பத்து (10) சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## பாட்டலி, குமார... (03 ஆம் பக்கத் தொடர்)

அதற்கான காலம் கடந்தாலும் எவ்வாறெனினும் நாம் இந்த உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்னர், புதிய அரசியல் கட்சியாக நாட்டில் தொழில்சார் மட்டத்தினரை இணைத்துக் கொண்டு முன் செல்ல உத்தேசித்துள்ளோம்.

அந்த வகையில் சமத்துவமான கருத்துக்களை கொண்ட நாட்டுக்கு அவசியமான விரிவான சமத்துவத்தை கட்டியெழுப்பும் நோக்கில், நாம் புதிய இலங்கை சுதந்திரக் கட்சியுடன் சில உள்ளூராட்சி சபைகளில் கூட்டாக போட்டியிட தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரமான தேர்தலை... (03 ஆம் பக்கத் தொடர்)

இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பில் சில ஊடகங்கள் வெளியிட்ட பொய்யான தகவல்கள் தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய பின்னணியில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு ஆதரவளிக்குமாறு அனைத்து பங்குதாரர்களுக்கும் தேர்தல் ஆணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அரசு அதிகாரிகள் வேலை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒரு பொது பிரதிநிதி ஆறு கிராமப்புற சேவை பிரிவுகளை வைத்திருக்கிறார்.

எனவே, கம்பஹாவில் உள்ள அரச அதிகாரிகளிடமிருந்து இன்னும் சிலவற்றை எதிர்பார்க்கிறேன்.

ஒரு மாதமாகியும் மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இதற்காக மக்கள் எங்களை குறை கூறுவது நியாயம். எனவே, அடுத்த கூட்டத்திற்கு முன், விவசாயிகள் அமைப்புகளின் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். உங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளால் இவற்றை நீடிக்காதீர்கள். அரச அதிகாரிகளுக்கு அரசு எவ்வளவு செலவு செய்கிறது? பணிகள் நடக்காதபோது, மக்கள் அரசியல்வாதிகளை குற்றம் சாட்டுகிறார்கள்,

கம்பஹா நகர எல்லையில் சட்டவிரோத வர்த்தகம் காரணமாக பிரச்சினைகள் ஏற்படுவதனால்,

இவ்வளவு காலம் அதிகாரிகள் எங்கே இருந்தார்கள்? தேர்தல் நெருங்கும் போது அவர்களை நீக்கி அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட வேண்டாம். புதிய அனுமதியற்ற கடைகளை அமைக்க வேண்டாம். மேலும், மொபைல் மற்றும் கடைகளை நடத்துபவர்களை அகற்ற வேண்டாம். பிழைப்பு நடத்தும் மக்கள் எப்படி அகற்றப்படுவார்கள்? அந்த மக்கள் பலர் கண்டி வீதியில் நீண்டகாலமாக அவர்கள் வியாபாரம் செய்து வருகின்றனர். அந்த வியாபாரிகள் இருக்கிறார்கள். அந்த நபர்களை ஒரேயடியாக அகற்றினால், மக்கள் சிரமப்படுவார்கள். அந்த மக்கள் வெளியேற சிறிது காலம் கொடுங்கள் என்றும் கூறினார்.

## மக்கள் கருத்துக்களை அறிவதற்கு...

அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்காக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம், ஈமெயில், பேஸ்புக் மூலமும் சாதாரண தபால் மூலமும் கருத்துக்களை முன் வைக்க முடியும் என்றும் அந்த ஆணைக்குழு கேட்டுள்ளது. பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் இணையத்தளம் அல்லது 0112392607, 0112392608 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## அரச பணியாளர்களுக்கு...

நிதி அதிகாரி, கணக்காளர், இயக்குநர் (நிதி) அதிகாரிகளுக்கு திறைசேரி கடிதம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளது.

பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அதிகாரிகளுக்கு தனித்தனியாக ஊதியம் வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.சி.டி.எல்.சில்வா மற்றும் திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன ஆகியோரின் கையொப்பத்துடன் கடந்த (13) இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தொடர்பான ரிட் மனுவை...

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள், பெப்ரவரி (24) விடயங்களை முன்வைக்க வேண்டும் என குறிப்பிட்டு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, இராணுவ ஆளணி பிரதானி, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 18 பேர் மேற்படி மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த மே ஒன்பதாம் திகதி வீடுகள் தாக்குதலுக்குள்ளான அமைச்சர் பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, மற்றும் காமினி லொகுகே, ஜனக பண்டார தென்னக்கோன், பிரசன்ன ரணவீர, சிறிபால கம்லத் உள்ளிட்ட 39 பேரினால் இந்த மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய கூட்டணியாயினும்...

உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே!.

இத்தீர்மானத்தை எடுத்தால் நாங்கள் சக கட்சிகளுடனோ அல்லது அவர்கள் எங்களுடனோ இணைந்து பணியாற்றாமல் விடுவதென்று அர்த்தமல்ல.

இந்த முடிவை எடுத்த பின்னரும் கூட, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒன்றாகவே சென்று சந்தித்தோம்.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களுடைய நீண்டகால அரசியல் பிரச்சினையை தீர்ப்பதற்கு, சக தமிழ் கட்சிகளுடன் ஒன்றாகவே பயணித்திருக்கிறோம்.

ஆகவே, தற்போதைய நிலைப்பாட்டில் தமிழரசு கட்சி தனியாக உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதால், அடுத்த கட்டத்துக்கு எம்மை இட்டுச் செல்லும் . கூட்டணிகள் புதிதாக இணைக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

## விமல் வீரவன்சவுக்கு எதிரான...

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி நவரத்ன மாரசிங்கவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது விமல் வீரவன்சவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, பாராளுமன்ற உறுப்பினரை அரசாங்க ஊழியராக பொருள் கொள்ள முடியாதெனவும் அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாதென்றும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த அடிப்படை எதிர்ப்புடன் சம்பந்தப்பட்ட எழுத்து மூல அறிக்கை இரு தரப்பு சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து மேற்படி வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? இல்லையா? என்ற தீர்மானத்தை பெப்ரவரி (28) வெளியிடுவதாக கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அமைச்சராக பதவி வகித்த விமல் வீரவன்ச 75 மில்லியனுக்கும் அதிகமான சொத்துக்கள் மற்றும் நிதியை முறையற்ற விதத்தில் கையாண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில், இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக மேற்படி வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய – அவுஸ்திரேலிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
# குறைந்த செலவில் நிலக்கரி பெற வாய்ப்பு

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவு மேலும் இறுக்கமடைந்துள்ளது.

கடந்த ஆண்டில் இந்த வர்த்தக உடன்படிக்கை அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர் கடந்த டிசம்பர் 29ஆம் திகதி பயன்பாட்டுக்கு வந்தது. இதன் மூலம் பல பொருட்களையும் சேவைகளையும் தீர்வையின்றி பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தியாவுக்கு மிக அவசியமான தரமான நிலக்கரி அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதியாகிறது மேலும் 'கோக்' என அழைக்கப்படும் திரவ நிலக்கரியும் 2.5 தீர்வையின் கீழ் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்திருப்பதால் தீர்வை விதிக்கப்படாத நிலக்கரியை பெற முடியும் என்றும் லித்தியம் போன்ற பெறுமதியான கைத்தொழில் கனிமங்களை அவுஸ்திரேலியாவில் இருந்து பெற முடியும் என்றும் வர்த்தக வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. இதேசமயம் அவுஸ்திரேலிய தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் இந்தியாவில் வர்த்தகமும் முதலீடுகளும் செய்வதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்திருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியாவின் மின் உற்பத்தி பெருமளவில் நிலக்கரியையே சார்ந்துள்ளது. நிலக்கரி பாவனையில் இருந்து விடுபட வேண்டிய தேவை இருந்தாலும் மீள் பயன்பாட்டுக்கான பசுமை எரிசக்தி வளத்துக்கான போதிய தொழில்நுட்ப வசதிகள் இல்லாததால் 2040 வரையில் நிலக்கரியையே நம்பியிருக்க வேண்டும். இவ்வகையில் இச்சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்தியாவுக்கு முக்கியமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# உப்புக்காச்சிமடு நாணல்சேனையில் காட்டு யானைகளின் அட்டகாசம்

## மூதூர் பிரதேச செயலகத்தில் சேத விபரங்கள் சமர்ப்பிப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரின் உப்புக்காச்சிமடு நாணல் சேனை கிராமத்தில் காட்டு யானைகளினால் சேதமாக்கப்பட்ட தமது குடியிருப்புகளின் சேத விபரங்களை மூதூர் பிரதேச செயலகத்தில், அக்குடியிருப்பாளர்கள் அண்மையில் சமர்ப்பித்துள்ளனர்.

அத்துடன், காட்டு யானைகளினால் தமது குடியிருப்புகள் சேதமாக்கப்பட்ட விடயம் தொடர்பாக மூதூர் பொலிஸிலும் அக்குடியிருப்பாளர்கள் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளனர். மூதூர் மேற்கு கிராம அலுவலக உத்தியோகத்தர் ஊடாகவே, மூதூர் பிரதேச செயலகத்தில் அக்குடியிருப்பாளர்கள் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

உப்புக்காச்சிமடு நாணல்சேனை கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை தொடர்ந்து காணப்படுவதுடன் இரு குடியிருப்புகள், பயன்தரும் தென்னை, மா, பலா உள்ளிட்ட மரங்களும் யானைகளினால் சேதமாக்கப்பட்டன.

# உடத்தலவின்னவில் மரதன் ஓட்டப் போட்டியில் 50 வயது கடாபி முதலிடம்

உடத்தலவின்னை மடிகே ஜாமிஉல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற பழைய மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் 50 வயது கடாபி முதலிடத்தை பெற்றுக் கொண்டார்.

50 வயதை தாண்டியும் கடாபி ஆறு கிலோமீட்டர் தூரத்தை 14 நிமிடங்களில் ஓடிமுடித்து முதலிடத்தைப் பெற்று பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுள்ளார். இப்போட்டியில் அதிகமான பழைய மாணவர்கள் பற்கேற்றமை குறிப்பிடத்தக்கது.





கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலின் தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாடு கோயிலின் அறங்காவலர் கோவிந்தசாமி கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது...
படம்:மாவத்தகம தினகரன் நிருபர்

# பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலய மரதன் ஓட்டப் போட்டியில் வரலாற்று சாதனை

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



கெகிராவ கல்வி வலய பலாகல கோட்டத்திலுள்ள பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலய மரதன் ஓட்டப் போட்டியில் இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் ஏழு வயது மாணவன் எப்.எம்.ருஸ்தி ஐந்து கிலோ மீற்றர் தூரத்தை 27 நிமிடங்களில் ஓடி 17 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளின் முதற் கட்டமாக மரதன் ஓட்டப் போட்டி கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் 13 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ள பாடசாலையால் அனுமதிக்கப்பட்ட போதும், பெற்றோரின் விருப்பத்தின் பேரில் கலந்து கொண்ட பலளுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் ஏழு வயது மாணவரான எப்.எம்.ருஸ்தி ஐந்து கிலோ மீற்றர் தூரத்தை கலந்து கொண்ட 31 பேரில் 17 ஆவது இடத்திற்கு வந்துள்ளார்.

இதில் பல மாணவர்கள் கலந்து கொண்டு இத்தூரத்தை ஓடி முடித்து கொள்ள முடியாத நிலையில் போட்டியில் இருந்து இடை விலகிய போதும் கலந்து கொண்டவர்களில் வயதில் அதி குறைந்த இந்த மாணவன் இத்தூரத்தை ஓடி முடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

# மும்பை சுற்றுலாவில் காஷ்மீரி மாணவர்கள்; இந்திய புரிந்துணர்வுக்காக என்கிறது இராணுவம்

காஷ்மீரைச் சேர்ந்த இளம் சந்ததியினரை இந்தியாவின் ஏனைய பகுதிகளோடு பரிச்சயம் செய்து வைப்பதன் மூலம் தேசிய புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஒரு திட்டத்தின் அங்கமாக காஷ்மீர் எல்லை பாதுகாப்பு படைப் பிரிவு காஷ்மீரி மாணவர்களை இந்திய மாநில சுற்றுலாவுக்கு அனுப்பி வைத்து வருகிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஏழு மாணவியர் உட்பட 29 மாணவர் கொண்ட குழுவை இப்படைப் பிரிவு ஏழு நாள் பயணமாக மும்பைக்கு விமான மூலம் அனுப்பி வைத்தது. மும்பையில் முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடும் அவர்கள் அனைத்து செலவுகளையும் எல்லை இராணுவம் ஏற்றுக் கொள்ளும் என அந்த தலைமையகம் அறிவித்துள்ளது.

பாரத் தர்ஷன் சுற்றுலா என்ற இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,100 மாணவர்கள் பல்வேறு இந்திய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வருடம் 105 மாணவர்கள் சுற்றுலாவுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் எல்லைப் பாதுகாப்பு படைப்பிரிவு தெரிவித்திருக்கிறது.

இந்தியா பல்வேறு சமய, கலாசார மற்றும் பாரம்பரியங்களை உள்ளடக்கிய ஒரு தனித்துவமான நாடு என்பதை இறுக்கமான ஒரு சூழலில் வளர்க்கப்பட்ட ஜம்மு – காஷ்மீர் மாண மாணவியருக்கு புரிய வைப்பதும் வெளியில் காணப்படும் உயர்கல்வி வாய்ப்புகள், புதிய சிந்தனைகள் மற்றும் தொழில் வாய்ப்புகளையும் அறிமுகம் செய்வதை நோக்கமாகக் கொண்டே இத்திட்டம் உருவாக்கப்பட்டதாக இப்படைப் பிரிவின் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீரா நோயாளருக்கு உதவும் காஷ்மீரி மருத்துவர்

காஷ்மீரி மகளிர் இவற்றைத் தான் செய்ய வேண்டும், இவற்றை அல்ல என்றிருந்த பாரம்பரிய தடையை ஒரு பெண் உடைத்துள்ளார்.கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்து வருவதாகவும் செய்திகள் புகழாரம் சூட்டி வருகின்றன.

ஷர்மீன் முஸ்தாக் என்ற இந்த பெண் மருத்துவர். தான் ஏற்படுத்தியிருக்கும் நிதியத்தின் வாயிலான புற்றுநோய், நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுநீரக நோயால் சிரமப்படும் காஷ்மீர் வருவாய் குறைந்த நோயாளர்களுக்கு சிகிச்சைகளுக்கும் மருந்துகளுக்கும் உதவி வருகிறார்.

ஒரு காஷ்மீரி பெண் இந்த அளவுக்கு முன்வந்து வசதியற்ற நோயாளர்களுக்கு தொடர்ச்சியாக உதவிகள் செய்து வருவது முன்மாதிரியான விஷயம் எனப் பாராட்டியுள்ள ஊடகங்கள், கரடு முரடான மற்றும் பனி படர்ந்த பாதைகளில் நடத்தப்படும் வாகன பந்தயங்களில் கலந்து கொள்ளும் காரோட்டும் வீரர்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளன. சமீபத்தில் நடைபெற்ற பனி படர்ந்த பாதைகளில் பந்தயக் கார் செலுத்தும் போட்டியில் கலந்துகொண்ட ஐம்பது வீரர்களில் ஷர்மீன் மட்டுமே பெண் வீராங்கனையாவார்.

இரண்டு குழந்தைகளின் தாயாரான இவர் ஏழை நோயாளர்களுக்கு உதவுவதும் சவாலான விஷயங்களில் ஈடுபாடு காட்டுவதுமே தனது இலட்சியமும் பொழுதுபோக்குமாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# பெரியநீலாவணை பாடசாலையில் 'ஸ்மார்ட்' வகுப்பறை திறந்துவைப்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வலயத்துக்குட்பட்ட பெரியநீலாவணை புலவர் மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறையொன்று அப்பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் நேற்று (16) திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன், சுமார் 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாணவர்களின் நவீன கற்றலுக்கு தேவையான 'ஸ்மார்ட் போர்ட்' வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹறூதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# இந்திய – சீன எல்லையோரமாக இந்தியா பாதை அமைப்பு
# சீன பயமுறுத்தல்களுக்கு அடிபணியவில்லை

சீனாவின் ஆட்சேபனைகளையும் மீறி இந்திய – சீன எல்லையோரமாக இந்தியா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதைகளையும் பாலங்களையும் அமைத்து வருவதாக வொஷிங்டனில் இருந்து வெளிவரும் 'த டிப்ளோமட்' என்ற சஞ்சிகை கட்டுரை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் அருணாச்சலப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் எல்லையோரமாக அமைக்கப்பட்ட 28 அடிப்படைக் கட்டமைப்புகளை திறந்து வைத்தார். 724 கோடி செலவில் அமைக்கப்பட்ட இவற்றில் எட்டு லடாக் எல்லைப் புறமாகவும் அருணாச்சல் பிரதேசத்தில் ஐந்தும் திறப்பு விழா கண்டன. இந்திய இராணுவம் விரைவாக செயற்பட உதவும் வகையில் இப் பாலங்களும் பாதைகளும் அமைக்கப்பட்டதாக இங்கு உரையாற்றிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார். கடந்த டிசம்பர் 9ம் திகதி அருணாச்சல் தவாங் எல்லிலில்

## வொஷிங்டன் சஞ்சிகை பாராட்டு

சீனப்படையின் எல்லை தாண்டி வந்தபோது இந்தியா படையினர் அவர்களை அடித்து விரட்டிய சம்பவம் நிகழ்ந்தது.

சுதா இராமச்சந்திரன் என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரையில் இவ் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததோடு சீன பயமுறுத்தல்களுக்கு அடி பணியாமல் இந்தியா எல்லையோர கட்டுமானங்களில் ஈடுபட்டு வருவதாகவும், வழமையான இந்திய சிவப்பு நாடா தாமதங்கள் அகற்றப்பட்ட வகுக்கப்படும் திட்டங்கள் வேகமாக நடைமுறைக்கு வருவதை தற்போது அவதானிக்க முடிவதாகவும் இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரியை மேற்கோள் காட்டி எழுதியிருந்தார்.

# பசுமை சக்தி உற்பத்தித் துறையில் பல கோடி ரூபா முதலீடு

## இந்திய பெரு வணிக நிறுவனங்களும் ஆர்வம்

உலக அளவில் சூழல் மாசைக் குறைத்து பசுமை எரிசக்தியை அதிக அளவில் பயன்படுத்துவது தொடர்பாக உலக நாடுகளுக்கு இந்தியா அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை இந்திய அரசு முடுக்கிவிட்டு வருகிறது. இதன் அடிப்படையில் கடந்த வாரம் மத்திய அமைச்சரவை 19,744 கோடி ரூபா நிதியை அரசின் தேசிய பசுமை ஹைதரசன் கார்பன் உற்பத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்திருந்தது.

மத்திய சக்திவள அமைச்சு கடந்த பெப்ரவரியில் 2030ம் ஆண்டில் வருடாந்தம் ஐந்து மில்லியன் தொன் பசுமை ஹைதரசன் சக்தியை உற்பத்தி செய்யும் வகையில் திட்டங்களை செயல்படுத்தவுள்ளதாக அறிவித்திருந்தது. தற்போதைய சக்தி உற்பத்தி வளங்களை பசுமை ஹைதரசன் சக்தியாக மாற்றி அமைப்பதற்காக 17,490 கோடியும், பரீட்சார்த்த பசுமை உற்பத்தித் திட்டங்களுக்கு 1,466 கோடியும், ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கு 400 கோடியும் ஏனைய சார்ந்த திட்டங்களின் பேரில் 388 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சரவை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களே பசுமை எரிசக்தியை உற்பத்தி செய்வதற்கான ஊக்குவிப்பு திட்டங்களும் இவற்றில் அடங்கும். இதே சமயம் அதானி குழுமம் போன்ற பெரு வணிக நிறுவனங்களும் பசுமை சக்தி உற்பத்தித் துறையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. எனினும் பசுமை சக்தி உற்பத்தியில் ஈடுபடும்போது ஒரு கிலோவுக்கு ஐந்து டொலர் என்ற வகையில் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதால் அவை அரசின் உதவியை எதிர்பார்த்துள்ளன.

பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கு செலவு அதிகம் என்பதால் வெளிநாடுகளில் அரசுகளின் மானியமும் ஆதரவும் கிடைப்பதாக ஏ.சி.எம்.ஈ. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

# எமது நாட்டை போதை அற்ற நாடாக மாற்றுவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



**றொட்டவெவ குறூப் நிருபர்**

"எமது நாட்டை போதை அற்ற நாடாக மாற்றுவேன்" என, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பிரதேசத்தில் நேற்று (16) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றிய போது, "எமது நாட்டில் தற்பொழுது போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், எதிர்காலத்தில் நாம் போதைப்பொருள்பாவனையை ஒழித்து, போதை அற்ற நாடாக இலங்கையை மாற்றுவேன்" என்றார்.

"இம்முறை தேர்தலில் எம்மை நம்பி வாக்களித்து கோமரங்கடவல,மொரவெவ மற்றும் பதவிசிறிபுர பிரதேச சபைகளுக்கு அதிக வாக்குகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்" எனவும், அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்கு இதுவரையில் 70 பஸ் வண்டிகளை வழங்கி உள்ளதாகவும் எதிர்காலத்தில் அதிகஷ்டப் பிரதேசமான மொரவெவ பிரதேசத்து மாணவர்களின் நலன் கருதி பஸ் வண்டிகளை வழங்க உள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.01.15
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5001 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,800,046.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 0 6 7 1 7 9

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1349 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 293,356,982.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 06 — வெற்றி இலக்கங்கள் 13 32 46 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1456 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,376,449.20
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 5 9 3 7 7 0

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3243 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,327,616.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 10 18 50 65

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 310 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 37 52 56 59 — விசேட இலக்கினம் சிம்மம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1031 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 142,179,800.40
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 07 26 55 56

### இலங்கைத் திருநாட்டின் முதலாவது புனிதர்

# புனித ஜோசப் வாஸ் அடிகளார்

## ஜனவரி 16ல் புனிதரின் திருவிழா

இலங்கையில் திருச்சபையின் தூணாக போற்றப்படும் புனித ஜோசப் வாஸ் அடிகளாருக்கு கத்தோலிக்கத் திருச்சபை ஜனவரி 16ஆம் திகதி திருவிழாவெடுத்து மகிழ்கிறது.



புனித ஜோசப் வாஸ் இந்தியாவின் கோவாவில் 1651 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி 6 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது புதல்வனாக பிறந்தார்.

போர்த்துக்கீசம், லத்தீன் ஆகிய மொழிகளை கற்றுத் தேர்ந்த புனித ஜோசப் வாஸ் அடிகளார் சிறுவயதிலேயே தவத்திலும் ஏழை எளிய மக்கள் மீது கரிசனை காட்டுவதிலும் சிறந்து காணப்பட்டார்.

புனித அக்குவினாஸ் குருமடத்தில் சேர்ந்து தமது 25 வது வயதில் அவர் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தர்களினால் ஒடுக்கப்பட்ட காலத்தில் அவர்



களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்காக புனித ஜோசப் வாஸ் இந்தியாவிலிருந்து மாறுவேடத்தில் இலங்கைக்கு யாழ். சில்லாலை பகுதிக்கு வந்து சேர்ந்தார்.

அனைத்து மக்களும் உண்மையை அறிந்திடவும் வெளிப்படையாக தமது மத நம்பிக்கையை வெளிப்படுத்தவும் சுதந்திரம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மனித உயிரின் புனிதத் தன்மை, மற்றவரின் மாண்பு, சுதந்திரம் ஆகியவற்றில் மரியாதை, பொது நலனுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு அவர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். இலங்கையில் யாழ்ப்பாணத்தின் புத்தளம், சில்லாலை, மன்னார், பூநகரி உள்ளிட்ட வன்னி மாவட்டத்திலும் அவர் கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டியெழுப்பியுள்ளார். 1696 ஆம் ஆண்டு அவர் குரு முதல்வராக நியமனம் பெற்றுள்ளார்.

1710 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி புனித வியாகுல மாதா ஆலய வளவில் ஓலைகளைக் கொண்டு கோயில் ஒன்றைக் கட்டி திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

கண்டி நகரில் அவர் பணி செய்த காலத்தில் அவரை வேவு பார்ப்பவர் என்று எண்ணி அரச அதிகாரிகள் அவரை சிறையிலடைத்தனர்.அந்த சமயம் அவரோடு இருந்த ஏழு பேரை தூக்கிலிடப்பட்டனர். அன்றைய மன்னன் அவரை குற்றமற்றவர் என உணர்ந்து நான்கு ஆண்டு சிறைத் தண்டனைக்குப் பின்பு விடுதலை செய்தார்.

1697 ஆம் ஆண்டு கண்டி மக்கள் பிளேக் நோய்க்கும் பெரிய அம்மை நோய்க்கும் ஆளாகினர். புனித ஜோசப் வாஸ் அடிகளார் அந்த மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி மருத்துவ உதவிகளை செய்துள்ளார். அதன் பின்பு அவர் கத்தோலிக்க மக்கள் மத்தியில் பணியாற்றுவதற்கும் மன்னன் அனுமதி வழங்கினார்..

இறைதூது பணியில் இவர் பல்வேறு துன்புறுத்தல்கள் சோதனைகளை எதிர்கொண்ட போதும் கத்தோலிக்க மக்கள் மத்தியில் விசுவாசத்தைக் கட்டி யெழுப்புவதற்காக அயராது அர்ப்பணிப்புடன் உழைத்தார். பரிசுத்த வேதாகமத்தை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்த அருட்பணியாக்கோமே கொன்சல்வேஸ் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டவர்.

அத்துடன் இரு மொழிகளிலும் மக்கள் தமது செப வழிபாடுகளை மேற்கொள்வதற்கான நூல்களையும் அவர் இயற்றினார்.

இறுதியாக கிழக்கில் திருகோணமலை பகுதியில் மறைபணி ஆற்றிக் கொண்டிருந்தபோது அவர் சுகவீனமுற்றார்.

சில காலம் நோயுற்றிருந்த அவர் 1711 ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி இறைபத மெய்தினார். இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் புனித ஜோசப் வாஸ் அடிகளார் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரினால் அருளாளர் பட்டம் வழங்கி



கௌரவிக்கப்பட்டார். அதனையடுத்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் இலங்கைக்கான திருத்தூது பயணம் மேற்கொண்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் அப்போஸ்தலரான ஜோசப் வாஸ் அடிகளார் புனிதர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலங்கை மக்களுக்கான பாதுகாவலராக அவர் திகழ்கிறார். அவரது திருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை ஜனவரி 16ஆம் திகதி கொண்டாடி மகிழ்கின்றது.

லோரன்ஸ் செல்வநாயகம்...



## நாம் புகைப்பட நகல்கள் அல்ல

### திருத்தந்தை பிரான்சிஸ்

கடவுளுக்கென்று நாம் ஒதுக்கும் நேரமாகிய தினசரி செபத்தினால் கடவுள் நம் வாழ்விற்குள் நுழைய முடியும் என தன் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்

கடந்த வெள்ளிக்கிழமை தினசரி செபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி டுவிட்டர் குறுஞ்செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தினசரி செபத்தினால் நமது இதயங்கள் திறக்கப்பட்டு கடவுளின் அன்பு நம்மில் நிரப்பப்படும் எனவும் இதனால் நமது நம்பிக்கை வளர்க்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடவுளுக்கு என்று ஒதுக்கப்பட்ட தினசரி செபம் நமது வாழ்வில் கட்டாயம் தேவை. இதன் வழியாக அவர் நமது வாழ்வில் நுழைந்து, நமது இதயங்களைத் திறந்து அன்பினால் நம்மை தினசரி நிரப்புவதால் நமது நம்பிக்கை வளர்க்கப்படுகின்றது என்பதை திருத்தந்தையின் குறுஞ்செய்தி உணர்த்துகிறது.

நாம் ஒவ்வொருவரும் புகைப்பட நகல்கள் அல்ல அசல்கள் தனித்துவமானவர்கள் என்றும் அன்பின் அரவணைப்பில் மலரும் புன்னகையால் கடவுள் அன்பை பெறுபவர்கள் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

வத்திக்கானின் புனித திருத்தந்தை 23ஆம் யோவான் அமைப்பினரைச் சேர்ந்த ஏறக்குறைய 700 சிறார் மற்றும் இளையோரைச் சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

.கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் நமது பெயர் மற்றும் முகத்தால் தனித்துவமானவர்களாக இருக்கின்றோம் நாம் ஒரே மாதிரியாக இருக்கும் புகைப்பட நகல்கள் அல்ல, கடவுள் அன்பை பெறுபவர்கள்.

சில குறிப்பிட்ட வரம்புகளைக் கொண்ட நம்மை கடவுள் அன்பாக, முழுமையாக, இயேசுவின் சாயலாகப் பார்க்கின்றார் எனவும், அவருடைய அன்பினால் நாம் முழுமையடைந்து, வாழ உதவுகின்றார் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.




## கட்டைக்காடு புனித லூசியாள் ஆலய திருவிழா







புத்தளம், கட்டைக்காடு பூனைப்பிட்டி புனித லூசியாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா பங்குத்தந்தை ஜெயராசா அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. திருவிழா திருப்பலியையும் புனித லூசியாளின் திருச்சுரூப பவனியையும் திருவிழாவில் கலந்து கொண்ட விசுவாசிகளில் ஒரு பகுதியினரையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# நற்சான்று பகரக்கூடிய தூய வாழ்வுக்கான அழைப்பு

***"மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை "(மத் 11:9,11)***

திருவருகைக் காலம் மற்றும் கிறிஸ்து பிறப்புக் காலத்தைக் கடந்து நாம் பொதுக்காலத்தின் இரண்டாம் வாரத்திற்குள் நுழைகின்றோம். கடந்த ஞாயிறு வாசகங்கள் நாம் ஒருவருக்கொருவர் நற்சான்று பகரக்கூடிய அளவிற்குத் தூயவாழ்வு வாழ்வதற்கான அழைப்பை விடுகின்றன.

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் உலகம் முழுவதும் இறைவன் தரும் மீட்பைக் கொண்டு செல்வதற்கு ஒளியாக இறைவாக்கினரான ஏசாயாவை எடுத்துக்காட்டி, இப்பணியினை அவர் எளிதாகச் செய்யமுடியும் என்று ஆண்டவராம் கடவுள் அவரைக் குறித்துச் சான்றுபகர்கின்றார்.

அதேவேளையில், சிதறுண்ட மக்களை ஒன்று திரட்ட தாயின் கருப்பையிலிருந்தே தன்னை ஊழியனாகத் தேர்ந்துகொண்டதாகவும், ஆண்டவரின் பார்வையில் தான் மிகவும் மதிப்புப் பெற்றவன் என்றும் பேரன்பு கொண்ட கடவுளைப் பற்றி சான்று பகர்கின்றார் ஏசாயா.



நற்செய்தி வாசகத்தில் திருமுழுக்கு யோவான் நமதாண்டவர் இயேசுவைப் பற்றி நற்சான்று தருகின்றார்.

இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்; ஏனெனில், எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால், இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன்; தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகிறேன்" என்றார். தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது: "தூய ஆவி புறாவைப் போல வானிலிருந்து இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால், தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் 'தூய ஆவி இறங்கி யார்மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர்' என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன்; இவரே இறைமகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்.

இன்றைய உலகில், பொறுப்பில் இருக்கின்ற தலைவர்கள் தூங்கும்போதுகூட காலை ஆட்டிக்கொண்டே தூங்கவேண்டும். இல்லையேல் அவர் இறந்துவிட்டார் என்று கூறி இன்னொருவர் அவர் பதவியைப் பறித்துக்கொள்வார் என்று நகைச்சுவையாகக் கூறுவதுண்டு.

பல நேரங்களில் இதுவே உண்மையாகிப் போகின்றது. காரணம், நாற்காலி என்னும் பதவியை அடைவதற்காகவே இன்று எல்லாவிதமான அட்டூழியச்செயல்களும் அரங்கேற்றப்படுகின்றன. பொறுப்பு என்பது மக்களுக்குப் பணியாற்றுவதற்காகத்தான் என்பதை மறந்து, நாம் பெறும் பதவிகள் வழியாகப் பெயரும், புகழும், செல்வாக்கும் பெறவேண்டும் என்பதற்காக நிகழ்த்தப்படும் மனிதாபிமானமற்ற செயல்கள் மக்களின் வாழ்வை நிர்மூலமாக்கி வருகின்றன. இது துறவு வாழ்விலும் தற்போது அதிகம் காணப்படுகின்றது என்பது மிகவும் வருந்தத்தக்கது.

எருசலேமிலுள்ள யூதர்கள் குருக்களையும் லேவியர்களையும் திருமுழுக்கு யோவானிடம் அனுப்பி, "நீர் யார்?" என்று கேட்டபோது அவர், "நான் மெசியா அல்ல" என்று வெளிப்படையாகக் கூறி, மறுக்காமல் ஒப்புக்கொண்டார். "அப்படியானால் நீர் யார்? நீர் எலியாவா?" என்று கேட்டபோதும், அவர், "நானல்ல" என்றார். மூன்றாவது முறையாக "நீர் தாம் வர வேண்டிய இறைவாக்கினரா?" என்று கேட்ட போதும், அவர், "இல்லை" என்று மறுமொழி கூறியதுடன், தான் ஆண்டவருடைய வழிகளை செம்மைப்படுத்த வந்தவன் என்பதை மிகவும் தாழ்ச்சியோடு அவர்களிடத்தில் பதிவு செய்கின்றார் (.யோவா 1:1923).

திருமுழுக்கு யோவான் நினைத்திருந்தால் தானே மெசியா என்று கூறியிருக்க முடியும். காரணம், அவரைச் சுற்றியும் எண்ணற்ற மக்களும் சீடர்களும் இருந்தனர். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் ஒரு உண்மையான கதாநாயகனின் வெற்றிக்குத் திரைக்குப் பின்னாலிருந்து உழைக்கும் ஒது உண்மைத் தொண்டனாகவே தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றார்.

மேலும், தன்னை ஒரு விதையின் வெளிப்புறத்திலுள்ள ஓடாகவும், மீட்பராகிய இயேசுவை அவ்வோட்டின்உள்ளிருக்கும்உயிர்தரும் விதையாகவும் வெளிப்படுத்துவதாகவும் நாம் ஒப்பிடலாம். விதை ஒன்றை நாம் மண்ணில் நடும் போதுஎன்னநிகழ்கிறது?அதிலுள்ள விதை விருட்சமாகி வெளியே வரும்போது, தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையைச் செய்துமுடித்து விட்டதாகக் கருதி அந்த ஓடு விதையிலிருந்து விலகிக்கொள்கிறது.

அவ்வாறுதான் திருமுழுக்கு யோவானும் செயல்படுகிறார். இவரது மனத்தாழ்மையின் காரணமாகவே, திருமுழுக்கு யோவான் இறைவாக்கினரைவிட மேலானவர்என்றும்,மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை (மத் 11:9,11) என்றும் கூறி பெருமிதம் கொள்கின்றார் இயேசு.

உண்மையான அன்பிற்கும் நட்பிற்கும் சான்று பகரும் விதமாகப் பழைய ஏற்பாட்டில் அருமையான நிகழ்வொன்று வருகிறது. அதுதான் தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையே நிகழும் புனிதமான நட்பு. கோலியாத்தைக் கொன்றொழித்த தாவீதின்மீது மன்னர் சவுல் தொடக்கத்தில் அளவில்லா அன்பும் மதிப்பும் கொள்கின்றார். இதைக் கண்ட சவுலின் மகனான யோனத்தான் மிகவும் பூரித்துப் போய் தாவீதைத் தனது உயிரெனப் போற்றுகின்றார். அப்பகுதியை இப்போது நம் நினைவுக்குக் கொணர்வோம். பின்பு, யோனத்தான் தாவீதுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஏனெனில், அவரை தம் உயிரெனக் கருதி, அவர் மீது அன்பு கொண்டிருந்தார். யோனத்தான் தான் அணிந்திருந்த மேலங்கியைச் கழற்றி தாவீதுக்குக் கொடுத்தார். அத்துடன் தம் அங்கி, வாள் வில், கச்சை ஆகியவற்றையும் கொடுத்தார். தாவீது சவுல் தம்மை அனுப்பிய இடமெல்லாம் சென்று வெற்றியைக் கொணர்ந்தார்; அதனால் சவுல் அவரை படைத்தலைவராக்கினார் (1சாமு 18:35). ஆனால், தாவீது கொணர்ந்த எண்ணற்ற வெற்றிகளால் அவர்மீது பொறாமைக் கொள்ளும் மன்னர் சவுல், அவரைக் கொன்றுவிடத் தீர்மானிக்கின்றார். அப்போது தன் தந்தையின் கொடும் செயலை அறிந்த யோனத்தான் அவரிடம் சென்று தாவீதைக் குறித்து நற்சான்று பகர்கின்றார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம்...

# கிழக்கின் குரல்



# தேர்தலில் தகுதியானவர்களை தெரிவுசெய்ய வேண்டும்

## மட்டு. காந்திசேவா சங்கச் செயலாளர் தெரிவிப்பு


மட்டக்களப்பு விசேட நிருபர்

"உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நெருங்குவதினால் வேட்பாளர்கள் தமது வாக்கு வங்கிகளை அதிகரிப்பதற்காக வாக்குகளைச் சேகரிக்க முயல்வார்கள். இந்நிலையில், வேட்பாளர்களாகிய நாம், சரியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்" என, மட்டக்களப்பு காந்திசேவா சங்கத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எகட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்சமய ஐக்கிய பொங்கல் விழா, புதுமுகத்துவாரம் காயத்திரி கலாசார மண்டபத்தில் நேற்று (16) நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"உலகமானது அமைதியையும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் தேடுகின்றது" என்றார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் இன, மத ஒற்றுமையின் அடையாளமாகத் மாவட்ட பல்சமய ஒன்றியத்தை ஓர் ஊடகமாக நாம் பயன்படுத்தி வருகின்றோம். பல்லினங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கு பாரம்பரியத்தின் வெளிப்பாடாக ஐக்கிய பொங்கல் விழா ஓர் அடையாளமாக விளங்குகின்றது.

மேலும், முன்னைய பாரம்பரிய முறை மருவி இடைச்செருகல்கள் வருவதினால், எதிர்காலச் சந்ததியினருக்கு எமது சமய விழுமியங்களை தெரியப்படுத்தி வைக்கும் பாரிய பொறுப்பு எமக்கு உண்டு" என்றார்.

இதன்போது, காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பொங்கலைச் சிறப்பிக்கும் வகையில் கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

# வலம்புரிச்சங்கு வைத்திருந்த ஒருவர் வவுணதீவில் கைது



மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் வலம்புரிச் சங்கொன்றை விற்பனை செய்வதற்கு தயாராக இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் வவுணதீவு முகாமைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரட்டசோனமடு பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போதே, வலம்புரிச் சங்குடன் இச்சந்தேக நபர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு விசேட அதிரடிப்படையினரின் வவுணதீவு முகாமைச் சேர்ந்த அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபர், மேலதிக விசாரணைக்காக வவுணதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கன்னன்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் மின்சார வசதியற்ற மாணவர்களுக்கு சோலர் மின்குமிழ்கள்



காரைதீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய இடங்களில் மின்சார வசதியின்றியுள்ள 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின்குமிழ்களை மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் வழங்கி வைத்தது.

குறிஞ்சாக்கேணி, பாவற்கொடிச்சேனை உட்பட மூன்று கிராமங்களைச் சேர்ந்த இம்மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கையின் போது இரவு வேளைகளில் மின்சார வசதியின்றி மிகவும் சிரமத்தை எதிர்நோக்கிவந்தனர். இம்மாணவர்களின் நிலைமை தொடர்பாக தெரிய வந்த நிலையில், மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத் தலைவர் றோட்டரியன் பி.ரமணதாச தலைமையில் மேற்படி மாணவர்களுக்கு இம்மின்குமிழ்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

# தொற்றா நோய் கட்டுப்பாட்டை வலியுறுத்தி அம்பாறை முதல் அறுகம்பை வரை சைக்கிள் பவனி

காரைதீவு குறூப் நிருபர்



மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்றா நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக அது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் சைக்கிள் பவனியொன்று, அம்பாறை பொது வைத்தியசாலையின் ஏற்பாட்டில் அம்பாறை தொடக்கம் பொத்துவிலின் அறுகம்பை பிரதேசம் வரை கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அம்பாறை பொது வைத்தியசாலையின் ஊழியர்களுடன் படையினரும் இணைந்து இச்சைக்கிள் பவனியை நடத்தியதுடன், இதன்போது சத்துமிக்க உணவுகளை உட்கொள்ளுதல், நஞ்சற்ற உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடித்தல், உடற்பயிற்சி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு இச்சைக்கிள் பவனியில் ஈடுபட்டோர் மூலமாக விழிப்புணர்வூட்டப்பட்டது.

அத்துடன், தொற்றா நோய் தொடர்பாகவும் அந்நோய்களிலிருந்து எவ்வாறு விடுபடுவது தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்களும் சைக்கிள் பவனியில் ஈடுபட்டோர் மூலமாக விநியோகிக்கப்பட்டன. இதேவேளை, இச்சைக்கிள் பவனியில் ஈடுபட்டோருக்கு தாக சாந்தி அளிக்கும் வகையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தினூடாக காஞ்சிரங்குடா முகாமைச் சேர்ந்த படையினரின் உதவியுடன் இளநீர் வழங்கப்பட்டது.

# காடழிப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிம்பில்லா மலைப் பகுதியை அண்டிய காட்டுப்பகுதியில் காடழிப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மகேசன்புர பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், புல்மோட்டை வன இலகா அலுவலகத்திடம் இச்சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் (15) மாலை வேளையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் புல்மோட்டை முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் சுற்றிவளைப்பை நடத்திய போதே, காடழிப்பில் ஈடுபட்ட இச்சந்தேக நபர் அகப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் 8 மன்றங்களுக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் மு.கா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை, அம்மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த சனிக்கிழமை செலுத்தியது.

மட்டக்களப்பு மாநகர சபை, காத்தான்குடி நகர சபை, ஏறாவூர் நகர சபை, ஓட்டமாவடி பிரதேச சபை உட்பட 8 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குப் பொறுப்பான மு.கா.வின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான அலிசாஹீர் மௌலானா தலைமையில் மேற்படி கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன் பின்னர், வேட்புமனுப்பத்திரம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், 8 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யவுள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குப் பொறுப்பான மு.கா.வின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் அலிசாஹீர் மௌலானா தெரிவித்தார்.

கட்டுப்பணம் செலுத்துவதற்காக காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் மர்சூக் அகமட் லெவ்வை, முன்னாள் ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வின் இணைப்புச் செயலாளர் முகம்மட் றுஸ்வின் உள்ளிட்டோரும் சென்றிருந்தனர்.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பங்களிப்புகள் சமூகத்துக்கு தேவை

கல்முனை மத்திய தினகரன், ஒலுவில், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்



## பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தர் தெரிவிப்பு

தென்கிழக்கு பல்கலைக்கழகமானது ஒரு தேசிய பல்கலைக்கழகமாக மிளிர்ந்து நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஆற்ற வேண்டிய பங்களிப்புகள் ஏராளமாக உள்ளன என, அப்பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தர் பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

இலங்கை தேசத்தின் பல்கலைக் கழகங்களில் ஒன்றாக தென்கிழக்கு பல்கலைக்கழகம் சிறந்து விளங்க வேண்டும் எனவும், அவர் தெரிவித்தார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி பாயிஸ் முஸ்தபா, அப்பல்கலைக் கழகத்துக்கு முதல் தடவையாக கடந்த சனிக்கிழமை வருகை தந்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி மூலமான கற்கையை மேலும் விரிவுபடுத்துதல், ஆங்கில மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்களை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதன் மூலம் அவர்களை தொழிற்சந்தைக்கு ஏற்றவர்களாக உருவாக்குதல் வேண்டும்.

அத்துடன், இப்பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவுவதற்காக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் எடுத்து வரும் முயற்சிகளுக்கு என்னால முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்குத் தயாராக உள்ளேன்" என்றார்.

இந்நிகழ்வில் புதிய வேந்தருக்கு நினைவுச்சின்னத்தை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் வழங்கி வைத்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக சுற்றுச் சூழலை பார்வையிட்ட புதிய வேந்தர், பல்கலைக்கழத்தின் கலாநிதி அஷ்ரஃப் ஞாபகார்த்த நூலகத்துக்கும் விஜயம் செய்து நூலக வசதிகளையும் அறிந்து கொண்டார்.

# மேய்ச்சல்தரை பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுகோள்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்திலுள்ள பால் பண்ணையாளர்களுக்கு மேய்ச்சல்தரைகளை பெற்றுத் தருமாறு, நேற்று (16) அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கந்தளாய், கிண்ணியா, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பால் பண்ணையாளர்களுக்கு, கந்தளாய் சீனித் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பு மேய்ச்சலுக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், 500 ஏக்கர் நிலப்பரப்பு ஒரு சிலரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக, கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர். இவ்விடயத்தில் தமக்கு சுமூகமான தீர்வொன்றை பெற்றுத் தருமாறும், கந்தளாய் பிரதேச பால் பண்ணையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# அ.இ.மக்கள் காங்கிரஸ் அம்பாறையில் தனித்து போட்டி



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியானது, அம்பாறையில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக, அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட மக்களுடனான சந்திப்பு, ஒலுவிலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போதே, அவர் இதனைக் கூறினார். இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இம்முறை சிறந்த சமூக அக்கறை கொண்ட, திறமையான வேட்பாளர்களை களமிறக்க உள்ளோம். இதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க ஏதுவாக இருக்குமென்ற நம்பிக்கை எமக்குள்ளது" என்றார்.

# திருக்கோவிலில் பட்டத் திருவிழா



திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் தைப்பொங்கல் விழாவையொட்டி திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயக் கடற்கரையில் பட்டத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களினால் ஆறாவது தடவையாகவும் நேற்று முன்தினம் (15) பட்டத் திருவிழா நடத்தப்பட்டது. திருக்கோவில் பிரதேசத்தின் சிறப்பை வெளிக்கொண்டு வரும் வகையில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்களும் இளைஞர்களும் ஒன்றிணைந்து பல்வேறு வடிவங்களிலான பட்டங்களை வடிவமைத்து ஏற்றினர். இதன்போது, முதல் மூன்று இடங்களைப் பிடித்த வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பட்டத் திருவிழாவில் பெருமளவிலான பொது மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

# ஐ.தே.க.வின் கல்முனை முதன்மை வேட்பாளராக ஜெமீல்

கல்முனை விசேட நிருபர்

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கல்முனை மாநகர சபைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக களம் இறங்கவுள்ளார். அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட அவர், அக்கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டார்.

# அல் – ஹம்றா வித்தியாலய மாணவன் பொலிஸ் கடேட் சார்ஜன்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனான அப்துல் நிஸார் ஷராபத் இஸ்னி, பொலிஸ் கடேட் பிரிவில் சார்ஜன் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். இந்நிலையில், இம்மாணவனைப் பாராட்டும் நிகழ்வு, அப்பாடசாலையில் நேற்று (16) நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து 'பாடசாலை மாணவர்களை ஆளுமை உள்ளவர்களாகவும் நற்பிரஜைகளாக மாற்றி அமைத்தல்' எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய மாணவர் சிப்பாய் படையணியை நடத்தி வருகின்றது. இதில் மேற்படி மாணவன் பொலிஸ் கடேட் பிரிவில் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

# மட்டு. வறிய மக்களின் பிரச்சினைக்கு கோலாலம்பூர் மத்திய ரோட்டரிக் கழகத்தின் ஆதரவுடன் பாரிய உடன்படிக்கை

மலேசியாவிலுள்ள கோலாலம்பூர் மத்திய ரோட்டரிக் கழகத்தின் ஆதரவுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வறிய மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க உடன்படிக்கை ஒன்றை திங்கட்கிழமை 23 ஆம் திகதி கொழும்பில் மேற்கொள்ளவுள்ளனர்.

இது நடப்பாண்டுக்கான ரோட்டரிக் கழகத் தலைவர் புஞ்சியப்பு ரமணதாசவின் முழு முயற்சியில் நடைபெறவுள்ளது.

புஞ்சியப்பு ரமணதாச இவர் ஓய்வு பெற்ற கிழக்குப் பிராந்திய HNB வங்கியின் பிரதான முகாமையாளர், மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத்தின் நடப்பாண்டுக்கான தலைவருமாவார். அவருடைய சமூகப் பங்களிப்புக்கும் சமூக முயற்சிகளுக்கும் ஒரு தனித்துவமான இடமுண்டு. 1960 இல் இருந்து இற்றைவரையிலும் ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த ரோட்டரிக் கழகத் தலைவர்கள், அங்கத்தவர்கள் உட்படப் பல சமூகச் செயற்பாட்டாளர்கள் இம்மாவட்டத்தை கல்வி, பொருளாதாரம், சமூக மேம்பாட்டு ரீதியாக வளப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் நடப்பாண்டுக்கான ரோட்டரிக் கழகத் தலைவர் புஞ்சியப்பு ரமணதாசவின் பணியும் பங்களிப்பும் பின்தங்கிய மக்களுடைய வெற்றிக்கு ஏதுவாக அமைந்துள்ளன.

அவரின் சிறந்த திட்டமிடலும் நுட்பங்கள் பற்றிய தெளிந்த பார்வையும் இருப்பதன் காரணமாக புதுபுது வடிவங்களில் மக்களுக்கான உச்ச பலாபலனை வினைத்திறனான முறையில் பெற்றுக் கொடுக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வரும் ஒருவர். எனவே இந்த ரோட்டரிக் கழகத்தின் தலைவர் அவர்களின் இவ்வாறான இம்முயற்சிகளை பார்க்கின்ற போது நாம் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு சிறந்த சமூகப் பணியாளர் என்று கூறுவதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை. இவர் தினரகன் பத்திரிகைக்கு வழங்கிய கலந்துரையாடல்,,...














**நீங்கள் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத்தின் தலைவர் என்ற வகையில் பல சமூகப் பணிகளை ஆற்றி வரும் ஒருவர். எனினும் உங்கள் அறிமுகம் தொடர்பில் கூற முடியுமா?**



என் பெயர் புஞ்சியப்பு ரமணதாச ரமனன். 1986-1989 வரை கல்முனை கார்மெல் பற்றிமா கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினேன்.அதன் பின்பு 19901995 வரையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட செயலகங்களில் காணிப் பிரிவில் அரச உத்தியோகத்தராக கடமையாற்றினேன். அதன் பின்பு HNB வங்கியில் முகாமையாளராக பல இடங்களில் கடமையாற்றினேன். அக்கரைப்பற்று, கந்தளாய் போன்ற இடங்களில் கடமையாற்றி விட்டு கிழக்கு மாகாணத்திற்கான HNB வங்கியின் பிராந்திய முகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளேன்.

செலான் வங்கியிலும் கிழக்கு மாகாணத்திற்கான பிராந்திய முகாமையாளராக மூன்று வருடம் கடமையாற்றினேன். பின்னர் அதில் இருந்து ஓய்வு பெற்று விட்டு 2022 ஜூன் மாதத்தில் இருந்து ரோட்டரிக் கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு சமூகப் பணிகள் ஆற்றி வருகின்றேன். நான் ரோட்டரிக் கழகத்தின் 63 ஆவது தலைவராவேன்.

**உங்களது ரோட்டரிக் கழகம் பற்றிக் கூறுவீர்களா?**

1960 இல் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது . இப்பொழுது இதற்கு 63 வருடம் நிறைவடைந்துள்ளது. உலகில் இந்த ரோட்டரிக் கழகம் 1902 ஆம் ஆண்டில் சிக்காக்கோ நகரில் ஆரம்பிக்கப்பட்டது. எமது ரோட்டரிக் கழகம் இலங்கையில் ஒரு பலம் வாய்ந்த நான்காவது இடத்தைப் பெற்று சிறப்புடன் இயங்குகின்ற ஒரு கழகம்.

இந்த கழகம் தான் அம்பாறை, திருகோணமலை, கல்முனை, பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ள என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவற்றை அந்தந்த கால கட்டத்தில் பதவி வகித்த ரோட்டரிக் கழகத் தலைவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**உங்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற சமூப் பங்களிப்பு பற்றி கூறுவீர்களா?**

கடந்த தலைவர்கள் எத்தகைய செயற்றிட்டங்களை முன்னெடுத்தார்களோ அவர்களுடைய எண்ணப்பாங்குகளுக்கு ஏற்ப கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்றோம். வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் பஞ்சேனை என்ற கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலில் ஈடுபடும் ஒரு குடும்பத்தினருக்கு எட்டு இலட்சம் பெறுமதியான வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். காட்டு எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் காட்டு யானைகளின் தொல்லைகளினால் அடிக்கடி நெருக்கடியான நிலையை எதிர் நோக்கி வருகின்றனர். இதன் மூலம் மனித உயிர் இழப்புக்களும் அடிக்கடி ஏற்படும். குறிப்பாக சாந்தாமலை, பஞ்சேனை, வவுணதீவு, அடைச்சகல், சடையனாறு போன்ற எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் யானைத் தொல்லையை எதிர் நோக்கி வருகின்றனர். நீண்ட தூரம் ஒளி பாய்ச்சக் கூடிய 40 டோர்ச் வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளோம். இந்த டோர்ச்சின்மூலம்பயனாளிகள் அதிகளவு நன்மை அடைந்து வருகின்றனர். கட்டுமுறி என்ற இடத்தில் பெரியதொரு மருத்துவ முகாம் ஒன்றை செய்தோம். பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் தலைமையில் இது இடம்பெற்றது. அவரும் எங்களுடைய ரோட்டரிக் கழக அங்கத்தவர். ஆதலால் இந்த வேலைத் திட்டத்தை மிக இலகுவான முறையில் செய்யக் கூடியதாக இருந்தது.

வாழைச்சேனை, சுங்காங்கேணி பொது நூலகத்திற்கு 10 இலட்சம் பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்தோம்.

காட்டு எல்லைப் பகுதிகளில் வாழும் மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கு வறட்சி நிவாரண உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தோம். இவை ரூபா 5000 பெறுமதியான உலருவுணப் பொதிகளாகும்.தெரிவு செய்யப்பட்ட தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கி வைத்தோம். மின்சாரம் இல்லாத வீடுகளுக்கு மாணவர்களின் கற்றல் தேவையைக் கருத்திற் கொண்டு சோளார் மின் விளக்கு கையளித்து வருகின்றோம். இதுவும் இனங்காணப்பட்ட 65 மாணவர்களுக்கு வழங்கி வைத்தோம். ரூபா 5000 பெறுமதியான வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சோளார் விளக்குகள் வழங்கப்பட்டன.

இரண்டு சிறு நீரகங்களுக்கும் பாதிக்கப்பட்ட ஒரு இளம் தாய்க்கு ஒவ்வொரு மாதமும் ரூபா 15000 பெறுமதியான சத்துணவும் உலருணவும் வழங்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு புது விக்னேஸ்வரா வித்தியாலத்துக்கு ஒவ்வொரு மாதமும் பிரத்தியேக வகுப்புகளுக்கு மாதாந்தம் ரூபா 20,000 வழங்கி வருகின்றோம். இப்பாடசாலையில் மிகவும் பின்தங்கிய வறிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். பிள்ளைகளிடத்தில் இருந்து ஒரு பாடத்திற்கு ரூபா 50 அறவிடுவதாக அறிந்தோம். பிள்ளைகளிடத்தில் இருந்து எந்தக் கட்டணமும் அறவிடக் கூடாது என்ற அடிப்படையில் இந்த உதவியை வழங்கி வருகின்றோம்.





கர்ப்பிணிகளுக்கும் போசாக்கு குறைந்தவர்களுக்கும் 10 இலட்சம் பெறுமதியான உணவு வகைகள் வாழைச்சேனை, வாகரைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளோம். பிராந்தி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சுகுணனின் வழிகாட்டலுடன் என்னுடைய தலைமையில் மிக வெற்றிகரமான முறையில் இடம்பெற்றது.அதிவுஸ்திரேலியா நாட்டின் நிதி உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. வாகரைப் பிரதேசத்தில் நிறை குறைந்த போசாக்கு அற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கவுள்ளோம். இதனைத் தொடர்ந்து வழங்குவதற்கான முயற்சிகளை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றோம்.

அவுஸ்திரேலிய நாட்டின் ஒரு கழகத்தில் இருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட நைட்டரசன், ஒக்கிசன் சிலிண்டர் ஒன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கையளித்துள்ளோம்.

இவை தவிர வசதி குறைந்த குடுப்பங்களுக்கு மின் இணைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.ஒரு வீட்டு மின் இணைப்புக்காக 25,000, 30,000 பணம் செலவாகும்.

வன எல்லைக் கிராமங்களில் வாழும் விவசாயிகளிடத்தில் காணி இருக்கிறது. அதை உழது விதைத்து பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தை உழது பயிர்ச் செய்கை மேற்கொள்வற்கு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

**உங்களது கழகத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டம் குறித்து**

எதிர்வரும் நாட்களில் மலேசியா நாட்டின் ரோட்டரிக் கழகத்தினர் வருகை தரவுள்ளனர். அவர்கள் 15 துவிச்சக்கர வண்டிகள், 1000 அப்பியாசக் கொப்பிகள், யானைகளை விரட்டக் கூடிய நீண்ட தூரம் ஒளி பாய்ச்சக் கூடிய சக்தி வாய்ந்த டோர்ச்சுகள், 500 குடும்பங்களுக்கான சத்துணவுப் பொதிகளுடன் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.







இதன் போது மட்டக்களப்பு ரோட்டரிக் கழகமும், மலேசியா ரோட்டரிக் கழகமும் இணைந்து ஓர் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடவுள்ளனர். மருத்துவம், சுகாதாரம். கல்வி விடயம் தொடர்பில் உடன்படிக்கையொன்றை கொழும்பில் ஹில்டன் ஹோட்டலில் 23 ஆம் திகதி நடத்தவுள்ளோம்.இந்த உடன்படிக்கையின் மூலம் எமது பிரதேச மக்கள் அதிகளவு பயன்களை அடைய வாய்ப்புகள் உள்ளன.

இவை தவிர தொழு நோய் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் இந்நோய் பரவும் நிலை காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் வாரத்தில் மாணவர்கள் மத்தியில் தொழு நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வினை நடத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். இந்த வேலைத் திற்கு கிளிநொச்சிக் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வண பிதா யோசுவா அடிகளார் அனுசரணை வழங்கவுள்ளதாக எமக்குத் தெரிவித்தார்.. ஏனென்றால் கிழக்கு மாகாணத்தில் தொழு நோய் பரவுகின்ற விடயம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். ரோட்டரிக் கழகம் மட்டக்களப்பிலுள்ள சகல பாடசாலைகளிலும் இது தொடர்பிலான அறிவூட்டல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது. இது ஒரு பெரிய வேலைத் திட்டமாகும்.

இந்த வேலைத் திட்டத்தோடு போதைய ஒழிப்பு தொடர்பிலான கருத்தரங்குகளையும் செய்யவுள்ளோம். நமது நாட்டைப் பொறுத்தவரையில் போதை வஸ்துப் பாவனை அபாயகரமானதாக காணப்படுகிறது. இந்த இவ்விரு வேலைத் திட்டத்தையும் நாங்கள் ஒரு சமாந்தரமாக கொண்டு செல்லவுள்ளோம். குறிப்பாக போதை ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கும் கிளிநொச்சி காவேரிக் கலா மன்றமே உதவி வழங்கவுள்ளது.

**காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வண பிதா யோசுவா அடிகளார் தொடர்பில் உங்கள் கருத்து,...**

வண பிதா யோசுவா அடிகளார் சமூகப் பணிகளில் அதிக நாட்டமுள்ளவர். எந்த விடயமானாலும் மற்றவர்களுக்கும் என்ன தேவையென்று எல்லோரிடமும் கேட்டுக் கொண்டு செயற்படுகின்ற ஒரு நல்ல மனித நேயமிக்கவர். காவேரிக் கலா மன்றம் வழங்கும் நிதி அனுசரணையுடன் எமது ரோட்டரிக் கழகத்தின் ஊடாக நிறைய சமூகப் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற நிறைந்த மனம் உடையவர். அவர் எங்களோடு நேரடியாக வந்து கலந்து செயற்படுவது எங்களுக்கு உத்வேகத்தையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது. இது ஒரு பாராட்டத்தக்க விடயம். தன்னுடைய கிளிநொச்சி பிரதேசத்தில் மட்டும் நின்று செயற்படால் நாடளாவிய ரீதியில் இலங்கைத் தீவின் எல்லா இடங்களில் பரந்து பட்ட சேவைகளை அவர் வழங்கி வருகின்றார்.

**கொரோனா தொற்றுக் காலத்தில் நீங்கள் முன்னெடுத்த வேலைத் திட்டம் குறித்துக் கூறுவீர்களா?**

கொரோனா காலத்தில் முகக் கவசங்கள், செனிட்டைசர் போன்றவைகள் வழங்கப்பட்டன. கொரோனா தொற்றுக் காரணத்தினால் நாடு முடக்கப்பட்ட சூழ்நிலையில் தொழில் வாய்ப்பை இழந்த குடும்பத்தினர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இப்படி பல ஏராளமான சமூப் பணிகளை எமது ரோட்டரிக் கழகம் செய்து வருகின்றன.

இக்பால் அலி




# வலி.வடக்கில் 108 ஏக்கர் நிலத்தை விடுவிக்க இராணுவம் இணக்கம்

## யாழ். வந்த ஜனாதிபதியிடம் இராணுவம் தெரிவிப்பு

யாழ்.விசேட நிருபர்

வலிகாமம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகள் சுமார் 108 ஏக்கர் நிலப் பரப்பு இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படும் என இராணுவத்தினர் ஜனாதிபதி முன்னிலையில் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதில் முப்படை தளபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் , சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, க.வி.விக்னேஸ்வரன், கு.திலீபன், காதர் மஸ்தான், பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் காணி விடுவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு தரப்பினர், பலாலி கிழக்கு பகுதியில் சுமார் 108 ஏக்கர் காணி விடுவிக்கப்படும் என ஜனாதிபதி முன்னிலையில் தெரிவித்தனர்.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கீரிமலையில் அமைத்த மாளிகைக்கும், கீரிமலைக்கும் இடையில் உள்ள கடற்படை முகாம் அமைந்துள்ள பிரதேசம். காங்கேசன்துறை சந்திக்கும், கடற்படை முகாமுக்கும் இடையில் அமைந்துள்ள பிரதேசம். கிராமக்கோட்டு சந்திக்கும் அண்மையாகவுள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசம். பலாலி வடக்கில் அன்ரனிபுரத்துக்கு அண்மையாகவுள்ள இராணுவ முகாம் என்பன விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதில் பலாலி கிழக்கு பகுதியில் 1500 ஏக்கர் காணி விடுவிக்க வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் எம்.பி கோரினார். எனினும் விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு மாற்றப்பட்டதால் காணி விடுவிப்பது கடினம் எனவும் அப்பகுதியில் 10 மீற்றருக்கு உயர்வான கட்டடங்கள் கட்டமுடியாது எனவும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

அதற்கு சுமந்திரன் எம்.பி, அங்கு விவசாய நிலங்களே உள்ளன. முதலில் அதனை விடுவியுங்கள் என தெரிவித்தார். இதன்போது, அந்த பகுதியில் விடுவிக்கப்படகூடிய நிலங்கள் தொடர்பான அறிக்கையை இருவாரங்களுக்குள் ஆராய்ந்து தமக்கு அறிகையிடுமாறு தனது செயலகப் பிரதானி சாகல ரத்னாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

### இரண்டாம் மொழியாக பயின்ற

## சிங்கள மொழி பயிற்சி ஆசிரியர்களை இணைக்க வடக்கு ஆளுநர் பணிப்புரை

கோப்பாய் குறூப் நிருபர்



இரண்டாம் மொழி சிங்கள டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஒரு பகுதி மாணவர்களை வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்து, பௌத்த கலாசார பேரவையினால் நடாத்தப்பட்டு வருகின்ற இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்து மேலதிக பயிற்சிகளைப் பெற்ற மாணவர்களே இவ்வாறு பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்படவுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் இந்து பௌத்த பேரவையில் ஆசிரியராக கடமையாற்றும் ஆசிரியர் சுமெக்சன் கருத்து தெரிவிக்கையில்,

இந்து பௌத்த பேரவையினால் நடாத்தப்டுகின்ற இரண்டாம் மொழி சிங்கள பாடநெறியை சுமார் 23,000 மாணவர்கள் இதுவரை கற்றுள்ளனர். அதன் முதற்கட்டமாக மேலதிக பயிற்சிகளைப் பெற்ற ஒரு பகுதி மாணவர்களை தற்காலிக ஆசிரிய பயிற்சியாளராக வட மாகாண ஆளுநர் நியமிக்க நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றியை தெரிவிப்பதுடன் அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட இந்து பௌத்த கலாச்சார பேரவையின் பொதுச் செயலாளர் எம்.டி.எஸ். இராமச்சந்திரனுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்.

## கட்டுப்பணம் செலுத்தினர்



இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று திங்கட்கிழமை செலுத்தியது. யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் த.சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (யாழ். விசேட நிருபர்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று (16) செலுத்தியது. யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கட்டுப் பணம் செலுத்தினார். வட கிழக்கு மாகாணங்களில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கை சின்னத்தில் போட்டியிடவுள்ளது என அங்கஜன் இராமநாதன் எம்.பி தெரிவித்தார். (யாழ். விசேட நிருபர்)



கிளிநொச்சியில் உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று சமத்துவக் கட்சி செலுத்தியது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைககளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியது. (கிளிநொச்சி குறூப் நிருபர்)



வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஐக்கிய மக்கள் சக்தி செலுத்தியுள்ளது. அக்கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். நிரேஸ்குமார் தலைமையில் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்களால் வவுனியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று பணம் செலுத்தப்பட்டது. (கோவில் குளம் குறூப் நிருபர்)

## சீன அரசாங்கத்தின் நிதியுதவியில் விவசாயிகளுக்கு இலவச எரிபொருள்

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இலவசமாக அறுவடைக்குரிய டீசல் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (14) இடம்பெற்றது.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் 2022/2023 பெரும்போக அறுவடைக்கான எரிபொருள் விநியோகத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு ஹெக்ரேயருக்கு 15 லீற்றர் வீதம் அரை ஏக்கர், இரண்டரை ஏக்கருக்கு இடைப்பட்ட விவசாயிகள் இலவச எரிபொருள் விநியோகத்துக்காக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான எரிபொருள் வழங்கும் வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்கு குறைவான அளவில் விவசாயம் மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு அறுவடைக்குரிய டீசல் வழங்கும் வைபவம் பூநகரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துல சேன, மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு விவசாயிகளுக்கான டீசலை வழங்கி வைத்தனர்.

நிகழ்வில் பூநகரி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர், முகாமையாளர், கமல சேவை நிலையத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டு எரிபொருள் வழங்களை மேற்கொண்டனர்.

## விடத்தல் தீவு கிராமத்துக்கான வரவேற்பு வளைவு திறந்து வைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் விடத்தல் தீவு கிராமத்திற்குச் செல்லும் பிரதான நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள விடத்தல் தீவு கிராமத்திற்கான உள் நுழைவு வரவேற்பு வளைவு நேற்று முன்தினம் (15) ஞாயிற்றுக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

சமூகங்களின் ஒற்றுமைக்கு உதாரணமாக திகழும் விடத்தல்தீவு கிராமத்தின் தனித்துவமான சிறப்புகளை மெருகேற்றும் வகையில் புலம் பெயர்ந்த மற்றும் புலத்திலுள்ள விடத்தல் தீவு மண்ணின் மைந்தர்களின் நிதிப்பங்களிப்பினூடாகவும், விடத்தல்தீவு புதிய அபிவிருத்தி அமைப்பின் நெறிப்படுத்தலின் ஊடாகவும் பிரமாண்ட வரவேற்பு வளைவானது அமைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பொறியியலாளரும் மன்னார் தொழில்நுட்ப கல்லூரியின் விரிவுரையாளருமான சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் ஆகியயோர் கலந்து கொண்ட இத்திறப்பு விழாவில் சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ். விசேட நிருபர்




யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில், வாள் முனையில் கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அச்சுவேலி பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை அநாதரவான நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த மோட்டார் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாள் முனையில் வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் என கண்டறியப்பட்டது. மோட்டார் சைக்கிளை வழிப்பறி செய்த கொள்ளை கும்பல் தொடர்பிலும், மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி ஏதேனும் சட்டவிரோத செயலில் ஈடுபட்டனரா என்பது தொடர்பில் அச்சுவேலி மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வல்வெட்டித்துறையில் பட்டத் திருவிழா

யாழ்.விசேட நிருபர்



வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறையில் தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு ஆண்டுதோறும் இடம்பெறும் ராட்சத ' விசித்திர பட்டத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் சிறப்பாக இடம்பெற்றது.

அதன் போது, போட்டியாளர்கள் பலவிதமான வண்ணங்களில் விசித்திர பட்டங்கள் செய்து அதை பறக்க விட்டனர்.

இதில் முதலாம் இடத்தை உருமாறும் மர்ம தாக்குதல் விமானத்தை போன்று பட்டத்தை அமைத்த ம.ஹாசன் என்பவர் பெற்றுக்கொண்டார். இவருக்கு இரண்டு பவுண் தங்க ஆபரணமும் பரிசாக வழங்கப்பட்டது. இவர் 6 ஆவது தடவையாக முதலாம் இடத்தை பெற்றுள்ளார். இரண்டாம் இடத்தை உழவு இயந்திரம் மரநடுகை திட்டத்தை போன்று பட்டத்தை அமைத்த ம. பிரசாந் என்பவர் பெற்றுக்கொண்டார்.

மூன்றாம் இடத்தை மேள தாளங்களுடன் கூடிய ஆகாய விசித்திர போர்கல அரங்கம் போன்று பட்டத்தை அமைத்த நிரோசன் சின்னா என்பவர் பெற்றுக்கொண்டார்.



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வவுனியா மாவட்டத்தின் அந்தந்த வட்டார ஸ்ரீ.ல.பொ.பெரமுன வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பமிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (15) வவுனியா தேக்கவத்தையில் இடம்பெற்றது. நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முன்னாள் காணியமைச்சர் எஸ்.எம். சந்திரசேன மற்றும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பெறுகை அறிவித்தல்

# இலங்கை இராணுவம்

## 2023ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

2023ஆம் வருடத்தினுள் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

அ, தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சகல பொருட்களும் இலங்கை இராணுவத்தின் ராகம யுத்தோபகரண களஞ்சியசாலை அல்லது வெயாங்கொட இராணுவ துணிகள் களஞ்சியசாலைக்கு போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. இதில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி (1000 மணித்தியாலம்) முதல் பிற்பகல் 3.00 மணி (1500 மணித்தியாலம்) வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள (வாகனத் தரிப்பிட இடப்பரப்பு) யுத்தோபகரண சேவை பணிப்பாளர் சபையிடமிருந்து அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையம், இலங்கை இராணுவ நிதிப் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை கட்டாயத் தேவைப்பாட்டின் கீழ் உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2023ஆம் வருடத்தில் (பொருள் வகை) விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்’’ கேள்வி இலக்கம் (DOS/2023/.............) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ICB | அளவு | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| | | **துணிகள்** | | | | | |
| 1 | DOS/2023/1000 | உரு மறைப்புத் துணி CR/SF வகை 58''/60'' | NCB | 30,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 13,000.00 |
| 2 | DOS/2023/1001 | கறுப்புநிற டிரில் பருத்தித் துணி 58''/60'' | NCB | 12,500 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 3 | DOS/2023/1002 | இன்டிகோ நீல நில கம்பளித் துணி 58''/60'' | ICB/NCB | 6,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/03/2023 | 20/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 4 | DOS/2023/1003 | கடும் பச்சைநிற கம்பளித் துணி 58''/60'' | ICB/NCB | 1,500 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/03/2023 | 20/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 5 | DOS/2023/1004 | காக்கி நிற கம்பளித் துணி 58''/60'' | ICB/NCB | 1,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/03/2023 | 20/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 6 | DOS/2023/1005 | ஸ்வெட் மெரூன் துணி 58''/60'' | ICB/NCB | 1,200 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/03/2023 | 20/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 7 | DOS/2023/1006 | ஸ்காலெட் கம்பளித் துணி 58''/60'' | ICB/NCB | 1,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/03/2023 | 20/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 8 | DOS/2023/1007 | ட்வில் வெள்ளைத் துணி 58''/60'' (காற்சட்டைத் துணி) | NCB | 11,500 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 9 | DOS/2023/1008 | Rib - Stop கறுப்புத் துணி CR/SF வகை 58''/60'' | NCB | 25,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 10 | DOS/2023/1009 | பேஜ் நிற டீ சேர்ட் துணி | NCB | 4,910 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 11 | DOS/2023/1010 | பொலியெஸ்டர் வெள்ளைத் துணி 58''/60'' (காற்சட்டைத் துணி) | NCB | 10,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 12 | DOS/2023/1011 | கறுப்புநிற காற்சட்டைத் துணி - 58''/60'' | NCB | 5,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 13 | DOS/2023/1012 | வெள்ளைநிற பொலியெஸ்டர் துணி 45'' (சேர்ட் துணி) | NCB | 5,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 14 | DOS/2023/1013 | கடும் பச்சை பொலியெஸ்டர் துணி 58''/60'' | NCB | 2,500 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 15 | DOS/2023/1014 | டெசர்ட் உருமறைப்பு பேஜ் நிற துணி | NCB | 17,000 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 16 | DOS/2023/1015 | உருமறைப்பு டீ-சேர்ட் | NCB | 36,100 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 17 | DOS/2023/1016 | வெள்ளை அரைக்கை PT டீ சேர்ட் மகளிர் வகை | NCB | 6,000 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 18 | DOS/2023/1017 | பொலியெஸ்டர் கொட்டன் காலுறைகள் (Terry) ஒலிவ் பச்சை | NCB | 100,000 சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 12,500.00 |
| 19 | DOS/2023/1018 | பொலியெஸ்டர் கொட்டன் காலுறைகள் (Terry) அதிகாரிகளுக்கான வெள்ளை | NCB | 10,000 சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 20 | DOS/2023/1019 | வெள்ளை நிற குளியல் துவாய்கள் | NCB | 10,000 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 21 | DOS/2023/1020 | முழுக்கை வெள்ளைநிற சேர்ட்கள் | NCB | 750 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 22 | DOS/2023/1021 | மடிக்கக்கூடிய மெத்தைகளுக்கான PVC முலாமிடப்பட்ட துணி | NCB | 16,670 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 23 | DOS/2023/1022 | மடிக்கக்கூடிய மெத்தைகளுக்கான (ஒலிவ் பச்சைநிற) துணி | NCB | 17,640 மீற்றர்கள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 24 | DOS/2023/1023 (a) | தங்க நிற நட்சத்திர தர இலச்சினை (5µ தங்க முலாம்) | NCB | 10,000 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 25 | DOS/2023/1024 (a) | மேஜர் தர இலச்சினை - வெள்ளி (குரோமியம் முலாம்) | NCB | 500 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | நட்சத்திர தர இலச்சினை - வெள்ளி (குரோமியம் முலாம்) | | 5,000 எண்ணிக்கை | | | |
| | | நட்சத்திர தர இலச்சினை - கறுப்பு (Oxdized) | | 1,400 எண்ணிக்கை | | | |
| 26 | DOS/2023/1025 (a) | ‘‘கெமுனு’’ தோற்பட்டை இலச்சினை வெள்ளி | NCB | 900 சோடிகள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | கொமாண்டோ கிரஸ்ட் இலச்சினை | | 500 எண்ணிக்கை | | | |
| 27 | DOS/2023/1026 (a) | லெப்டினன்ட் கேர்ணல் பதவி நிலை மற்றும் அதற்கு கீழான தரநிலைகளுக்கான தங்க நிற பொதுச் சேவை பொத்தான்கள் | NCB | 100,000 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 28 | DOS/2023/1027 (a) | லெப்டினன்ட் கேர்ணல் பதவி நிலை மற்றும் அதற்கு கீழான தரநிலைகளுக்கான வெள்ளி நிற பொதுச் சேவை பொத்தான்கள் | NCB | 25,000 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | லெப்டினன்ட் கேர்ணல் பதவி நிலை மற்றும் அதற்கு கீழான தரநிலைகளுக்கான தங்க நிற Screw Type பொதுச் சேவை பொத்தான்கள் | | 2,000 எண்ணிக்கை | | | |
| | | லெப்டினன்ட் கேர்ணல் பதவி நிலை மற்றும் அதற்கு கீழான தரநிலைகளுக்கான வெள்ளி நிற Screw Type பொதுச் சேவை பொத்தான்கள் | | 1,000 எண்ணிக்கை | | | |
| 29 | DOS/2023/1028 (a) | ஆயுதப் படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | NCB | 100 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | பொறியியல் ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 300 எண்ணிக்கை | | | |
| | | சிக்னல் ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 100 எண்ணிக்கை | | | |
| | | காலாட்படை மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 1,280 எண்ணிக்கை | | | |
| | | சிங்க ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 200 எண்ணிக்கை | | | |
| 30 | DOS/2023/1029 (a) | கஜபா ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | NCB | 200 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| | | விஜயபாகு காலாட்படை ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 175 எண்ணிக்கை | | | |
| | | கொமாண்டோ ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 65 எண்ணிக்கை | | | |
| | | விசேட படை ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 55 எண்ணிக்கை | | | |
| | | பொறிமுறை காலாட்படை ரெஜிமென்ட் மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 35 எண்ணிக்கை | | | |
| | | மிலிட்டரி நுண்ணறிவு படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 70 எண்ணிக்கை | | | |
| | | சேவை படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 100 எண்ணிக்கை | | | |
| | | மருத்துவ படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 100 எண்ணிக்கை | | | |
| | | மிலிட்டரி பொலிஸ் படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 65 எண்ணிக்கை | | | |
| | | மகளிர் படையணி மாதிரி உற்சவ பீக் தொப்பிகள் | | 140 எண்ணிக்கை | | | |
| 31 | DOS/2023/1030 (a) | கெமுனு கண்காணிப்பு பின் டைப் இலச்சினை தொப்பிகள் | NCB | 500 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | இலங்கை இராணுவ படையணியின் விவசாயம் மற்றும் கால்நடை பின் டைப் இலச்சினை தொப்பிகள் | | 500 எண்ணிக்கை | | | |
| 32 | DOS/2023/1031 (a) | கஜபா ரெஜிமன்ட் பின் டைப் கொலர் இலச்சினை | NCB | 1,000 சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | அதிகாரிகள் மற்றும் கட்டளை அதிகாரிகளுக்கான கெமுனு மத்திம பின்டைப் கொலர் இலச்சினை | | 150 சோடிகள் | | | |
| | | இலங்கை காலாட்படை அதிகாரி பின் டைப் கொலர் இலச்சினை | | 100 சோடிகள் | | | |
| | | இலங்கை சிங்க ரெஜிமன்ட் அதிகாரிகள் பின் டைப் கொலர் இலச்சினை (அதிகாரிகள் மற்றும் கட்டளை அதிகாரிகள்) | | 150 சோடிகள் | | | |
| 33 | DOS/2023/1032 (a) | இலங்கை பொறியியலாளர் பின் டைப் கொலர் இலச்சினை | NCB | 500 சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | இலங்கை காலாட்படை ஏனைய தரநிலை பின் டைப் கொலர் இலச்சினை | | 250 சோடிகள் | | | |
| | | இலங்கை சிங்க ரெஜிமென்ட் ஏனைய அதிகாரபூர்வ பின் வகை கொலர் இலச்சினை | | 500 சோடிகள் | | | |
| | | விஜயபாகு காலாட்படை ரெஜிமென்ட் பின் டைப் கொலர் இலச்சினை | | 250 சோடிகள் | | | |
| 34 | DOS/2023/1033 (a) | 4,4A,6B இலக்க உடைகளுக்கான பச்சை நிற நைலோன் இடை வார்கள் | NCB | 3,870 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | 4,4A,6B இலக்க உடைகளுக்கான கறுப்பு நைலோன் இடை வார்கள் | | 2,150 எண்ணிக்கை | | | |
| 35 | DOS/2023/1034 (a) | இடதுபக்க தோற்பட்டைக்கு பிரிகேடியர்கள்/ஜெனரல்கள் அணியும் தங்க நிற Aiguillette | NCB | 150 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 36 | DOS/2023/1035 (a) | இடதுபக்க தோற்பட்டைக்கு கேர்ணல்கள்/லெப்டினன்கள் அணியும் தங்க மற்றும் சிவப்பு நிற Aiguillette | NCB | 250 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 37 | DOS/2023/1036 (a) | இடதுபக்க தோற்பட்டைக்கு ஜெனரல் தலைமை துணைகள் அணியும் தங்க மற்றும் சிவப்பு நிற Aiguillette | NCB | 80 எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | 2A இலக்க உடைக்கு பிரிகேடியர் மற்றும் உயர் அதிகாரிகள் அணியும் தங்க நிற Half Aiguillette | | 50 எண்ணிக்கை | | | |
| 38 | DOS/2023/1037 (a) | மேஜர் ஜெனரல் அதிகாரிகள் மாதிரிக்கான சிறிய நட்சத்திரம் சகிதம் ஜோர்ஜட் பெச்சஸ்கள் | NCB | 75 சோடிகள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | மேஜர் ஜெனரல்களுக்கான சிறிய தங்க நட்சத்திரம் சகிதம் ஜோர்ஜட் பெச்சஸ்கள் | | 15 சோடிகள் | | | |
| | | ஜெனரல் அதிகாரிகள் மத்திம மாதிரிக்கான ஜோர்ஜட் பெச்சஸ்கள் | | 200 சோடிகள் | | | |
| | | கேர்ணல்களுக்கான சிறிய ஜோர்ஜட் பெச்சஸ்கள் (SLAMC Ptn) | | 30 சோடிகள் | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 39 | DOS/2023/1038 (a) | கோ்ணல்களுக்கான சிறிய மாதிரி ஜோர்ஜட் பெச்சஸ்கள் | NCB | 950 | சோடிகள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | கேர்ணல் / பிரிகேடியர்களுக்கான மத்திம மாதிரி ஜோர்ஜட் பெச்சஸ்கள் | | 1,000 | சோடிகள் | | | |
| 40 | DOS/2023/1039 (a) | கேர்ணல் / பிரிகேடியர்களுக்கான பெரிய மாதிரி ஜோர்ஜட் பெச்சஸ்கள் | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 41 | DOS/2023/1040 (a) | Sashes Silk Maroon கேர்ணல் / பிரிகேடியர்களுக்கானது | NCB | 485 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 42 | DOS/2023/1041 (a) | கேர்ணல் மற்றும் அதற்கு கீழான அதிகாரிகளுக்கான தங்க நிற தோற்பட்டை அணிகலன் | NCB | 1,500 | சோடிகள் | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 43 | DOS/2023/1042 (b) | கறுப்புநிற மகளிர் கைப் பைகள் | NCB | 2,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 44 | DOS/2023/1043 (b) | ரைபள் வார்கள் T 56 | NCB | 12,100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 45 | DOS/2023/1044 (b) | கறுப்புநிற ஹைலெக் பூட்கள் | NCB | 25,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 20,500.00 |
| 46 | DOS/2023/1045 (b) | கறுப்புநிற ஆயுதப்படை மாதிரி ஹைலெக் பூட்கள் | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 47 | DOS/2023/1046 (b) | பழுப்புநிற பீரங்கி மாதிரி ஹைலெக் பூட்கள் | NCB | 1,500 | சோடிகள் | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 48 | DOS/2023/1047 (b) | அதிகாரிகள் ஜொக்கிங்/விளையாட்டு சப்பாத்துகள் | NCB | 2,540 | சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 12,500.00 |
| 49 | DOS/2023/1048 (b) | Shoes Leather Black Brauge Upper | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 50 | DOS/2023/1049 (b) | அதிகாரிகளுக்கான கறுப்புநிற பெடன்ட் தோற் சப்பாத்துகள் | NCB | 600 | சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 51 | DOS/2023/1050 (b) | டெசர்ட் பூட் | NCB | 2,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 52 | DOS/2023/1051 (b) | கறுப்பு நிற Boot Stud | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 53 | DOS/2023/1052 (b) | ஆயுதப்படை மாதிரி கறுப்பு நிற Boot Stud | NCB | 250 | சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 54 | DOS/2023/1053 (b) | Air Mobile மாதிரி ஸ்வேட் பச்சை நிற ஹைலெக் பூட்கள் | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 55 | DOS/2023/1054 (b) | கமாண்டோ மாதிரி ஸ்வேட் பிறவுன் ஹைலெக் பூட்கள் | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 56 | DOS/2023/1055 (b) | ஸ்வேட் கறுப்பு நிற SF மாதிரி ஹைலெக் பூட்கள் | NCB | 1,000 | சோடிகள் | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 57 | DOS/2023/1056 (b) | Belt Web White (WE37) Corps of Military Police Pattern (Included - Cross Strap Web White, Joint strap Web White, Pouches Web White , Pistol Holster Web with Lenyard White) | NCB | 500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| **கவர் அவுட்டர் / டியூப் இன்னர் / பெற்றரி** | | | | | | | | |
| **தொ. இல.** | **கேள்வி அடையாள இலக்கம்** | **விபரங்கள்** | **NCB/ICB** | **அளவு** | | **விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்** | **விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்** | **மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)** |
| 58 | DOS/2023/2000 | கவர் அவுட்டர் 205 R 16 | NCB | 88 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 59 | DOS/2023/2001 | கவர் அவுட்டர் 205/60 R 16 | NCB | 129 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 60 | DOS/2023/2002 | கவர் அவுட்டர் 215 R 15 | NCB | 116 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 61 | DOS/2023/2003 | கவர் அவுட்டர் 215/75 R 15 | NCB | 81 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 62 | DOS/2023/2004 | கவர் அவுட்டர் 285/75R16 | NCB | 25 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 63 | DOS/2023/2005 | கவர் அவுட்டர் 750 R 16 (14/16 PR) | NCB | 76 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 64 | DOS/2023/2006 | கவர் அவுட்டர் 750 x 16 (12/14 PR) | NCB | 287 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 65 | DOS/2023/2007 | கவர் அவுட்டர் 31 x 10.5 R 15 | NCB | 51 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 66 | DOS/2023/2008 | கவர் அவுட்டர் 265/70 R 16 | NCB | 44 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 67 | DOS/2023/2009 | கவர் அவுட்டர் 235/85 R 16 | NCB | 79 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 68 | DOS/2023/2010 | கவர் அவுட்டர் 255/70 R 15 | NCB | 44 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 69 | DOS/2023/2011 | கவர் அவுட்டர் 900x20 (14 PR High way Type) | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 70 | DOS/2023/2012 | கவர் அவுட்டர் 900x20 (16 PR) | NCB | 199 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 71 | DOS/2023/2013 | கவர் அவுட்டர் 1000x20 (16 PR Rib Type) | NCB | 123 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 72 | DOS/2023/2014 | கவர் அவுட்டர் 1000x20 (16 PR Lug Type) | NCB | 105 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 73 | DOS/2023/2015 | கவர் அவுட்டர் 600 x 16 (8 PR) | NCB | 125 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 74 | DOS/2023/2016 | டியூட் இன்னர் 900x20 | NCB | 249 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 75 | DOS/2023/2017 | பெற்றரி 12V 90 AMP (Light Veh &Tractors) (Semi Maintenance Free) | NCB | 270 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 76 | DOS/2023/2018 | பெற்றரி 12V 200 AMP (Semi Maintenance Free) | NCB | 167 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 77 | DOS/2023/2019 | பெற்றரி 12V 100 AMP (Semi Maintenance Free) | NCB | 108 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 78 | DOS/2023/2020 | பெற்றரி 12V 150 AMP (Semi Maintenance Free) | NCB | 178 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 79 | DOS/2023/2021 | பெற்றரி 12V 120 AMP (Semi Maintenance Free) | NCB | 259 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 80 | DOS/2023/2022 | பெற்றரி 12V 55 AMP (Semi Maintenance Free) | NCB | 30 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 81 | DOS/2023/2023 | பெற்றரி 12V 90 AMP (L) (Semi Maintenance Free) | NCB | 130 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 82 | DOS/2023/2024 | பெற்றரி 12V 70 AMP (Semi Maintenance Free) | NCB | 96 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 83 | DOS/2023/2025 | கவர் அவுட்டர் 825 x 20 (14 PR) | NCB | 19 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 28/02/2023 | 01/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 84 | DOS/2023/2026 | கவர் அவுட்டர் 750 x 16 (8 PR) | NCB | 40 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 28/02/2023 | 01/03/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| **காகிதாதிகள்** | | | | | | | | |
| **தொ. இல.** | **கேள்வி அடையாள இலக்கம்** | **விபரங்கள்** | **NCB/ICB** | **அளவு** | | **விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்** | **விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்** | **மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)** |
| 85 | DOS/2023/3000 | A4 80 gsm புகைப்படப் பிரதி தாள்கள் (ஒரு பெக்கட்டில் 500 தாள்கள்) | NCB | 15,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 12,500.00 |
| 86 | DOS/2023/3001 | A3 80 gsm புகைப்படப் பிரதி தாள்கள் (ஒரு பெக்கட்டில் 500 தாள்கள்) | NCB | 12,500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 13,000.00 |
| 87 | DOS/2023/3002 | கேஸ் கவர்கள் 230 mm x 350 mm | NCB | 100,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 88 | DOS/2023/3003 | திரவ கம் போத்தல்கள் 750 ml | NCB | 10,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 89 | DOS/2023/3004 | 10ஆம் இலக்க ஸ்டெப்ளர்கள் | NCB | 1,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | 10ஆம் இலக்க ஸ்டெப்ளர்கள் கம்பி பின்கள் (1000 கம்பி பின்கள்) | NCB | 25,000 | எண்ணிக்கை | | | |
| 90 | DOS/2023/3005 | ஒரு பக்க நீல நிற கார்பன் தாள்கள் 13" x 8 $^{1}/_{2}$'' (ஒரு பெக்கட்டில் 100 தாள்கள்) | NCB | 2,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 91 | DOS/2023/3006 | 369ஆம் இலக்க ஸ்டெப்ளர்கள் | NCB | 1,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | 369ஆம் இலக்க ஸ்டெப்ளர்கள் கம்பி பின்கள் (1000 கம்பி பின்கள்) | NCB | 15,000 | எண்ணிக்கை | | | |
| 92 | DOS/2023/3007 | கணனி தாள்கள் 132 15 x 11 columm Single (1000 தாள் ) பெக்கட்டுகள் | NCB | 1,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 93 | DOS/2023/3008 | Toner Toshiba E Studio 2809 A (T 2309 P) | NCB | 300 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 94 | DOS/2023/3009 | Ribbon Cartridge Epson LQ 2090 | NCB | 1,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 95 | DOS/2023/3010 | Toner Canon NPG 51 for Canon IR 2525 Photo Copy Machine | NCB | 300 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 96 | DOS/2023/3011 | Toner Toshiba E Studio 4518 A (T 5018 P) | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 97 | DOS/2023/3012 | Toner Toshiba T - 2323 P | NCB | 300 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 98 | DOS/2023/3013 | Toner For Lexmark B 2236 | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 99 | DOS/2023/3014 | Toner Canon NPG 26 (Canon IR 3245 Photo Copy Machine) | NCB | 75 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| **தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள்** | | | | | | | | |
| **தொ. இல.** | **கேள்வி அடையாள இலக்கம்** | **விபரங்கள்** | **NCB/ICB** | **அளவு** | | **விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்** | **விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்** | **மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)** |
| 100 | DOS/2023/4000 | 4 டிரோயர்கள் உருக்கு பைலிங் கெபினட் | NCB | 75 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 101 | DOS/2023/4001 | மரத்தாலான இலிகிதர் மேசை | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 102 | DOS/2023/4002 | பின்பக்கம் உயர்வான கதிரைகள் | NCB | 75 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 103 | DOS/2023/4003 | சிரேஷ்ட அதிகாரிகளுக்கான மரத்தாலான மேசை (5' x 3') | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 104 | DOS/2023/4004 | கனிஷ்ட அதிகாரிகளுக்கான மரத்தாலான மேசை (4 $^{1}/_{2}$' x 2 $^{1}/_{2}$') | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 105 | DOS/2023/4005 | பெடஸ்டல் மின் விசிறிகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 106 | DOS/2023/4006 | Low Back கதிரைகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 107 | DOS/2023/4007 | மரத்தாலான இலிகிதர் கதிரைகள் | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 108 | DOS/2023/4008 | கைப்பிடியுடனான கணனி கதிரைகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 109 | DOS/2023/4009 | கணனி மேசைகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 110 | DOS/2023/4010 | இரட்டைக் கதவு உருக்கு அலுமாரிகள் (பைலிங்) | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 111 | DOS/2023/4011 | விரிவுரை மண்டப மரக் கதிரைகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 112 | DOS/2023/4012 | விருந்தினர் கதிரைகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |

| மூலதன பொருட்கள் (மின்சார / இலத்திரனியல் உபரகணங்கள் மற்றும் இயந்திராதிகள்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
| 113 | DOS/2023/4500 | குளிர்சாதனப் பெட்டிகள் (8 கன அடி கொள்ளளவு) | NCB | 30 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 114 | DOS/2023/4501 | உறைநிலை குளிரூட்டி (ஏறக்குறைய 20" கன அடி கொள்ளளவு) | NCB | 10 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 115 | DOS/2023/4502 | டிஜிட்டல் டிஸ்பிளே சகிதமான பிளட்போர்ம் தராசு (ஏறக்குறைய 300 Kg) | NCB | 10 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 116 | DOS/2023/4503 | டிஜிட்டல் மேசையில் வைக்கும் நிறுக்கும் தராசு (15 Kg) | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 117 | DOS/2023/4504 | மின்சார பான் அவண் (கொள்ளளவு 100 - 120 பான்கள்) | NCB | 25 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 118 | DOS/2023/4505 | ரைஸ் ஸ்டீமர் 50 Kg (Gas) | NCB | 25 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 4,000.00 |
| 119 | DOS/2023/4506 | மின்சார பேக்கரி டெக் அவண் (6 தட்டுகள் - 120 பான்கள்) | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 120 | DOS/2023/6401 | அட்டனா சகிதம் வர்ண LED தொலைக்காட்சிப் பெட்டிகள் (55") | NCB | 08 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 121 | DOS/2023/6402 | அட்டனா சகிதம் வர்ண LED தொலைக்காட்சிப் பெட்டிகள் (43") | NCB | 30 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 122 | DOS/2023/4516 | Long Throw மல்டி மீடியா புரஜெக்டர்கள் (திரை சகிதம்) | NCB | 60 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 123 | DOS/2023/4517 | நிலையான கமராக்கள் | NCB | 40 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 124 | DOS/2023/4518 | வீடியோ கமராக்கள் (Cam coders) | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |

| களஞ்சியசாலை (ORDNANCE & BARRACKS) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
| 125 | DOS/2023/6000 | டபள் லேயர் நுரை மெத்தைகள் 6'x3'x4" | NCB | 300 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 126 | DOS/2023/6001 | டபள் லேயர் நுரை மெத்தைகள் 6'x 2 1/2' x 4" | NCB | 1,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 127 | DOS/2023/6002 | தலையணைகள் | NCB | 10,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 128 | DOS/2023/6003 | இரண்டு தலையணை உறைகள் சகிதம் கோடுகள் கொண்ட ஒற்றை படுக்கை விரிப்புகள் | NCB | 500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | இரண்டு தலையணை உறைகள் சகிதம் கோடுகள் கொண்ட இரட்டை படுக்கை விரிப்புகள் | | 250 | எண்ணிக்கை | | | |
| 129 | DOS/2023/6004 | உருக்கு துவாய் ராக்கைகள் | NCB | 200 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 130 | DOS/2023/6005 | தம்ளர்கள் 300 ml | NCB | 7,500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 131 | DOS/2023/6006 | மூடி சகிதம் அனுமினிய பாத்திரம் 36" x 18" | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 132 | DOS/2023/6007 | மூடி சகிதம் அனுமினிய பாத்திரம் 24" x 12" | NCB | 200 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 133 | DOS/2023/6008 | மூடி சகிதம் அனுமினிய பாத்திரம் 20" x 10" | NCB | 200 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 134 | DOS/2023/6009 | 04 பேர்னர் கேஸ் குக்கர் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 135 | DOS/2023/6010 | வெள்ளை நிற போர்சலின் தேநீர் கோப்பைகள் மற்றும் தட்டுகள் (Cup & Saucer ) | NCB | 3,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | வெள்ளை நிற போர்சலின் கோப்பி கோப்பைகள் மற்றும் தட்டுகள் (Cup & Saucer ) | | 750 | எண்ணிக்கை | | | |
| 136 | DOS/2023/6011 | வெள்ளை நிற போர்சலின் இராப்போசன பிளேட்கள் | NCB | 5,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 137 | DOS/2023/6012 | துருப்பிடிக்காத இனிப்பு உண்ணும் முள்ளுக் கரண்டிகள் 18/10 | NCB | 2,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| | | துருப்பிடிக்காத மீன் உண்ணும் முள்ளுக் கரண்டிகள் 18/10 | | 2,000 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத இனிப்பு உண்ணும் கரண்டிகள் 18/10 | | 1,000 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத கோப்பி கரண்டிகள் 18/10 | | 800 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத பான் வெட்டும் கத்திகள் 18/10 | | 750 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத பட்டர் கத்திகள் 18/10 | | 1,000 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத இனிப்பு வெட்டும் கத்திகள் 18/10 | | 1,500 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத மீன் வெட்டும் கத்திகள் 18/10 | | 1,000 | எண்ணிக்கை | | | |
| | | துருப்பிடிக்காத மேசை / இறைச்சி வெட்டும் கத்திகள் 18/10 | | 1,500 | எண்ணிக்கை | | | |
| 138 | DOS/2023/6013 | இனிப்பு உண்ணும் போர்சலின் கோப்பைகள் | NCB | 2,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | மூடியுடனான வெள்ளை நிற போர்சலின் பட்டர் டிஸ்கள் | | 1,000 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் கறி டிஸ்கள் 09" | | 1,500 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் சோற்று டிஸ்கள் 16" | | 500 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் கை கழுவும் கோப்பைகள் | | 750 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் தண்ணீர் குவளைகள் 1.5 லீற்றர் | | 1,000 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் பக்கத் தட்டுகள் (Plate Side) | | 2,500 | எண்ணிக்கை | | | |
| | | வெள்ளை நிற போர்சலின் Plate Tart | | 2,500 | எண்ணிக்கை | | | |
| 139 | DOS/2023/6014 | Decanter Glass 750 ml | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | Glass Brandy | | 500 | எண்ணிக்கை | | | |
| | | Goblet Glass Water | | 750 | எண்ணிக்கை | | | |
| | | Glasses Whisky | | 750 | எண்ணிக்கை | | | |
| | | Glass Red Wine | | 750 | எண்ணிக்கை | | | |
| | | Glass White Wine | | 750 | எண்ணிக்கை | | | |
| | | Glass Port Wine | | 500 | எண்ணிக்கை | | | |
| | | Glasses Champain Fluite | | 500 | எண்ணிக்கை | | | |
| | | Beer Mugs | | 500 | எண்ணிக்கை | | | |
| 140 | DOS/2023/6015 | குஷன் சகிதம் உருக்கு உணவருந்தும் கதிரைகள் | NCB | 400 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 141 | DOS/2023/6016 | கைப்பிடியற்ற பிளாஸ்டிக் கதிரைகள் | NCB | 3,000 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 142 | DOS/2023/6017 | மரத்தாலான விறாந்தைக் கதிரைகள் | NCB | 200 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 143 | DOS/2023/6018 | போர்மிகா மேற்பரப்பு மேசை 6' x 3' | NCB | 75 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 144 | DOS/2023/6019 | கண்ணாடி சகிதம் துணி வைக்கும் அலுமாரிகள் | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 23/02/2023 | 24/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 145 | DOS/2023/6020 | மூடி மற்றும் சக்கரம் சகிதமான 90 லீற்றர் சிவப்பு நிற குப்பைத் தொட்டிகள் | NCB | 100 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| | | மூடி மற்றும் சக்கரம் சகிதமான 90 லீற்றர் நீல நிற குப்பைத் தொட்டிகள் | | 100 | எண்ணிக்கை | | | |
| | | மூடி மற்றும் சக்கரம் சகிதமான 90 லீற்றர் பச்சை நிற குப்பைத் தொட்டிகள் | | 100 | எண்ணிக்கை | | | |
| | | மூடி மற்றும் சக்கரம் சகிதமான 90 லீற்றர் மஞ்சள் நிற குப்பைத் தொட்டிகள் | | 100 | எண்ணிக்கை | | | |
| 146 | DOS/2023/6021 | பைபர் ஐஸ் பெட்டிகள் | NCB | 437 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 147 | DOS/2023/6351 | Concertina Wire Roll (14.5 Kg) | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 148 | DOS/2023/6352 | Barbed Wire Roll ( 25Kg ) | NCB | 630 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 3,500.00 |
| 149 | DOS/2023/6426 | Active Speaker System (Self - Powered Speakers) | NCB | 120 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 24/02/2023 | 27/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |

| பொதுவான பொருட்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | NCB/ICB | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
| 150 | DOS/2023/9000 | டெக்ஷன் ஏங்கல் 10 அடி | NCB | 600 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | கோணர் பிளேட் | | 1,800 | எண்ணிக்கை | | | |
| | | நட் மற்றும் போல்டுகள் | | 5,400 | எண்ணிக்கை | | | |
| 151 | DOS/2023/9001 | ஒட்டுப் பலகை 72" x 29" x 12 mm | NCB | 500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 152 | DOS/2023/9002 | ரைபள் ஒயில் HC 22 | NCB | 1,040 | Liter | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 153 | DOS/2023/9003 | வெற்று எரிவாயு சிலிண்டர்கள் 12.5 Kg | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | வெற்று எரிவாயு சிலிண்டர்கள் 37.5 Kg | | 80 | எண்ணிக்கை | | | |
| 154 | DOS/2023/9004 | பித்தளை பூட்டுகள் 1 1/2" | NCB | 150 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 16/02/2023 | 17/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | பித்தளை பூட்டுகள் 2 1/2" | | 250 | எண்ணிக்கை | | | |
| | | பித்தளை பூட்டுகள் 2" | | 300 | எண்ணிக்கை | | | |
| 155 | DOS/2023/9005 | 7 w LED பின் டைப் சக்தி சேமிப்பு மின் குமிழ்கள் | NCB | 3,600 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 156 | DOS/2023/9006 | 9 w LED பின் டைப் சக்தி சேமிப்பு மின் குமிழ்கள் | NCB | 5,300 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 157 | DOS/2023/9007 | 12 w LED பின் டைப் சக்தி சேமிப்பு மின் குமிழ்கள் | NCB | 2,600 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| 158 | DOS/2023/9008 | தீயணைப்பு உபகரணம் CO 2 வகை (2-3 kg) | NCB | 80 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| | | தீயணைப்பு உபகரணம் நுரை வகை (9 Ltrs) | | 80 | எண்ணிக்கை | | | |
| | | கையடக்க தீயணைப்பு உபகரணம் துகள் வகை (Powder) | | 80 | எண்ணிக்கை | | | |
| | | தீயணைப்பு உபகரணம் நீர் வகை (9 Ltrs) | | 80 | எண்ணிக்கை | | | |
| 159 | DOS/2023/9009 | கூடாரங்களுக்கான 72" அகலமான பச்சை நிற கென்வஸ் துணி | NCB | 500 | மீற்றர்கள் | 18/01/2023 முதல் 17/02/2023 | 20/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 160 | DOS/2023/9010 | Flannelette 10 மீற்றர்கள் சுருள்கள் | NCB | 500 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 161 | DOS/2023/9011 | தார்பொலின் 50 மீற்றர் சுருள்கள் (8' நீளம்) | NCB | 50 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| 162 | DOS/2023/9012 | தீயணைப்பு உபகரணம் Co2 Type 25 Kg Trolly Type | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,500.00 |
| | | தீயணைப்பு உபகரணம் Co2 Type 50 Kg Trolly Type | | 6 | எண்ணிக்கை | | | |
| 163 | DOS/2023/9013 | தீயணைப்பு உபகரணம் Dry Powder Type 25 Kg Trolly Type | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | தீயணைப்பு உபகரணம் Dry Powder Type 50 Kg Trolly Type | | 6 | எண்ணிக்கை | | | |
| 164 | DOS/2023/9014 | தீயணைப்பு உபகரணம் Water Type 50 Ltr Trolly Type | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | தீயணைப்பு உபகரணம் Water Type 100 Ltr Trolly Type | | 6 | எண்ணிக்கை | | | |
| 165 | DOS/2023/9015 | தீயணைப்பு உபகரணம் Foam Type 50 Ltr Trolly Type | NCB | 12 | எண்ணிக்கை | 18/01/2023 முதல் 21/02/2023 | 22/02/2023 மு.ப. 11.00 மணிக்கு | 1,000.00 |
| | | தீயணைப்பு உபகரணம் Foam Type 100 Ltr Trolly Type | | 6 | எண்ணிக்கை | | | |

2. குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் மற்றும் சர்வதேச போட்டி ரீதியில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு முடிவுறுத்தப்படும் காலம் முடிவடைதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளல் காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் சேவை இடத்தின் கடிதத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

   தலைவர், இராணுவ பெறுகைக் குழு,
   மே/பா யுத்த உபகரண முதன்மை கட்டளைப் பிரிவு,
   இராணுவ முகாம், செலிங்கோ கட்டிடம்,
   இல. **167/30,** அவிசாவளை வீதி,
   ஒருகொடவத்த.

4. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்குநர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீடுகளின் போது இயைபுடைய தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.
   அ) நிதிய இயலுமை
   ஆ) திருப்திகரமான வரி செலுத்தல் அறிக்கைகள்
   இ) போதுமான உற்பத்தி கொள்ளளவு
   ஈ) போதுமான களஞ்சிய வசதிகள் (பண்டகசாலை)
   உ) போதுமான பணியாளர், ஆளணி மற்றும் அலுவலக வசதிகள்
   ஊ) போதுமான போக்குவரத்து வசதிகள்
   ஈ) வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி அல்லது கடந்த மூன்று வருடங்களுக்கான செயற்பாட்டு அறிக்கையுடனான கூட்டிணைப்புச் சான்றிதழ்
5. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வெட் பதிவிலக்கத்தை வெளிப்படுத்துதல் கட்டாயமாகும்.
6. முழுமையற்ற மற்றும் தேவையான ஆவணச் சாட்சிகள் இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் கொள்வனவு செய்யும் அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.
7 உடன்படிக்கையில் கைச்சாத்திடும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறியத்தரப்படும்.
8. வெளிநாட்டு வழங்குநர்களுக்கு கடன் கடிதங்கள் மூலமும் உள்நாட்டு வழங்குநர்களுக்கு காசோலைகள் மூலமும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு துணி வகைகள் 0112987531, இராணுவக் குடியிருப்பு 0112987534 காகிதாதிகள் / பொதுவான பொருட்கள் / வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 0112987532 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக குழும பெறுகை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**இராணுவத் தளபதி,**
**இலங்கை இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

# கைத்தொழில் அமைச்சு
# இலங்கை தேயிலைச் சபை

## இலங்கை தேயிலைச் சபையின் பிரதான காரியாலயம் மற்றும் 7 பிரதேச காரியாலயங்களுக்கான சுகாதார சேவைகள் மற்றும் வளாக பராமரிப்பு சேவைகளுக்கான விலைமனுக்கோரல் - 2023

BID NO:PROC/JAN/23

**கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 574** இல் அமைந்துள்ள இலங்கை தேயிலைச் சபைக்காக வழங்கல் சபையின் தலைவரால் இலங்கை தேயிலைச் சபையின் பிரதான காரியாலய தொடர்மாடி மற்றும் 7 பிரதேச காரியாலயங்களுக்காக **ஒரு வருட** காலத்திற்கு சுகாதார சேவைகளையும் வளாக பராமரிப்பு சேவைகளையும் வழங்குவதற்காக வரவேற்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து **2023 ஜனவரி 31 பி.ப 2.00** மணி வரையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மனுதாரரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள்:

- சபை சட்டத்திற்கேற்ப தேவையான குறைந்தளவு சம்பளத்திற்குட்பட்டிருத்தல்.
- மனுதாரர்கள் இலங்கையில் செல்லுபடியாகும் வணிகப்பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல். (மனுவுடன் ஆவணங்களின் பிரதிகளை இணைக்கப்படல் வேண்டும்)
- மனுதாரர் கடந்த 3 வருடத்திற்குள் மகிழ்ச்சிகரமான சுகாதார சேவைகளை வழங்கப்பட்டிருத்தல். (2021, 2020 மற்றும் 2019) (அனுபவம் மற்றும் மகிழ்ச்சிகரமான சேவை தொடர்பான ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்)
- ஆகக்குறைந்த சம்பளத்திற்கு தொழிலாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ். (சாட்சிப்பத்திரம் மற்றும் கடந்த வருடத்திற்குரிய 'C " Return மற்றும் "R1" பிரதிகள்)
- 2019 / 2020 வருடத்திற்குரிய மற்றும் 2020 / 2021 வருடத்திற்கான தணிக்கையிடப்பட்ட கணக்குகள்.
- மகிழ்ச்சிகரமான சேவையினை வழங்கக்கூடியவராயிருத்தல்.

மனுதாரர்கள், **வழங்கல் பிரிவு, இலங்கை தேயிலைச் சபை, 574, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியில் மு.ப 10.00 முதல் பி.ப 3.00 மணி வரைக்குட்பட்டு 2023 ஜனவரி 19 முதல் 2023 ஜனவரி 30** வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.5,000** ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட ரசீதுடன் தமது சுருக்க விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதன் ஊடாக மனுப்பத்திரங்களை கொள்வனவு செய்திட முடியும். இலங்கை தேயிலைச் சபையில் கொள்வனவு செய்யப்பட்ட மனுக்களை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். மேற்குறிப்பிட்ட கால வரையறையில் இலங்கைத் தேயிலைச் சபையின் **www.srilankateaboard.lk** என்ற இணையத்தளம் வாயிலாகவும் மனுப்பத்திரங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித் திகதியிலிருந்து **120** நாட்கள் வரையில் செல்லுபடியாக வேண்டும். அத்துடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு வரவேற்கப்பட்ட கொமர்'ல் வங்கியிடமிருந்து இலங்கை தேயிலைச் சபையின் தலைவருக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட **ரூ.200,000/-** பிணைப் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும். பிணைப் பாதுகாப்பானது ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித் திகதியிலிருந்து **148** நாட்கள் செல்லுபடியாக வேண்டும்.

**"2023 ஆம் ஆண்டுக்குரிய சுகாதார சேவைகள் மற்றும் வளாக பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்"** என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கடித உறையில் "முதற் பிரதி" மற்றும் "பிரதி" என அடையாளமிட்டு இரண்டு விலைமனுப் பிரதிகளை **2023 ஜனவரி 31 பி.ப 2.00 மணிக்கு முன்னர் தலைவர், வழங்கல் சபை, 574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்ப வேண்டும். இல்லையெனில் மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டிருக்கும் மனுப்பெட்டியில் இடவும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த பின்னர் **வழங்கல் சபை, இலங்கை தேயிலைச் சபை, இலக்கம் 574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் மனுக்கள் திறக்கப்படும். மனுதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இச்சந்தர்ப்பத்திற்கு பங்கேற்கலாம்.

**வழங்கல் பிரிவு, இலங்கை தேயிலைச் சபை, இலக்கம் 574, காலி வீதி, கொழும்பு 03** இலிருந்து **(தொ.பே: 011 258 2121, நீடிப்பு: 1110)** மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
வழங்கல் சபை,
இலங்கை தேயிலைச் சபை,
574, காலி வீதி, கொழும்பு 03.
2023.01.17

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

## RE-COMMISSIONING OF FLUID BED DRYER WITH NECESSARY FEEDING SYSTEM AT PULMODDAI

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| இல. | விலை மனு இல. | பண்டங்களின் விளக்கம் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணங்கள் | விலை மனுப் பிணை (ரூபாவில்) | விலை மனுப் பிணையானது செல்லுபடியாகும் திகதி | விலை மனு செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | விலை மனுவை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | LMSL/SUP/DPC/18/2022 | Re-Commissioning of Fluid Bed Dryer with necessary feeding system | 2,000 | 10,000 | 2023.04.31 | 63 | 31.01.2023 14.30 hrs |

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் அதே முகவரியில் 2023.01.17 ஆம் திகதியிலிருந்து 2023.01.31 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பு இலக்கங்கள்: 011-2882025/2883951/2883952
4. 2023.01.17 ஆம் திகதியிலிருந்து 2023.01.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் நிதிப் பிரிவின் காசாளரின் கருமபீடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் பின்வருமாறு அடக்கப்பட்டு மேலே குறிக்கப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. மேலே விபரிக்கப்பட்டவாறு விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கில் அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவுத் தாளின் 20.1 ஆம் உள்வாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு முகவராண்மை ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய.**



Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

# இந்தியாவுடனான தோல்வியால் தசுன் ஷானக்க பெரும் 'ஏமாற்றம்'



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 317 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்து தொடரை 0–3 என முழுமையாக இழந்தது பெரும் ஏமாற்றம் தருவதாக இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க தெரிவித்துள்ளார்.

திருவானந்தபுரத்தில் கடந்த ஞாயிறன்று (15) நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 390 ஓட்டங்களை பெற்ற நிலையில் இலங்கை அணி 73 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஒருவரேனும் 20 ஓட்டங்களைப் பெறவில்லை.

இந்நிலையில் போட்டிக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த தசுன் ஷானக்க,

"இது ஏமாற்றம் தருவதாக உள்ளது. இது நாம் விரும்பிய ஆட்டம் இல்லாதபோதும் இவ்வாறு சில நேரம் நிகழ்வதுண்டு. இந்த ஆடுகளத்தில் எவ்வாறு விக்கெட் எடுப்பது என்றும் ஓட்டங்கள் பெறுவது என்றும் பந்துவீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்கள் கற்றுக்கொள்ள வேண்டி உள்ளது.

உறுதியான கிரிக்கெட்டை ஆடுவது முக்கியமாகும். வீரர்கள் செயல்நோக்கத்துடன் ஆடி இருந்தால் பந்துவீச்சு வேறுபட்டிருக்கும். சர்வதேச கிரிக்கெட்டில் ஆடும்போது, நாம் செயல் நோக்கத்துடன் ஆட வேண்டும். இவ்வாறான ஒரு ஆட்டத்தை ஆடியதற்காக இந்திய அணியினருக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இலங்கை அணியின் இந்தத் தோல்வி ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அணி ஒன்று பெற்ற மிக மோசமான தோல்வியாக சாதனை படைத்தது.

இதற்கு முன்னர் 2008இல் நியூசிலாந்துக்கு எதிராக அயர்லாந்து 290 ஓட்டங்களால் தோற்றதே மோசமாக இருந்தது.

அதேபோன்று இலங்கை அணி 73 ஓட்டங்களுக்கு சுருண்டது அந்த அணி ஒருநாள் போட்டிகளில் இந்திய அணிக்கு எதிராகப் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்களாக பதிவானது. இதற்கு முன் 1984இல் ஷார்ஜாவில் நடந்த ஆசிய கிண்ணத்தில் இலங்கை அணி 96 ஓட்டங்களை பெற்றதே குறைவாக இருந்தது. அதேபோன்று இது ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி பெற்ற நான்காவது மிகக் குறைந்த ஓட்டங்களாகும்.

இந்தப் போட்டியில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கொஹ்லி ஆட்டமிழக்காது 166 ஓட்டங்களை பெற்ற நிலையில் இலங்கை 73 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது ஒருநாள் போட்டியில் எதிரணியின் மொத்த ஓட்டங்களை விடவும் ஒரு துடுப்பட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை பெற்ற வரிசையில் இரண்டாவது இடத்தை பிடித்தது.

அதாவது கொஹ்லி இலங்கை அணியின் மொத்த ஓட்டங்களை விடவும் 93 ஓட்டங்களை அதிகமாக பெற்றுள்ளார்.

இந்த வரிசையில் 2000ஆம் ஆண்டு இந்திய அணி 54 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் இலங்கையின் சனத் ஜயசூரிய மாத்திரம் 189 ஓட்டங்களை பெற்றது முதலிடத்தில் உள்ளது. இதன்போது ஜயசூரிய இந்திய அணியின் மொத்த ஓட்டங்களை விடவும் 135 ஓட்டங்கள் அதிகமாக பெற்றிருந்தார்.

## மோசமான தோல்வி பற்றி அறிக்கை தர அறிவுறுத்து



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி பெற்ற மோசமான தோல்வி குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி தேசிய அணி முகாமையாளருக்கு இலங்கை கிரிக்கெட் சபை அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிக்கையில் தோல்வி குறித்து அணித்தலைவர், தலைமை பயிற்சியாளர் மற்றும் தேர்வுக் குழு, அதேபோன்று அணி முகாமையாளரின் விளக்கம் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து நாட்களுக்குள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கும்படி அணி முகாமையாளரை இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணி 317 ஓட்டங்களால் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் மோசமான தோல்வியை சந்தித்ததோடு துடுப்பாட்டத்தில் 22 ஓவர்ளுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அணியின் இந்த மோசமான ஆட்டத்துக்கான பின்னணியை புரிந்துகொள்வதற்கும் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கு இந்த அறிக்கை உதவும்.

## இலங்கை மகளிர் தோல்வி



19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 9 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் பெனோனியில் நேற்று (16) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி 20 ஓவர்களுக்கும் 2 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை குவித்தது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை அணி கடைசி வரை போராடியபோதும் 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களையே பெற்றது. இலங்கை அணி 24 ஓட்டங்களுக்கு முதல் இரு விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் அணித்தலைவி விஷ்மி குணரத்ன மற்றும் தேவ்மி விஹாங்க 3 ஆவது விக்கெட்டுக்கு 96 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது விஷ்மி ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களை பெற்றதோடு தெவ்மி 55 ஓட்டங்களை குவித்தார்.



நாரஹேன்பிட்டி ஷாலிகா மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (14) நடைபெற்ற நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்ற விடமைப்பு பிரிவு அணியினர் நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவர் நிமேஷ் ஹேரத்துடன் எடுத்துக்கொண்ட படத்தினை காணலாம்.

## சம்பியனானது '97 சீ' அணி

**அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்**



அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இம்றான் தலைமையிலான '97 சீ' அணியினர் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

கடந்த வார இறுதியில் (14,15) அநுராதபுரம் ஸாஹிராக் கல்லூரி மற்றும் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலய மைதானங்களில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 42 அணிகள் பங்கு பற்றின.

இதன் இறுதிப் போட்டியில் நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொண்ட 97 சீ அணி 103 ஓட்டங்களை நிர்ணயித்து எதிரணியை 78 ஓட்டங்களுக்கு சுருட்டியது.

# சர்வதேச செய்திகள்

## நேபாள விமான விபத்தில் ஒருவரும் உயிர்தப்பவில்லை



நேபாளத்தில் கடந்த பல தசாப்தத்தில் இடம்பெற்ற மோசமான விமான விபத்தில் உயிர்தப்பியோரை தேடும் நடவடிக்கை கைவிடப்பட்டதாக மீட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிர் தப்பியவர்களை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பு பூஜ்யமாக உள்ளது. என்றாலும் விமானத்தின் தரவு மற்றும் குரல் பதிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக உள்ளூர் அதிகாரியான டெக் பஹதுர் தெரிவித்துள்ளார்.

72 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் காத்மண்டுவில் இருந்து சுற்றுலாத் தளமான பொகோராவை நோக்கி புறப்பட்ட யெடி ஏர்லைன்ஸ் விமானம் தரையிறங்கும்போது கடந்த ஞாயிறன்று (15) விபத்துக்குள்ளானது.

விபத்துக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

"இதுவரை நாம் 68 சடலங்களை மீட்டுள்ளோம். மேலும் நான்கு சடலங்களை தேடி வருகிறோம்" என்று டக்சி மாவட்ட தலைமை மாவட்ட அதிகாரி பஹதுர் தெரிவித்தார்.

இது நேபாளத்தில் கடந்த 30 ஆண்டுகளில் இடம்பெற்ற மோசமான விமான விபத்தாக உள்ளது. விமான நிலைத்தை நெருங்கிய இந்த விமானம் வேகமாக சுழலும் காட்சி கைபேசி ஒன்றில் பதிவாகியுள்ளது. பின்னர் விமானநிலையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் செடி நதிப் பள்ளத்தாக்கில் விழுந்துள்ளது.

நேபாளத்தில் நேற்று துக்கதினம் அறிவிக்கப்பட்டதோடு விபத்துக்கான காரணத்தை கண்டறிய அரசு விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

## ஆப்கானின் முன்னாள் எம்.பி சுட்டுக்கொலை



ஆப்கான் தலைநகர் காபுலில் வைத்து முன்னாள் பெண் பாராமன்ற உறுப்பினரான 32 வயது முர்சல் நபிசாதா மற்றும் அவரது மெய்க்காவலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

2021 ஒகஸ்ட்டில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் காபுலில் தொடர்ந்து தங்கியிருந்த ஒரு சில பெண் எம்.பிக்களில் ஒருவராக நபிசாதா இருந்தார்.

கடந்த ஞாயிறன்று (15) இடம்பெற்ற தாக்குதலில் அவரது சகோதரர் மற்றும் மற்றொரு மெய்க்காவலர் காயமடைந்துள்ளார். நாட்டை விட்டு வெளியேற வாய்ப்பு இருந்தபோதும் அவர் ஆப்கானுக்காக பயமின்றி போராடினார் என்று அவரது சகாக்கள் குறிப்பிட்டுள்ளனர். தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின், கிட்டத்தட்ட அனைத்து அரச பணிகளில் இருந்தும் பெண்கள் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக காபுல் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கொங்கோ தேவாலயத்தில் தாக்குதல்: பத்து பேர் பலி



கொங்கோ தேவாலயம் ஒன்றில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் ஒன்றில் 10 பேர் கொல்லப்பட்டு 39 பேர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசுக் குழு பொறுப்பேற்றுள்ளது.

உகண்டா எல்லையில் உள்ள பெந்தகோஸ்தல் தேவாலயம் ஒன்றிலேயே இந்த பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக கொங்கோ இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதில் இஸ்லாமிய அரசுக் குழுவுக்கு விசுவாசத்தை வெளிப்படுத்திய கூட்டணி ஜனநாயகப் படை இந்தத் தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இஸ்லாமியவாதப் போராட்டக் குழுவான இந்தப் படை 1990களில் உகண்டாவில் தனது போராட்டத்தை ஆரம்பித்தபோதும் தற்போது கொங்கோவை தளமாகக் கொண்டு இயங்குகிறது.

குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து உகண்டா எல்லையில் இராணுவம் பாதுகாப்பை பலப்படுத்தி தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகிறது.

## உலக தெற்கு மாநாடு: நரேந்திர மோடி உரை

உலகளாவிய தெற்கு நாடுகளின் மாநாடு பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமைந்தது என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி அந்த மாநாட்டின் நிறைவில் தெரிவித்துள்ளார்.

"இது சிந்தனைகள் மற்றும் கருத்துகளில் பயனுள்ள பரிமாற்றமாக உள்ளது. இது தெற்கின் பொதுவான அபிலாசைகளை பிரதிபலிப்பதாக உள்ளது. உலகம் எதிர்கொள்ளும் பல முக்கியமான பிரச்சினைகளில், வளரும் நாடுகள் ஒரே மாதிரியான பார்வையை கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது" என்றும் மோடி குறிப்பிட்டார்.

வீடியோ வழியாக இடம்பெற்ற இந்த உலகளாவிய தெற்கு நாடுகளின் மாநாட்டில் 120க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

**உலகின் புதிய சொத்துகளில்**

## ஒரு வீத செல்வந்தர்களுக்கு மூன்றில் இரண்டு வீதப் பங்கு

2020 தொடக்கம் உருவாக்கப்பட்ட 42 டிரில்லியன் டொலர் புதிய சொத்துகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கை உலகின் முதல் நிலையில் இருக்கும் 1 வீதமான செல்வந்தர்கள் கைப்பற்றி இருப்பதாக ஒக்ஸ்பாம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுவிட்சர்லாந்து, டவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்த கூட்டம் நேற்று ஆரம்பமான நிலையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் கீழ் மட்டத்தில் இருக்கும் 99 வீதமானோர் பெற்ற தொகையை விட இந்தப் பங்கு கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது என்று ஒக்ஸ்பான் நிறுவனம் நேற்று (16) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பெரும் செல்வந்தர்களின் சொத்து நாளொன்றுக்கு 2.7 பில்லியர் டொலர்களால் அதிகரிக்கும் அதேநேரம், குறைந்தது 1.7 பில்லியன் தொழிலாளர்கள் பணவீக்கம் ஊதியத்தை விட அதிகமாக உள்ள நாடுகளில் வாழ்வதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இதில் உலகின் பல மில்லியன் மற்றும் பில்லியன் டொலர் செல்வந்தர்களின் 5 வீதமான வரி மூலம் வருடத்திற்கு சேகரிக்கப்படும் 1.7 டிரில்லியன் டொலர் நிதி 2 பில்லியன் மக்களை வறுமையில் இருந்து காக்கப் போதுமானது என்று ஒக்ஸ்பாம் சுட்டிக்கட்டியுள்ளது.

இதேவேளை வரும் வெள்ளிக்கிழமை (20) வரை நடைபெறவுள்ள உலக பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் 52 உலகத் தலைவர்கள் மற்றும் சுமார் 600 தலைமை நிர்வாக அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

## பாகிஸ்தானுக்கு சவூதி நிதியுதவி

அந்நியச் செலாவணி பற்றாக்குறை மற்றும் பொருளாதார மந்த நிலை என்பன காரணமாக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியாவிடமிருந்து 04 பில்லியன் அமெரிக்க டொலர்களை பாகிஸ்தான் நிதியுதவியாகப் பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு அடுத்துவரும் இரு மாதங்களில் 02 பில்லியன் அமெரிக்க டொலர்களை பாகிஸ்தான் செலுத்த வேண்டியுள்ள நிலையில் மேலதிகமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

இதேவேளை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான எண்ணெய் இறக்குமதிக்காக அபிவிருத்திக்கான சவூதி அரேபிய நிதியத்துடன் பாகிஸ்தான் உடன்படிக்கையொன்றிலும் கைச்சாத்திட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நகர்வலம்



## களுத்துறை நாகொட வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியை காணவில்லை

### பொலிஸார் பலகோணங்களில் விசாரணை




**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

களுத்துறை மாவட்ட (நாகொட) போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி ஒருவர் கடந்த 14ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். வைத்தியர் வந்ததாக கருதப்படும் வாகனம் களுகங்கை பாலத்துக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. களுத்துறை போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி காணாமல் போனது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவாகியுள்ளதாக தெரிய வருகின்றது. எல்.ஸீ.ஜயசிங்க என்ற வைத்தியரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிய வருகின்றது.

மேற்படி வைத்தியரின் மனைவி செய்த புகாரின் பிரகாரம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த வைத்தியர் பயணித்ததாக கருதப்படும் வாகனம் களுகங்கை பாலத்துக்கு அண்மையில் இருக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் வைத்தியர் ஆற்றில் விழுந்திருக்கலாமோ என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சுற்றுலாப்பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு ஜனவரி 20 வரை ஒத்திவைப்பு

### சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான கொவிட் 19 கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது எதிர்வரும் இருபதாம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இது தொடர்பில், விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் மாற்றம் மேற்கொண்டு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அந்த அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இது பற்றித் தெரிவிக்கையில், உரிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது எதிர்வரும் 20 வரை ஒத்திப்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளுக்காக கொவிட் பரவல் தொடர்பான புதிய நியதிகளை நடைமுறைப்படுத்த சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை கடந்த 13 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

எனினும், சுகாதார அமைச்சின் அனுமதி அதற்கு கிடைக்காததால் அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை ஒத்திப்போட்டுள்ளது.

அதேவேளை, இவ்வருடத்தின் கடந்த 12 தினங்களில் 37000த்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் தொடர்ந்தும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தும்மோதரை முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் சாதனை

**புத்தளம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கர்நாடகம் மற்றும் முஸ்லிம் மாணவர்களுக்கான விசேட தேசிய மட்ட போட்டியில் சிலாபம் தும்மோதரை முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் இரு முதலாமிடங்களை பெற்று சிலாபம் கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பெண்களுக்கான அல் ஹிகாயத் வல் பைத் நிகழ்ச்சியில் முதலாமிடத்தையும், ஆண்களுக்கான அல் ஹிகாயத் வல் பைத் நிகழ்ச்சியில் முதலாமிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புக்களை வழங்கிய ஏனைய ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் பாடசாலை நிர்வாகம் தெரிவித்துக்கொள்கின்றது.

## எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சு.க கூட்டிணைந்து களமிறங்கும்

### சிரேஷ்ட உப தலைவர் ஷான் விஜயலால் எம்.பி

**வெலிகம தினகரன் நிருபர்**



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய சில கட்சிகளுடன் கூட்டிணைந்து களமிறங்க பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உப தலைவரும், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில், எது எப்படியிருந்தாலும் நாட்டின் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் இக்கூட்டணி போட்டியிடவுள்ளது. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கை சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் இவ்வருட மார்ச் மாதம் வரை நீடிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதன் பதவிக் காலத்தை முடிவுக்கு கொண்டுவர இதுவரை அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல்கள் எதையும் வெளியிடவில்லை. எனினும் இது விடயமாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கனேவல்பொல பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

**கெக்கிராவ குறூப் நிருபர்**

கனேவல்பொல பிரதேசம் டெங்கு அபாயமிக்க பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்பொழுது மிகவும் அபாயமிக்க பிரதேசமாக இப்பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளதால் கெக்கிராவ பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் கெக்கிராவ பிரதேச சபையும் இணைந்து கனேவல்பொல பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டது.

கனேவல்பொல பாடசாலை மைதானம், ஆற்று வீதி, கனேவல்பொல பஸார் ஆகிய பொது இடங்களில் இச்சிரமதானம் கெக்கிராவ பிராந்திய பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி டி.எம்.சி.எச்.திஸாநாயக்கவின் மேற்பார்வையில் நடைபெற்றது.

கனேவல்பொல பிரதேசத்தில் ஈடிஸ் இஜிப் ட்டைல் மற்றும் ஈடிஸ் அல்போபிக்டஸ் ஆகிய இரண்டு வகையான நுளம்பு வகைகள் அதிகரித்து காணப்படுவதால் மிகவும் அபாயகரமான பிரதேசமாக கனேவல்பொல பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளதாலேயே பொது இடங்களில் இச்சிரமாதானத்தை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஐ.ம.சவின் திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளராக றிஸ்கான் முகம்மட்



ஐக்கிய மக்கள் சக்தியின் 'சமகி' வரிசைப் படுத்தல் படையின் (*Samagi Wihidum Balaganaya*) திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளராக றிஸ்கான் முகம்மட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஞாயிற்றுக்கிழமை (15) நியமனக்கடிதத்தை வழங்கி வைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தலைமையில் இடம்பெற்ற சமகி வரிசைப்படுத்தல் படையின் மாவட்ட மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாசவினால் இந் நியமனக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. றிஸ்கான் முகம்மட் ஐக்கிய மக்கள் சக்தி இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும், அம்பாறை மாவட்ட செயலாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காரி ரஸீன் எழுதிய தஜ்வீத் நூல் வெளியீடு

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை மருதானையைச் சேர்ந்த காரி முகத்தமுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.ரஸீன் (கபூரி) எழுதிய 'அல்குர்ஆனின் தஜ்வீத் சட்ட விதிகள்' எனும் நூலின் வெளியீட்டு வைபவம் மருதானை அரப் வீதியில் உள்ள முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெற்றது.

ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஏ.டப்ளியு.எம்.அஜ்வாத் ஜே.பி. தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மௌலவி காரி ரஸீன் (கபூரி) சர்வதேச ரீதியில் நடைபெற்ற பல கிராத் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி பேருவளை மண்ணுக்கும் இலங்கைக்கும் புகழ் சேர்த்தவராவார். பிரதேசத்திலுள்ள பல குர்ஆன் மத்ரஸாக்களில் இவர் மாணவர்களுக்காக இலவச தஜ்வீத் வகுப்புக்களையும் நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புனித ரமழான் மாதம் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பள்ளிவாசல்களில் கிராஅத் நிகழ்ச்சிகளை அவரது சகோதரர்களுடன் சேர்ந்து நடாத்தியுள்ளார்.

புனித அல் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓத ஊக்குவிக்கும் வகையில் இவர் இந்த நூலை எழுதியுள்ளார்.

காரி மௌலவி றஸீன் கபூரியின் இப் பணியை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பெரிதும் பாராட்டினார்.

## ஈரான் தூதரக ஏற்பாட்டில் நினைவு தின வைபவம்





**ருசைக் பாரூக்**

ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாசார பிரிவு ஒழுங்கு செய்த ஈரான் இராணுவத்தின் ஜெனரல் காசிம் சுலைமானின் 3 வது ஆண்டு நினைவு தின வைபவம் அண்மையில் ஈரான் கலாசார பிரிவு கவுன்சிலர் கலாநிதி பி. மோஅஸாமி குடார்சியின் தலைமையில் நடைபெற்றது.

மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர் வண. களுபஹன பியரத்ன தேரர், முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர எம்.பி, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் மற்றும் அல் இஸ்லாம் அறக்கட்டளையின் பணிப்பாளர் ஜி.எஸ்.எம். ஜியார்ட் முஹம்மட் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே, ஈராக் தூதரகத்தின் கவுன்சிலர் அம்மார் ஆலமீன், பாதுகாப்பு இணைப் பொறுப்பாளர் கர்ணல் ஹோமயூன் அலியார், அரசியல் பிரிவின் தலைவர் செயிட் மொஸ்தபா ஹஷேமி, பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் தலைவர் கே. சொஹைல் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.











அநுராதபுரம் கோட்டக் கல்வி பணிமனைக்குட்பட்ட தேவநம்பியதிஸ்ஸபுர , அழுத்கம ,அசறிக்கம மற்றும் கியுளேகட ஆகிய ஆரம்ப பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற வாசிப்பு மற்றும் உறுப்புரைய எழுதுதல் போட்டி நிகழ்வின் போது வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்குமான பரிசளிப்பு விழா செயற்பாட்டு இணைப்பாளர் அநுராதபுரம் வலயக் கல்வி தமிழ் மொழி ஆசிரிய ஆலோசகர் ஆர்.எம். தாரிக் தலைமையில் அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய பிரதான மண்டபத்தில் கடந்த (14) நடைபெற்றபோது எடுத்த படம்.

(படங்கள்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## ஹம்பாந்தோட்டை ஸாஹிராவுக்கு 112 வருடங்கள் பூர்த்தி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 112 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஸ்தாபகர் தினம் பாடசாலையின் அதிபர் எம். எம். ரிஸான் தலைமையில் அண்மையில் பாடசாலையில் கொண்டாடப்பட்டது.

மேற்படி பாடசாலை 1911.01.11ஆம் திகதி ஹம்பாந்தோட்டைமாவட்டத்தின்ஆங்கிலேய அரசாங்க அதிபராக கடமையாற்றிய லெனால்ட் வுலப் என்பவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்ட பாடசாலையாக இப் பாடசாலை திகழ்கின்றது.

இந்தநிகழ்வில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் கௌஸல்யா கலப்பத்தி விசேட அதிதியாக கலந்துகொண்டதோடு பாடசாலையின் பிரதி அதிபர்எம் சீ. எஸ் பாயிஸா, உதவி அதிபர்களான எஸ். எம். ரிஸாம், எஸ்.அஸ் முதீன் ஆகியோருடன் மேலும் பலரும் கலந்து சிறப்பித்ததோடு அன்றைய தினத்தின் ஞாபகார்த்தமாக பாடசாலை வளாகத்தில் பிரதேச செயலாளரினால் மரக் கன்று ஒன்றும் நட்டி வைக்கப்பட்டது.

## மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

திறப்பனை கருவலகஸ்வெவ பகுதியில் மின்சார வேலியில் சிக்கி இறந்துள்ள நிலையில் காட்டு யானையொன்றின் சடலத்தை கண்டுபிடித்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.



திறப்பனை பொலிஸ் பகுதிக்குட்பட்ட கருவலகஸ்வெவ குளத்து பகுதியில் அமைந்துள்ள வயலுக்கு அருகாமையில் பழுதடைந்த நிலையில் காட்டு யானையொன்றின் சடலம் ஒன்று இருப்பதாக பிரதேச மக்களினால் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய சடலத்தை கண்டுபிடித்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த யானை கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் மின்சார வேலியில் சிக்கி இறந்திருக்கலாம் எனவும் அந்த இடத்திற்கு சென்ற போது யானையின் சடலம் தென்னம் கிளைகளினால் மூடப்பட்டிருந்ததாகவும் 35 வயது மதிக்கத்தக்க பெண் யானையே இறந்துள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்சார தாக்குதலில் இறந்த யானையின் சடலத்தை மறைப்பதற்கு அல்லது எரிப்பதற்கு காணியின் உரிமையாளர் முற்சித்துள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபரொருவரை கைது செய்துள்ளதுடன் மின் இணைப்புக்கு பயன்படுத்தப்பட்ட கம்பிகளையும் வனவிலங்கு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வனவிலங்கு திணைக்களமும் திறப்பனை பொலிசாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குடும்ப தாயொருவருக்கு சமூக சேவைகள் அதிகாரி மஞ்சுல தர்மசேன சக்கர நாற்காழியொன்றை வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பதிமூன்று கிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளினை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய 15 ஆம் திகதி மாலை அநுராதபுரம் பெரியங்குளம் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 13 கிராமும் 30 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை வலய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 37 வயதுடைய அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேக நபர் அநுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருபவர் என்பது நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹமீத் அல் ஹுசைனி பாடசாலையின் அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பு

## பாடசாலை நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் தெரிவிப்பு

**ருஸைக் பாரூக்**

கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி தேசிய பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உட்பட வளப்பற்றாக்குறையை எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு பாடசாலையின் அபிவிருத்திக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைக்கு விஜயம் செய்த அமைச்சருக்கு பாடசாலை சமூகத்தினால் வரவேற்பளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.கே.டி அதஹான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சருடன் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும் கலந்து கொண்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், கொழும்பு மத்திய பிரதேசத்தில் மூன்று தேசிய பாடசாலைகள் உள்ளதாகவும், அதில் ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியும் ஒன்று எனவும் தெரிவித்தார். மேலும் மாணவர்களுக்கு சீருடை விநியோகம், பாடப் புத்தகங்கள் மற்றும் உணவுத் திட்டங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றார்.





அதிபர் ஏ.கே.டி. அதஹான் பேசுகையில், இப்பாடசாலை 138 ஆண்டு வரலாறு கொண்டதாகும். 138வது நிறைவையொட்டி பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாகவும் மற்றும் கல்லூரி வளர்ச்சியிக்கு மாணவர்களின் ஒத்துழைப்பையும் பாராட்டினார்.

'கிட்ஸ் விர்ச்சுவல் டேலண்ட்' போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். மேலும் கல்லூரியின் பழைய மாணவர்களின் "லைட் ஆப் லைப்" திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு விநியோகமும் இங்கு இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர் .

# மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் பேருவளை விஜயம்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சீனன் கோட்டைக்கு அண்மையில் விஜயம் செய்தார். பேருவளை நகர சபை உறுப்பினர் சியாம் முனவ்வர் தலைமையில் கட்சி ஆதரவாளர்கள் அவரை சந்தித்து கலந்துரையாடினர். முஸ்லிம் காங்கிரஸ் சீனன்கோட்டை மத்திய குழு முக்கியஸ்தர் ஸலீம் பாரூக் உட்பட பலரும் இதன் போது சமுகமளித்திருந்தனர். உள்ளூராட்சித் தேர்தல் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. படம்: பேருவளை விசேட நிருபர்

# வட மத்திய மாகாண புதிய பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியேற்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்தின் புதிய பிரதி பொலிஸ் மா அதிபராக எம்.டி. ரஜித்த ஸ்ரீ தமிந்த அண்மையில் அநுராதபுரத்தில் அமைந்துள்ள வட மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் வைத்து தனது கடமையை பொறுப் பேற்றுக் கொண்டார்.

மத்துகம சி டபிள்யு கன்னங்கரா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், கொழும்பு மற்றும் களனி பல்கலை கழகங்களின் பட்டதாரியுமாவார்.

1999 ஆம் வருடம் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட இவர், களுத்துறை,மட்டக்களப்பு,கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உதவி பொலிஸ் அத்தியட்சகராகவும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு பிரதமர் பாதுகாப்பு பிரிவு ஆகியவற்றின் பிரதி பொலிஸ் மா அதிபராகவும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பிரதி பொலிஸ் மா அதிபராகவும், தென் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் பிரதி பொலிஸ் மா அதிபராகவும் இதற்கு முன் சேவையாற்றியுள்ளார்.

வட மத்திய மாகாணத்தின் புதிய பிரதி பொலிஸ் மா அதிபரை வரவேற்கும் நிகழ்வு கடந்த 09 அநுராதபுரம் தலைமையக பொலிஸ் காரியாலயத்தில் இடம் பெற்றது..

# இடமாற்றம் பெற்றுச் செல்லும் கிராம உத்தியோகத்தர் கௌரவிப்பு



**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நாச்சியாதீவு இலக்கம் 535 குசவை, பாண்டியங்குலம் ஆகிய பகுதிகளுக்கான கிராம உத்தியோகத்தராக 2016 செப்டம்பர் தொடக்கம் 2022 டிசம்பர் 01ஆம் திகதி வரை நீண்ட காலம் கடமை புரிந்து, பலரது அபிமானத்தையும் பெற்ற நிலையில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி தரங்கா பல்லிய குருவை கௌரவிக்கும் வைபவம் அண்மையில் நாச்சியாதீவு 535 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் நடை பெற்றது.

நாச்சியாதீவு பிரதேச செயலாளர் திரு. சாமிந்த தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் புதிதாக கடமை ஏற்றுள்ள கிராம உத்தியோகத்தர் திருமதி லக்சிகா செல்வடோர், 536 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் நந்தன, கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் லலித் செனவிரத்ன, பள்ளி பரிபாலன சபை தலைவர் தேசபந்து ஏ.ஆர்.எம்.தாரிக் உட்பட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.


# மேல் மாகாண சபை
# பொறியியல் பணியகம்

**நிர்மாணத்துறை வேலைகள், பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள், உசாத்துணைச் சேவைகளை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவான ஒப்பந்தக்காரர்களாக 2022/2023ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்து கொள்ளுல்**
**பதிவு செய்து கொள்ளும் காலத்தை நீடித்தல்**

2022.03.28 அன்று பிரசுரிக்கப்பட்ட தினமின டெயிலிநியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளின் அறிவித்தலின் பிரகாரம் மேற்படி சேவைகளிற்காக 2022/2023 ஆண்டிற்காகப் பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாத நிர்மாணத் துறை வேலைகள் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள், உசாத்துணைச் சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களிற்கு 2022/2023ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்து கொள்வதற்கு மீண்டும் இத்தால் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

(2022.03.28ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தலை https://eng.chiefsec.wp.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்)

அவ்வாறே 2022.03.28ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தலின் B வகுதியில் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான தகவுத்திறன்கள் மூலப்பிரமாணங்களின் கீழ் 1.5 பிரிவானது 'குறித்த தொழிற்றுறையினர் அல்லது நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைக் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் போதுமானதாகும்.' என திருத்தப்பட்டுள்ளது.

இதற்காக ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள், வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிற்கு 2023.01.17 முதல் 2023.02.16 வரை இதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படுவதுடன் வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 204 டென்சில் கொப்பேகடுவ மாவத்தையிலுள்ள மேல் மாகாண சபை கட்டிடத்தின் 05ஆம் மாடியிலுள் பொறியியலாளர் பணிமனையின் பெறுகைப் பிரிவில் மீளளிக்கப்படாத ரூபா 1500.00 இற்கான கட்டணத்தை காசாகச் செலுத்தி, விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை தொலைபேசி இல. 011-2092504ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் முத்திரையிடப்பட்ட ஒருறையில் சேர்த்து 2023.02.17 அன்று பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு முடியும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**மேல் மாகாண பொறியியல் பணியகம்,**
**05ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொ.பே. இல. 011-2092504**
**தொலைநகல் இல. 011-2092505**
**மின்னஞ்சல்: procurementuniteng@gmail.com**



# பெறுகை அறிவித்தல்
## களுத்துறை நகர சபை
## தனியார் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல்

களுத்துறை நகர சபையின் கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களைப் பாதுகாப்பதற்கு பின்வரும் பாதுகாப்பு உத்தியோகதர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- ஆறு கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஒரு நாளைக்கு)
- ஒரு பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஒரு நாளைக்கு)

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நிறுவனம் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.


- 2021ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க தேசிய ஆகக் குறைந்த சம்பளம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் நாளாந்த சாதாரண மொத்தச் செலவின் பிரகாரம் 12 மணித்தியால முறைமாற்று சேவைக்கு நாளாந்த சம்பளம் வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவனமாகவிருத்தல் / ஊழியர் சேமலாப நிதிக்கான பதிவைப் பெற்றிருத்தல்.
- பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக அரச பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திர உரிமைத்துவம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ்
- 06 மாதத்திற்கு மேற்பட்ட காலம் பாதுகாப்புச் சேவையை தொடர்ச்சியாக நடாத்திக்கொண்டு செல்லும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவிருத்தல்.

உரித்துடைய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை 1000.00 ரூபா ரொக்கப் பணமாக அல்லது காசோலை மூலம் தலைவர், களுத்துறை நகர சபைக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பெறுகைப் படிவங்களை 2023-01-17ஆம் திகதி முதல் 2023-01-31ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பெறுகைப் படிவங்களை களுத்துறை நகர சபை, களுத்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2023-02-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் ஒப்படைக்கலாம். பெறுகை ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 034-2222285, 034-2222275, 034-2222273 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**நகர சபை, களுத்துறை.**


# கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலை அங்குரார்ப்பணம்



**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

நாத்தாண்டிய, கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலையின் 2023 ம் ஆண்டுக்கான புதிய வகுப்புகளை ஆரம்பித்து வைக்கும் வைபவம் ஞாயிற்றுக்கிழமை (15 ) கொட்டராமுல்ல அஹதிய்யாப் பாடசாலையின் தலைவர் அல்ஹாஜ் ஏ. டபிள்யு . எம் . இல்யாஸ் தலைமையில் அல் ஹிரா முஸ்லிம் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது .

மினுவங்கொட நிலாமியா அரபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், சிலாபம் பிரதேசத்தின் சவராணை மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஹஸ்ஸான் ( நூரி ) இங்கு உரையாற்றினார். கொட்டராமுல்ல கல்வி அபிவிருத்தி குழுவின் தலைவரும் நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினருமான ஏ.எச். எம்.றில்வான், பிரதேச உலமாக்கள், அல் ஹிரா முஸ்லிம் பாடசாலையின் பிரதி அதிபர் எம். எச். எம். பஸ்ரி உட்பட மாணவர்களின் பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டனர்.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

107
டொயோட்டா கார்கள்
விற்பனைக்கு

1 7-9328 Toyota C orona 1987 Car, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 54 295 8 003243

117
வேன்கள்
விற்பனைக்கு

WP HC-1 346, Toyota town ac e, 1 999, கூடிய விலைக் கோரிக்கை க்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 54 295 8 003228

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

YI-3809 Bajaj, 2011, NW AAN-4240 Bajaj, 2013, SP YK-09 25 Bajaj, 2011, SP QS-354 0 Bajaj, 2009, WP AAW-3511, Bajaj-2015, ABJ-98 5 9 Bajaj 2015 T h reewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னா னஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 003510

வர்த்தகம்

207
வியாபார ஸ்தலம்
விற்பனைக்கு

பொ ா லன் னறு வ க துருவெ ல நகருக்கு மி கவும் அருகாமையி ல் அரிசி ஆலையொன்றாக பாவிப்பதற்கு, பொருத்தமான பாரிய கட்டிடமும் 1.5 வியாபாரம் செய்வத ற்கான காணியும் விற்பனைக்கு. எடைபாலம் மற்றும் KV 250 டிரான்ஸ்போமர் ஆகியனவும் உண்டு. நீடித்த கால உறுதி, குத்தகை உரிமம், விசாரணை செய்ய வும். கமிலஸ் 07778 49847 003456

வேலைவாய்ப்பு

308
வெற்றிடங்கள்
சந்தைப்படுத்தல்

புறக்கோட்டையில் அமைந்துள்ள GARMENT ACCESSORIES விற்பனை நிலையத்திற்கு SALES GIRLS தேவை. கொழும்புக்கு அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர். G.R.ACCESSORIES, 69, BANKSHALL STREET, COLOMBO - 11. PETTAH003151

Repeat Your Ad For Better Offers


# பெறுகை அறிவித்தல்

## வெளிற்றப்படாத பச்சை நூல் மற்றும் ரெயொன் நூல் கொள்வனவு

### மேல் மாகாண கைத்தொழில் திணைக்களம்

மேல் மாகாண, கைத்தொழில் திணைக்களத்திற்கு உரித்தான கைத்தரி நெசவுக் கைத்தொழில் நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகளிற்குத் தேவையான நூல் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் நூல் சுற்றுக்கள் மற்றும் அளவுகளின் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

| நூல்சுற்று | விபரம் | தேவையான அளவு (k) |
|---|---|---|
| **வெளிற்றப்படாத பச்சை நூல்** | | |
| 2/80 | வாரப்பட்ட கேஸ்சின்ஜ் மார்சரயிஸ் (CMSGM) | 15,000 |
| 2/30 | (1) காட்ட் (Ring Spun)<br>(2) காட்ட் (Open End Spun) | 10,000 |
| 16 | (1) காட்ட் (Ring Spun)<br>(2) காட்ட் (Open End Spun) | 8,000 |
| **ரெயொன் நூல்** | | |
| ரெயொன் நூல் | 125g (4500 யார்) | கொண் 10,000 |

- கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களை பச்சை நூல் கொள்வனவிற்காக ரூபா 3,500/- இற்கான மீளளிக்கப்படாத கட்டணமும், ரெயோன்நூல் கொள்வனவிற்காக ரூபா 1,000/- இற்கான மீளளிக்கப்படாத தொகை (ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக) செலுத்தி 2023.01.20 முதல் 2023.02.01 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை வார வேலை நாட்களில் கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் படிவங்கள் 2023.02.01 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், பெறுகைக் குழு, கைத்தொழில் திணைக்களம், (மே.மா) 03ஆம் மாடி, இல. 204 மேல் மாகாண சபை கட்டிடம் டென்சில் கொப்பே கடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு, உரியவாறு முத்திரையிட்டுப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அவ்வலுவலக பிரதிப் பணிப்பாளர் I இன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கைத்தொழில் திணைக்களம் (மே.மா)**
**இல. 204, 03ஆம் மாடி மேல் மாகாண சபை கட்டிடம்,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**011-2092591**

# பெறுகை அறிவித்தல்

## ஹபராதுவ பிரதேச சபை

## ஜோவீ பூங்காவிலுள்ள பிரதான கட்டிடத்தின் கூரையை புதுப்பித்தல்

### கேள்விகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்தினம்: 2023 பெப்ரவரி 07ஆம் திகதி

ஹபராதுவ பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் கருமத்திற்காக 2023 பெப்ரவரி 07 அன்று மு.ப. 10.00 வரை முத்திரையிட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினம் அதே நேரத்தில் அவ்வலுவலகத்தில் கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

| விபரம் | தேவையான பதிவு (CIDA) 2021.02.18ம் திகதி அரச நிதி சுற்றறிக்கை இல. 04/2016(iii) இன் 3.3 பிரிவு மற்றும் 2020.10.09 ஆம் திகதி அரச நிதி சுற்றறிக்கை இல. 03/2020இன் 3 பிரிவின் பிரகாரம் | கேள்விப் பிணையம் அல்லது காசு வைப்பு | கேள்வி வைப்புக்கான செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01. ஜோவீ பூங்காவிலுள்ள பிரதான கட்டிடத்தின் கூரையை புதுப்பித்தல் ஹபராதுவ பிரதேச சபை (SP/G/HPS/2023/001) | C5 அல்லது C6 மாத்திரம் (கட்டிடங்களிற்காக மாத்திரம்) | கேள்வி வைப்பு ரூபா 150,000.00 அல்லது காசாக வைப்பு ரூபா 75,000.00 | 2023.06.04ஆம் திகதி வரை | 3,000.00 |

02. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA)யில் கட்டிடங்களிற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள (C5 அல்லது C6) ஒப்பந்தக்காரர்களிற்கு இவ் ஒப்பந்தம் வழங்கப்படும்.
03. 2023.02.06 அன்று பி.ப. 2.00 வரை ஹபராதுவ பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கான கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.
04. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான முறைமையின் கீழ் மேற் கொள்ளப்படும் உத்தேச செயற்றிட்டத்தின் மொத்த உத்தேச செலவினம் ரூபா ஐம்பது மில்லின் இற்க குறைவான படியால் பிரதேச நிதி விருப்பு மற்றும் CIDA தரம் பிரகாரம் அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 04/2016(iii) இன் பிரகாரம் ஆகும். (Bidding will be conducted through National Competitive Bilding (NCB) Since the estimated value of work be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 million, regional Preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular no. 04/2016(iii)
05. பெறுகை தொடர்பான மேலதிக விபரங்களை வாரவேலை நாட்களில் பொதுவான அலுவலக வேலை நேரங்களில் ஹபராதுவ பிரதேச சபையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
06. அனைத்துக் கேள்விகளுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணையமொன்று அல்லது காசு வைப்பு ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணையமானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது, நிபந்தனைகளற்றதும் கோரப்பட்டதும் உடன் காசாகக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இப்பிணையமானது கேள்விப் படிவத்தின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் இருத்தல் வேண்டும். காசாக வைப்புச் செய்வதாயின் குறித்த தொகையை ஹபராதுவ பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
07. கேள்விகளை உள்ளடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் இரண்டு பிரதிகளாக தனித்தனி உறைகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்மென்பதுடன் அவற்றில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடுதல் வேண்டும். இறுதியாக அவற்றை ஒருறையில் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
08. கேள்விகளின் செல்லுபடிக்காலம் 90 நாட்கள் ஆகும்.
09. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2023.01.26 அன்று மு.ப. 10.00 இற்கு ஹபராதுவ பிரதேச சபை அலுவலகத்தில் நடை பெறும்.
10. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்.**
**பெறுகைக் குழு,**
**ஹபராதுவ பிரதேச சபை,**
**ஹபராதுவ.**

**தொ.பே. இல.: 091-2283302. 091-2283276**
**மின்னஞ்சல்: habaprasa@gmail.com**

2023.01.16

# இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

## பதவி வெற்றிட அறிவித்தல்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவானது குறைந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவி வழங்குவதனை அடிப்படை நோக்காகக் கொண்டு 1978 ம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்ட உதவி சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

**பதவி: சட்ட உத்தியோகத்தர் (வெற்றிடங்கள் 10)**

மேல் மாகாணம் -04, தென் மாகாணம் -02, கிழக்கு மாகாணம் -01, வடமத்திய மாகாணம் -02 ஊவா மாகாணம் - 01

**தகைமைகள்**

1. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் மூன்று (03) வருட செயற்பாட்டு தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 2023.01.01 ஆம் திகதிக்கு வயது 28 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. தனக்குரிய தொழில் பொறுப்பை திறமையாக நிறைவேற்ற வேண்டியதோடு இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

**தொழிலின் பொறுப்பு**
சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஆணைக்குழுவின் மூலம் சட்ட உத்தியோகத்தருக்காக ஒப்படைக்கப்படும் சகல கடமைகளையும் நிறைவேற்றுதல்.

**சம்பள அளவுத் திட்டம்**
முகாமைத்துவ சேவை சுற்று நிருபத்திற்கு அமைய MM 1-1 Rs. 53,175/= 10x1375, 15x1910 = 95,575/= + முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் Rs. 53,175/= 10x1375, அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF.

நேர்முகப் பரீட்சையின் பின்னர் இணைத்துக் கொள்ளப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் குறிப்பிட்ட காலத்தில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை "2023 ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு" முன்னர் கீழ் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் தாங்களினால் விண்ணப்பிக்கப்படும் பதவியைக் குறிப்பிடவும்.

**முகவரி:**

**தவிசாளர்,**
**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,**
**மேல் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, புதுக்கடை, கொழும்பு - 12**


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.


# இலங்கை துறைமுக அதிகார சபை

### துறைமுக, கப்பற்துறை மற்றும் வீமானசேவைகள் அமைச்சு

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## இலங்கை, காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள் முனையம் ஒன்றின் நிர்மாணம் மற்றும் இயக்கம் என்பவற்றுக்கு ஒரு முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கு

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

### மூடப்படும் திகதியை நீடித்தல்

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் (CANC) இனால் 2022 டிசம்பர் 18 மற்றும் 21ம் திகதிகளில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படும் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோளின் (RFP) மூடிப்படும் திகதி இத்தால் நீடிக்கப்படுகிறது.

| திட்டத்தின் பெயர் | ஆரம்ப மூடப்படும் திகதி | புதிய மூடப்படும் திகதி |
|---|---|---|
| இலங்கை, காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள், முனையம் ஒன்றின் நிர்மாணம் மற்றும் இயக்கம் என்பவற்றிக்கு ஒரு முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் | 2023 ஜனவரி 17 | 2023 ஜனவரி 31 |

2. ஒவ்வொரு முன்மொழிவுகளுடனும் 4,000.00 US$ அல்லது 1.5 மில்லியன் தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. இரண்டு கடித உறைகளில் உள்ளிட்ட முன்மொழிவுகளை தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு என முகவரியிட்டு 'செயலாளர், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு, இலங்கை' எனும் முகவரிக்கு 2023.01.31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் அதேயிடத்தில் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும் (பி.ப. 2.15)

**தலைவர்,**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு (CANC),**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01,**
**இலங்கை.**

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுஅரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2023/ 2024 ஆண்டுகளின் ஒரு வருட காலப்பகுதிக்கு தெற்கு திசை அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பிற்காக (கொடகமவிலிருந்து மத்தள வரையும்) அதிவேக நெடுஞ்சாலை இயக்கங்கள்,பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான அழைப்பு

## CONTRACT No.: RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/04, 05,06 & 07

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் அதிவேக நெடுஞ்சாலை இயக்கங்கள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மேலேயுள்ள பெறுகைக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. மேலேயுள்ள பெறுகையின் கீழான வழங்கலின் மொத்த தேவைப்பாடானது பின்வருமாறு:

| Vehicle | Quantity | Dry Lease/Wet Lease | Contract No. | Amount of Bid Security |
|---|---|---|---|---|
| Crew Cab | 9 Nos. | Dry Lease | RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/04 | Rs.20,000 for one Crew Cab |
| Car | 6 Nos. | Dry Lease | RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/05 | Rs.20,000 for one Car |
| Van | 1 No. | Dry Lease | RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/06 | Rs.20,000 |
| Water Bowser (12,000L or more) | 1 No. | Wet Lease | RDA/EOM&M/Beli/Pro/Bid/2023/07 | Rs.45,000 |

3. மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறு ஒவ்வொரு வாகனத்திற்குமான விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருப்பதுடன் இவ்விலைமனுப்பிணையானது 2023.06.06 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப்பிணையானது பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, ''மகனேகும மஹாமெதுர'', 216 ஆம் இலக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற உத்தரவாதப் பாங்கில் அமைந்திருத்தலும் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
4. பெசேவ மற்றும் SSCL ஆகியன அடங்கலாக 1,200 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், 2023.02.06 ஆம் திகதியன்று வரையும் வர்த்தக விடுமுறைகள் நீங்கலான வாரநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (**EOM&M**) பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் அல்லது பெலியத்த, கஹவத்த, வீதி அபிவிருத்தி அதிகார சபை (**EOM&M**) பிரிவின் மேலதிக பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆவண கட்டணத்திற்கான பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் அலுவலக நேரங்களில் மேலேயுள்ள அலுவலகங்களில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலதிக பணிப்பாளர் **(EOM&M Division),** வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹவத்த, பெலியத்த என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2023.02.07 ஆம் திகதியன்று மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் பி.ப.2.30 மணிக்கு உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
6. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெலியத்த, கஹாவத்த, வீதி அபிவிருத்தி அதிகார சபை, EOM&M பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 047-2251892, 0766265264, 0763179185 தொலைநகல்: 047-2251891. மின்னஞ்சல்: **prcbeleom.rda@gmail.com**).

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின்**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**2023 சனவரி 17 ஆம் திகதியன்று**

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

## கைத்தொழில் அமைச்சு

**அப்புறப்படுத்தப்பட்ட பொருட்பட்டியல் பொருட்கள், பொருட்பட்டியல் அல்லாத பொருட்கள், பாவிக்கமுடியாத அசல் உதிரிப்பாகங்கள் சகிதமான பாவிக்கமுடியாத வாகனங்கள், பாவிக்கமுடியாத இயந்திராதிகள் மற்றும் அசல் உதிரிப்பாகங்களின் விற்பனை**

# விலைக்கோரல் அறிவித்தல்

**விலைக்கோரல் இல. LMSL/SUP/DPC/20/2022**

1. போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் பின்வரும் பொருட்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் (LMSL) தலைவர் அழைக்கின்றார்.

2. விற்பனைக்குள்ள பொருட்கள் பின்வருமாறாகும்:

**(01) FRONT - END WHEEL LOADERS**

| தொ. இல. | Plant No. | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | PL - 16 | Furukawa FL-230 | 1995 | 01 | 5,000.00 |
| 02 | PL - 17 | Furukawa FL-230 | 1995 | 01 | 5,000.00 |
| 03 | PL - 21 | JCB | 2010 | 01 | 50,000.00 |
| 04 | PL - 22 | JCB | 2010 | 01 | 50,000.00 |
| 05 | PL - 23 | JCB | 2010 | 01 | 50,000.00 |

**(02) லொறி**

| தொ. இல. | பதிவிலக்கம் | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | 26-6392 | TATA 1210 | 1979 | 01 | 5,000.00 |

**(03) மின் பிறப்பாக்கி**

| தொ. இல. | பதிவிலக்கம் | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | - | Caterpillar 750kw | 1979 | 01 | 5,000.00 |

**(04) கனரக இயந்திராதிகள்**

| தொ. இல. | பதிவிலக்கம் | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | 36-2796 | Ford Tractor | 1977 | 01 | 5,000.00 |
| 02 | 36-2797 | -do- | 1977 | 01 | 5,000.00 |

**(05) DRAGLINE EXCAVATOR**

| தொ. இல. | Plant No. | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | Ex-11 | Priest man Tiger Engine No 83180 | - | 01 | 5,000.00 |

**(06) இயந்திரவியல் நிறுக்கும் பாலத் தராசு (MECHANICAL TYPE WEIGHBRIDGE)**

| தொ. இல. | பதிவிலக்கம் | உற்பத்தி மற்றும் மொடல் | கொள்வனவு வருடம் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | - | Mechanical Type Weighbridge | - | 01 | 1,000.00 |

**(07) பாவிக்கப்படாத அசல் உதிரிப்பாகங்கள்**

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|
| 01 | Pay Loader Spares | 01 Lot | 1,000.00 |
| 02 | MR-Motorola Spares | 01 Lot | 1,000.00 |

**(08) பாவித்த உலர் மின்கலன்கள் (USE DRY LED CELL BATTERIES)**

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|
| 01 | 12V 200 Amps | 15 | எல்லா உருப்படிகளுக்கும் 5,000.00 |
| 02 | 12V 150 Amps | 02 | |
| 03 | 12V 120 Amps | 08 | |
| 04 | 12V 110 Amps | 03 | |
| 05 | 12V 100 Amps | 03 | |
| 06 | 12V 90 Amps | 22 | |
| 07 | 12V 70 Amps | 02 | |
| 08 | 12V 65 Amps | 09 | |

**(09) பாவித்த டயர்கள்**

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|
| 01 | 12.4 x 28 | 03 Nos | எல்லா உருப்படிகளுக்கும் 5,000.00 |
| 02 | 16.9 x 28 | 02 Nos | |
| 03 | 12.5 x 18 | 01 Nos | |
| 04 | 10 x 16.5 | 05 Nos | |
| 05 | 1000 x 20 | 02 Nos | |
| 06 | 900 x 20 | 01 Nos | |
| 07 | 265 x 18 | 16 Nos | |
| 08 | 265 x 17 | 08 Nos | |
| 09 | 265 x 16 | 16 Nos | |
| 10 | 205 x 15 | 04 Nos | |
| 11 | 215 x 15 | 06 Nos | |
| 12 | 750 x 15 | 01 Nos | |
| 13 | 185 x 14 | 14 Nos | |
| 14 | 600 x 16 | 01 Nos | |

**(10) கழிக்கப்பட்ட பொருட்கள்**

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | குறிப்பு | விலைமனு பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Scrap Iron & Cast Iron | 150 | MT | 30,000.00 |
| 02 | Copper | 1500 | KGS | 10,000.00 |
| 03 | Used Engine Oil | 2000 | LTR | 2,000.00 |
| 04 | Unserviceable Old Tool and Parts (Miscellaneous) | 01 | LOT | 1,000.00 |

3. விலைக்கோரல் பிணை முறி ஏற்புடையதாகும் என்பதுடன் விபரங்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளன.

4. மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா ஆவணக் கட்டணத்தை 2023-01-17ஆம் திகதி முதல் 2023-02-06ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் ராஜகிரிய, இல. 341/21, சரண மாவத்தை, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் வழங்கல் பிரிவு மற்றும் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் புல்மோட்டை பொறித்தொகுதி வழங்கல் பிரிவில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.

5. சகல பொருட்களும் ''இருக்கும் அதே நிலையில்'' விற்பனை செய்யப்படும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் முன்னர் பொருட்கள் மற்றும் உரித்துடைய ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர். சகல பொருட்களையும் புல்மோட்டை, IRZ பொறித்தொகுதி, பிரதிப் பொது முகாமையாளரின் ஒப்புதலுடன் 2023-01-17ஆம் திகதி முதல் 2023-02-06ஆம் திகதி மு.ப. 8.00 மணி மற்றும் பி.ப. 4.00 மணிக்கிடையில் புல்மோட்டை, IRZ பொறித்தொகுதியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை தலைவர், இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட், இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு 2023-02-07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது LMSL தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. மேலதிக தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும்,

வழங்கல் முகாமையாளர் - 0112883972 (நேரடி), 0112883951/2 நீடிப்பு 205
பிரதிப் பொது முகாமையாளர் (P & O) - 0262256131/2

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்,**
**இல.341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023

**(எஸ்கீசி செயற்படுத்தும் மற்றும் ஏலவிற்பனை நடத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக)**

தேசிய சேமிப்பு வங்கி சார்பாக எஸ்கீசி செயற்படுத்தல் (நீக்குதல் உட்பட) மற்றும் ஏலவிற்பனை நடத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் சார்பாக சேவை வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் அனுபவமுள்ள நபர்கள்/ நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகவுத்திறன்:-**

1. புகழ்பெற்ற நிதி நிறுவனம் சார்பாக இதற்குச் சமமான விடயங்களை நிறைவேற்றிக் கொடுத்தல் சார்பாக குறைந்தபட்சம் 20 வருட அனுபவம் விண்ணப்பதாரிகளிடம் இருத்தல் வேண்டும்.
2. தேவையான ஆவணங்களை தயாரித்தல், குறித்த அறிவித்தல்களை பகிரங்கப்படுத்தல் மற்றும் நீதிமன்ற செயற்குழுவுடன் இணைப்பிணை நிறைவேற்றுதல் போன்ற வேலைகள் உற்பட குறித்த முழுமையான செயற்பாடுகளும் சுயாதீனமாக மற்றும் நேர்மையாகவும், குறைந்தபட்ச மதிப்பீட்டின் கீழும் நிறைவேற்றும் புலமையுடனான நிபுணத்துவம் மற்றும் அனுபவம் தம்மிடம் உள்ளதாக விண்ணப்பதாரி நிரூபித்துக் காட்டுதல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி தனது சேவைகள் மற்றும் அங்கு தமது அனுபவம் பற்றி புகழ்பெற்ற நிதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரண்டு பரிந்துரைகளையாவது விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு கொண்டு வந்து ஒப்படைப்பதற்கு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பவும் முடியும்.

**தேசிய சேமிப்பு வங்கி**
**சட்டப் பிரிவு**
**இல. 255, காலி வீதி, கொழும்பு -03.**

## வத்தளை மாபோலை நகர சபை

# பெறுகை அறிவித்தல்

வத்தளை மாபோலை நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கடை அறைகள் வியாபாரத்திற்காக குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023.01.17 முதல் 2023.02.08 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விகளை திறத்தல் 2023.02.08 மு.ப. 10.00 இற்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

கேள்வி விண்ணப்பங்களை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்துடன் அரச வரித் தொகையை செலுத்திய பின்னர் 2023.02.07 பி.ப. 3.00 வரை நகர சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

➢ இல. 15இல் குறிப்பிடப்படும் சொத்துக்களுக்கான மீளளிக்கப்படாத முன் தொகையாக ரூ. 750,000/- தொகையை நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்பு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கப்படும் கேள்வியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

எந்த கேள்வியையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வத்தளை மாபோலை நகர சபைக்கு உரியது.

**தொடர்புகள்:** **தொ.பே. இல. 011-2932275**
**வருமான பரிசோதகர்**

**அட்டவணை**

| தொடர் இல. | கடை அறை அமைத்துள்ள இடம் | மாதாந்த குறைந்த பட்ச கேள்வி ரூ | கேள்வி வைப்புத் தொகை மீளளிக்கப் படும் ரூ. | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப் படாத ரூ. | காலம் |
|---|---|---|---|---|---|
| ஹெந்தளை வர்த்தக கட்டிடத் தொகுதி | | | | | |
| 01 | மாட்டிறைச்சிக் கடை இல.01 | 55,000.00 | 165,000.00 | 2500.00 | 2023.04.01-2023.12.31 |
| 02 | மீன்கடை இல. 02 | 19,000.00 | 57,000.00 | 2500.00 | 2023.04.01-2023.12.31 |
| 03 | கோழியிறைச்சிக் கடை இல. 03 | 40,000.00 | 12,000.00 | 2500.00 | 2023.04.01-2023.12.31 |
| 04 | பன்றியிறைச்சிக் கூடம் | 10,200.00 | 30,600.00 | 2000.00 | 2023.04.01-2023.12.31 |
| 05 | மலசலகூட அமைப்பு | 2000.00 | 6000.00 | 1000.00 | 2023.04.01-2023.012.31 |
| மாபோலை வர்த்தக கட்டிடத்தொகுதி | | | | | |
| 06 | மாட்டிறைச்சிக் கடை இல.01 | 65,000.00 | 195,000.00 | 2500.00 | 2023.04.01-2023.12.31 |
| 07 | மாட்டிறைச்சிக் கடை இல.02 | 66,000.00 | 198,000.00 | 2500.00 | 2023.04.01-2-23.12.31 |
| 08 | மரக்கறிக் கடை இல.05 | 12,000.00 | 36,000.00 | 2000.00 | 2023.04.01-2-23.12.31 |
| 09 | இல. 10 கடை அறை | 8,900.00 | 26,700.00 | 1000.00 | 2023.04.01 முதல் 15 வருடங்களுக்காக (மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில்) |
| 10 | இல. 19 கடை அறை | 6,700.00 | 20,100.00 | 1000.00 | 2023.04.01 முதல் 15 வருடங்களுக்காக (மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில்) |
| 11 | இல. 21 கடை அறை | 6,700.00 | 20,100.00 | 1000.00 | 2023.04.01 முதல் 15 வருடங்களுக்காக (மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில்) |
| 12 | இல. 27 கடை அறை | 9,400.00 | 28,200.00 | 1000.00 | 2023.04.01 முதல் 15 வருடங்களுக்காக (மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில்) |
| 13 | இல. 675/B/07 கடை அறை | 12,200.00 | 36,600.00 | 1000.00 | 2023.04.01 முதல் 15 வருடங்களுக்காக (மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில்) |
| வத்தளை வர்த்தக கட்டிடத் தொகுதி | | | | | |
| 14 | மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 115,000.00 | 690,000.00 | 2,500.00 | 2023.04.01-2023.12.31 |
| 15 | எவரிவத்த தபால் அலுவலகம் மேல் மாடியைக் குத்தகைக்கு விடல் | 8500.00 | 25,500.00 | 2,500.00 | 03 வருடத்திற்கு ஒரு முறை புதிய மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்த காலத்தை நீடிக்கும் அடிப்படையில் |

**டபிள்யூ. மார்க் ஏ. எப். குணசேக்கர,**
**தலைவர்,**
**வத்தளை மாபோலை நகர சபை.**

**வத்தளை மாபோலை நகரசபை.**
2023.01.16

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.